உ



கடவுள் துணை



வித்வசிரோன்மணியாகிய

புகழேந்திப்புலவர்

அருளிச்செய்த

அல்லியரசாணிமாலை.

இஃது

மயிலை

சுப்பிரமணிய சுவாமிகளால்

பார்வையிடப்பட்டு

சென்னை - இட்டா

நாராயணசாமிநாயுடு அவர்களது

ஸ்ரீபத்மநாபவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1893 ௵.

உ

கடவுள் துணை.

அல்லியரசாணிமாலை.

விநாயகர் துதி.

கலிவிருத்தம்.

அடாதமூர் முலையாள் திருவாலவாய்த்
தடாதகைப்பிராட் டியின்தன்னருள்
கொடாநின்றவல்லிக் கோதைகதைசொல்லக்
கடகளிற்றினைக் கைதொழுதேத்துவாம்.

வெண்செந்துறை.

சித்திவிநாயகர்தன் செம்பொற்பதம்போற்றி
முத்தியளிக்கவல்ல முக்கண்ணன்றனைபோற்றி
அஞ்ஞானநீங்கிவிடும அங்குசநின்றாள்போற்றி
சீராருமல்லிகதை செந்தமிழால்யான்பாட
ஏராருநாவினிலே இசைந்தருளாயைங்கரனே.

சுப்பிரமணியர் துதி.

சுத்தமெய்ஞ்ஞானகர்த்தர் அய்யவடிபோற்றி
பத்தர்தமக்குவரம் பாலிப்போற்றாள்போற்றி
ஆயிரமகிவற் கருள்செய்வோன்றாள்போற்றி
தில்லைசமயனையுஞ் சிருஷ்டித்ததாள்போற்றி
சூரபத்மனசிரந் துணித்தபதம்போற்றி
தாரகயமுகனைச் சேதித்ததாள்போற்றி
...வ்முகன்றனக்கை வாதித்ததாள்போற்றி
...வ்முகன்றனக்கைப் பாழ்செய்ததாள்போற்றி
கந்தா கடம்பா கதிர்வேலா இக்கதைக்குச்
சிந்தாகுலந்தீரச் செய்திடுவாய்கர்த்தாவே.

சரஸ்வதி துதி.

காதாருங்கூந்தல்விழுந் தங்கப்பதம்போற்றி
ஆதாரமுலைவாணி துங்கப்பதம்போற்றி
...ன்னுருங்கலைமாதின் துணையடிகளைப்போற்றி
...ன்னுசரன்வதினா மறையடிகளைப்போற்றி
அல்லிகதையுரைக்க அருள்புரிவாய்மாதாவே
...வல்லிக்கொடியனைய வல்லகாதைக்குகோதாவோ
...ந்தசுபன்மனதிற் கலந்தவனேநீயென்று
...ந்தரமலர்ந்து செழுந்துமய்யா இக்கதையை

விஷ்ணு துதி.

கூறுந்திருமாலின் கோகனகத்தாள்போற்றி
வீறுமுலகளந்த மெய்யன்பதம்போற்றி
பஞ்சவர்க்குத்தூதுசென்ற பங்கயத்தாள்போற்றி
எக்கலடையாத இணையடிகளேபோற்றி
இந்தக்கதைதனக்கு எம்பெருமாளேகீரும்
சந்ததமும்வந்துவரந் தந்தளிக்கக்கண்பாரும்

நாட்டுச்சிறப்பு.

தென்பெருகுஞ்சோலை தென்னவளநாடு
கனியுதிருஞ்சோலை கனமதுரைநன்னாடு
வடகாஞ்சிமுதலிராகும் வடமதுரைபட்டணமாம்
தென்காஞ்சிமுதலிராகுந் தென்மதுரைப்பட்டணமாம்
வாழைவடக்கினும் வான்சமுத்ரதெற்கினும
கரும்புமிளநீரும் கனைதிறந்துமடைபாயும்
கட்டிக்கலங்காணும் கதிருழக்குநெற்காணும்
அரிதாளறுக்குவர மறுதாள்பயிராகும்
ஆறுகாலின்கீழே ஐங்கலந்தேனைகூண்டுகட்டும்
யானைகட்டத்தாநும் வானமட்டும்போராகும்
மாடுகட்டிபபோர்படித்தால் மாளாதுசெந்நெலென்று
யானைகட்டிப்போரடிக்கும் அழகானதென்மதுரை
தானைகத்தானவளர்ந்து தழைத்தோங்குந்தென்மதுரை
சோலைமலருடைய சொக்கர்கிருபையினால்
அங்கயற்கண்மீனாட்சி அம்மனருளாலே
மாதமொன்றுமும்மாரி வருஷிக்குந்தென்மதுரை
பஞ்சைபனாதி பரதேசிகிடையாது
பஞ்சைகிடையாது பாண்டிவளநாட்டில்
கருப்புகிடையாது கனத்தகொருமதுரையிலே
அங்காடிகூடையை அதிரவிலைகூறுங்கள
ஏழைபரதேசி இல்லறங்குடிவாழ்க்கை
தழைத்தோங்கிவாழ்வார்கள் சங்கரன்கிருபையினால்
எங்கிருந்து ஏழைபரதேசிகளும்
அடிப்பார்பரிசனங்கள அந்தமதுரையிலே
மதுரையிலடுத்தவர்கள் வாழ்வாகப்போற்றிவார்
நீதிமனுமுறைகள் நெறிதவறாமன்னவனும
செங்கோல்பிடித்தாளும் சித்திராங்கதபாண்டியனும்
மகுடமுடிசூடும் மன்னன்சிங்காதனத்தில்
தங்கமுடிசூடித் தரணிபதியாண்டிருந்தான்
சொக்கர்வலுவுமுண்டு துரைராசபாண்டியற்கு
மீனாட்சிவலுமையினால் மேன்மையுடனாண்டிருந்தான்
ஆறிலொருகடமை அரசனவன்வாங்குவது

சக்கரசெலுத்தியே சரணிதனையாண்டிருந்தான்
சொக்கர்திருவிழாவைச் சோராமற்செய்திடுவார்
ஐயர்தன்திருவிழா ஆனந்தமாய்நடக்கும்
உலகந்தழைக்கவே யுத்தமனாண்டிருந்தான்
தாழ்வுகளில்லாமற் றழைக்கவேவாழ்ந்திருந்தான்
அப்படியாய்வாழ்ந்து அரசாளுமக்காலையிலே

சோழமகாராஜன்வறுமைஅல்லதுசிறுமை

சோழராஜன்தன்னாட்டில் சொர்ணகிரிபட்டணத்தில்
மழைகளிடையாது மன்னனரசாட்சியத்தில
தூறலிடையாது சோழனதுசீமையிலே
பயிர்கள்விளையாது பாலைகள்காடாது
குடிக்கசலங்கிட்டாது குருவிகள்நாடாது
காய்த்தமரங்களெல்லாங் கனிகள்கிடையாது
தீய்ந்தபயிர்களெல்லாஞ் சொல்லமுடியாது
ஏரிகுளங்கழனி இறைக்கசலங்கிட்டாது
பூமிதனிற்புல்லும் பூண்டுகளிடையாது
சருகுபோலுலர்ந்ததுவே தனிச்சோழன்பட்டணத்தில்
அன்னமிடையாது அன்பானசீமையிலே
சோறுகிடையாது சோழனதுசீமையிலே
எல்லோரும்பரதேசி ஏழைகளாய்ப்போனார்கள்
பெண்டுபிள்ளைகளை புருடசனங்களெல்லாம்
இனியிருந்தாலிவ்விடத்தில் இருந்துமடிவோமென்று
சொல்லாமலோடுகின்றார் சோழராஜன்சீமைவிட்டு
வலசைவாங்கிப்போனார்கள் மன்னர்பரிசனங்கள்
குடிவலசைவாங்கினார் குடித்தனக்காரரெல்லாம்
அண்டிபிழைக்கவென்று அநேகருமோடிவிட்டார்
வந்துமிகச்சேர்ந்தார்கள் மதுரைவளநாட்டில்
பாண்டியன்தேசத்திற் பரிசனங்கள்வந்தடுத்தார்
அப்போதுசோழன் அவனுடையபட்டணங்கள்
பாழடைந்துபோயிறகே பரிசனங்களில்லாமற
சோழனதுசீமையிலே துக்கமேயடைந்தனவே
பன்னிரண்டுதன்வருடம் பாரில்மழையில்லாமல
மாடுகளிடையாது மனிதருங்கிடையாது
நெல்கதிருங்கிட்டாது தரித்திரமேபெரிதாச்சு
என்னசெய்வேனென்றுதான் எண்ணமிட்டான்சோழனவன்
வாடிமனந்தளர்ந்தான் வாடும்பயிரதுபோல்
செடியின்கீழ்புல்லதுபோல் செழிக்கதி முகங்கள்
கனாகிலத்துபுல்லதுபோற் கருகுநிறங்குலைந்தான்
எண்ணறுமண்ணியல் வேந்தமனந்தளர்ந்து
ஆரையடுத்தேகோ அபிப்பிராயஞ்செய்தோமே

கூடவேகுறைந்தோகாரியோ குறைமறைக்கவிட்டோமோ
பஞ்சபனைகள்ளைப் பறந் டிகக்கொட்டினமோ
ஆக்கணர்வேதியர்க்கு அபசாரஞ்செய்தோமோ
தெய்வத்தின்செயலோ திருவனத்தின்சோதனையோ
ஆருமுப்பிப்பாவம் அனுப்பியெழுதிக்கோவம
எவரையதிப்பாய இக்குறையைத்தீர்க்கிறவோம
தேசமும்பாழாச்சு சேனைகளெல்லாமபரிபோச்சு
அன்னைவந்தும்பெயருத்தகா ரணிமதுரைப்பாண்டியனை
பாண்டியனதேசம் பகைதீவடைந்ததுகாண்
சொக்கர்திருவையினுள் சுகமாயிருந்ததென்மதுரை
தெய்வச்செயலலவோ சீர்பெறுவன்பாண்டியனும்
காமுவருடைய நாதாயுத்தாள்பணிந்து
பாண்டியனுமவியாள் பகவானைநாம்வணங்கி
சொக்கமீனாட்சியாரின் திருவடியைநான்வணங்கி
பாண்டியனைக்கொண்டு பகவானைநாமணங்கி
ஜெபாகிருபையினா லதிர்ஷ்டங்கள்பெறவேணும்
இக்காவியனைவென்றும இதைவிடவேறுண்டோ
மகாமேகமாகவந்திறங்கல் மழைகுதுக்குறையுமுண்டோ
தழைத்திராகுதிசைமயிவைத்து தரணிபதிபெருக்கு
மதுராகநடப்பாகவென்று மன்னவனெழுந்திருந்து
சிவனிக்கிருசெய்யவே தென்மதுரைபாண்டியனை
கானகப்பட்டணமிட்டான் இடருகளைத்தொலைக்க
கொஞ்சகுஞ்சருசேனைகளைக் கூட்டத்துணையாக்கி
பொன்னரொமுடிதுலங்க பூஷணங்களைசோதியனே
வாருக்கடகமின்ன வச்சிரமணிமாலைதுலங்க
தூவைமின்மேலேறி புறப்பட்டான்சோழமன்னன்

சோழமகாராஜன் பாண்டியனைக்காணுகிறது.

பாண்டியன்தேசத்திற் பட்சமுடன்வாரானே
வெகுதூரமாய்கடந்து விருமபிடப்பட்டு
வென்னதூரமயடைந்து தென்மதுரைவந்துசேர்ந்தார்
மதுரையனகாட்டில் வந்துவிட்டான்சோழனவன
கோட்டைக்குள்ளேநுழைந்தக் கொற்றவனசோழனவன்
அதுவார்களொழுப்போய சொன்னார்களபாண்டியற்கு
சந்தோஷங்கொண்டு தனித்துவர பாண்டியனும்
வரசியேல்லுவென்று மன்னவனகொலுவமர்ந்தான்
அப்போதுதானவந்து அரிகளையிட்டானசோழனுக்கு
கொலுமகமைக்கிழியல்லோ கொற்றவனுக்கனடந்து
பாண்டியனைக்கண்டு பரிவுடனேநின்றுவிட்டான்
பெண்டானிட்டசோழனைச்சிநேகம்பாண்டியனும்

திடுக்கிட்டெழுந்திருந்து சிங்காதனமேடை விட்டு
கூடவேகையெடுத்துக் கும்பிட்டான் பாண்டியனு
கட்டித்தழுவி கடாக்ஷணந்தெசய்து
கூடிவந்துசொலுமுகத்தில கூடவுபசாரணைத்தான்
இட்டசிங்காதனத்தில் இருந்தானேசோழராஜன்
இனிகிதன்முகம்பார்த்து சொல்லுகிறான்பாண்டியனும்
எங்கேவந்தீரென்னசெய்தி என்னுடையவுயிர்சோழா
அலசாமாய்வந்ததென்ன ஆள்கள்படையில்லாமல்
வேர்வைபொழிய வேற்றுமுகமானதென்ன
சிந்தைகலங்கி இருமுகமுங்காண்வாட
பூமாலைகாணசசல பொன்மகுடந்தான்கருக
அழகுகள்தான்மாறி அனலிலிட்ட மெழுகதுபோல்
உருமாறிவந்ததென்ன வுணர்வுடையமன்னவரே
எத்தனுக்குக்கான்தெரிய இயம்பிடுங்காணென்றுரைக்க

சோழராஜன் பாண்டியனிடத்திற்சொல்வது

அவ்வார்த்தைதான்கேட்டு அரசானசோழனவன்
தனக்குள்ளவருத்தத்தைச் சாங்கமாய்ச்சொல்லுகிறான்
பன்னிரண்டுவருடம் பாரில்மழையில்லாமல்
தவிக்கிறதேயுலகம் தாங்கமுடியவில்லை
திருவிக்கமாட்டாமல் நிலைக்காமலோடிவிட்டார்
கருகிறதேபூமியெல்லாங் காமித்தோராச்சியங்கள்
தாளமுடியவில்லை கனிமதுரைபாண்டியனே
நானிளைத்துப்போனல் நன்மையேயுக்குனக்கு
உம்முடையராச்சியத்தா லொருகுறைவுமில்லாமல்
தாழ்வுகளில்லாமல் சனங்கள்தான்தழைக்க
தேசஞ்செழிக்கச் சிறப்புடனேநீர்வாழ்க
எளியவன்போலேநான் இந்தச்சிறுமைபட
பார்க்கமனம்வந்ததோ பாராளும்பாண்டியனே
என்தேசம்தான்செழிக்க என்சனங்களீடேற
அவ்வளவுவசனி அனுக்கிரகம்நீர்செய்தால்
நன்றிமறப்பேனோ நானுள்ளநாள்வரைக்கும்
சகாயம்மறப்பேனோ சந்திராதித்தருள்ளளவும்
உதவிமறப்பேனோ ஊழியுள்ளநாளவரைக்கும்
இந்தசகாயமதை எப்போதும்நான்மறவேன்
சஞ்சலந்தீரவைப்பாய் கனிமதுரைபாண்டியரே
அவ்வசனங்கேட்டு அழகுள்ளபாண்டியனும்
சோழன்முகம்நோக்கிச் சொல்லுவானொருவசனம்
என்னாலேயாகுமோ இவ்வுலகந்தான்தழைக்க
நம்மாலேயாவதுண்டோ நாடுகள்தழைத்தோங்க
உன்னாலுமென்னாலு முலசந்தழைக்குமோதான்

தேவாதிதேவர் தியிவந்தாள் காணிருந்தான்
நாசாதுசயவு நமக்குத்தானிருந்ததென்றால்
சொக்கராதுதயவால் தொல்லுலகந்தானழைக்கும்
அவருடையசெயலெல்லா லரசனவாவதுண்டோ
தெரியாதோவுந்தனுக்குத் தெளிவறிந்தசோழமன்னா
நாதயாலென்னுடைய நாடுதழைத்ததென்றான்
அவ்வசனங்கேட்டு அருஞ்சோழனேதுரைப்பான்
உமதுதயவாலே உரிமைபடவெந்தனுக்கு
நாகருக்குச்சொல்லித் தேசஞ்செழிக்கவையும்
சொக்கருக்குச்சொல்லி நாடுதழைக்கவையும்
என்றுமிகவேண்டினான் இராஜனந்தபாண்டியனே
அப்படியேநல்லதென்று ஆனசொரு பாண்டியனும்
வந்ததொருசோழனுக்கு வருந்திமிகவிருந்துசெய்து

பாண்டியனுஞ்சோழனுஞ் சொக்கரிடம்வந்து கண்டது.

இருவருங்கூடி ஈசுரதாலயத்தில்
சொக்கநாதர்கோவிலுக்குத் தரிசமுடன்வந்தார்கள்
ஈசுரசந்நிதிக்கு நலமுடனேவந்தார்கள்
சுவாமியைக்கண்டு தொழுதடிகளைப்பணிந்தார்
சாஷ்டாங்கதெண்டன் சரணமென்றடிபணிந்தார்
இருவருமேயடிபணிந்து ஈசரைத்தோத்தரித்தார்
தும்பைமலர்சூடுகின்ற சொக்கரைத்தோத்தரித்தார்
ஆலவிடமுண்ட ஐயரைத்தோத்தரித்தார்
நஞ்சையமுதுண்ட நாதரைத்தோத்தரித்தார்
இடறுகளைநீக்கிவிடும் ஈசனேசரணமென்றார்
துன்பத்தைநீக்கிவிடுஞ் சொக்கரேசரணமென்றார்
ஏழைமுகம்பாருமையா ஈசனேசரணமென்றார்
அப்போதுசொக்கலிங்கர் அந்தமொழிகேட்டு

சொக்கலிங்கர்சொல்வது.

குஞ்சிரிப்புகொண்டவருங் கொடிமுடிகைலாசர்
ஏதுவகையாக இருவருமாய்வந்தீர்கள்
வந்தவிவரமதை வகையாகச்சொல்லுமென்றார்
அவ்வசனங்கேட்டு அழகுள்ளபாண்டியனும்
சொக்கரைச்சேவித்து சொல்லுகிறான் இராஜனவன்
மதுரையிலேவாழுகின்ற மகாதேவஆண்டவனே
எங்களுக்குக்குறைவில்லை உந்தனதுசெயலாலே
இச்சோழராஜனுக்கு வந்ததொருதுன்பங்கள்
சொல்லத்தொலையாது தூரமதகோனதையா
மழைகள்கிடையாமல் வையகங்கள்பாழாகி

உலர்ந்துதேசர்குபோ லுலகங்களத்தனையும்
வாடிக்தவிக்கிருர்கள் மனிதர்களெல்லோரும்
அன்னங்கிடையாது அரசனதுபட்டணத்தில்
சோறுகிடையாது சோழனதுபட்டணத்தில்
மிகவும்வருந்தமுற்றான் வேந்தனிந்தசோழராசன்
தயவுபுரிந்து தறகாககவேண்டுமையா
நாடுசெழிப்பதற்கு நாதரேகண்பாரும்
கனைபார்க்கவேண்டுமென்று காத்தரோதெண்டனிட்டோம்

சொக்கநாதர் சொல்வது,

அவ்வசனங்கேட்டு ஆண்டவருமேதுரைப்பார்
அரசர்களேநீங்கள் அஞ்சவேவண்டாங்காண்
எலனெவன்றனக்கு எந்தவதிகாரமுண்டோ
அந்தவதிகாரம் அவனவனேசெய்கிறது
வருணபகவானு மனதுவைத்தானுமாகில்
பெய்யாமழைபெய்வித்துப் பெருகவைப்பான்பூமியெல்லாம்
வருணனுக்கதிகாரன் வானவர்கோனிந்திரன்காண்
மேகத்துக்கதிகாரன் மேலானஇந்திரன்காண்
தேவேந்திரனைநீங்க ளிருவரும்வணங்கிடுங்கள்
உங்கள்குறைவுகளை யுரையுங்களிந்திரற்கு
மனதிரங்கவேண்டி வணங்கினீராமாகில்
வருணனைத்தானழைத்து மழைபெய்யவைப்பான்காண்
மேகத்தைத்தானழைத்து விடைகொடிப்பானிந்திரனும்
இந்திரன்தயவாலே எங்குஞ்செழிததோங்கும்
அவ்வசனங்கேட்டு அணிமதுரைபாண்டியனும்
சொக்கர்விடைகொடுக்கச் சோழனும்பாண்டியனும்
நல்லதென்றுசொல்லி நாதரடிபணிந்து
இருவருமாய்நடந்தார்கள் ஈசரதுகோயில்விட்டு
ஆலயத்தைவிட்டு அப்பால்நடந்தார்கள்

இந்திரலோகங்காண்கிறது.

தெய்வலோகம்போகவென்று சலுதியாய்த்தானடந்தார்
சோழனும்பாண்டியனுந் துருசாய்நடந்தார்கள்
இந்திரலோகத்திற்கு இசைந்துமேவந்தார்கள்
தேவேந்திரலோகத்திற்கு சலுதியில்தானடந்தார்
அமரர்பதிதேடி அரசர்கள்தானடந்தார்
வானுலகங்கிட்டி வருகிறவேளையிலே

ஆயிரங்கண்யிந்திரனும் அமர்ந்தார்கொலுமேடை
முப்பத்துமுக்கோடி முனிவர்களுந்தேவர்களும
நாற்பத்தெண்ணாயிரம நலமானரிஷிகளுடன்
தும்புருநாரதரும தூருவாசரிஷிகளுடன்
கிம்புருடர்கின்னரர்கள் கெருடகாந்தருவருடன்
கின்னரிவீணைகள் கீதங்களபாடிநிற்க
மேனகைரம்பையும் மெல்லிதிலோர்த்தமையும்
ஊர்வசிநாட்டியங்க ளுச்சிதமாய்செய்துநிற்க
இநதிராணிதேவியுடன் இந்திரன்கொலுவிருந்தார்
அந்தச்சமையத்தில் அழகுள்ளபாண்டியனும்
சோழனும்பாண்டியனும் துரிதமாய்வந்தார்கள்
இந்திரன்கொலுதேடி இருவரும்வருகையிலே
கண்டானே இந்திரனும் காவலர்கள்வருகிறதை
பூலோகராசாக்கள் பொன்னுலகம்வருகிறார்கள்
நரமனிதராசாக்கள் நாடிவரக்காரணமேன்
இவர்களாய்வருவாரோ ஈச்சுரனால்வருகிறார்கள்
சொக்கரருள்பெற்று சொர்க்கபதிவருகிறார்கள்
நல்லதென்றுசொல்லி நலமுடனேபார்த்திருந்தார்
பாண்டியனும்சோழனும் பதிகொலுவில்வந்தார்கள்

இந்திரனைக்காண்பது.

சொர்க்கலோகஇந்திரனைச் சோழனவன்பார்த்து
மிகவும்பயந்து மேன்மையுள்ளஇந்திரற்கு
அஞ்சிப்பயந்து அடிதொழுதுதெண்டனிட்டான்
சாஷ்டாங்கதெண்டனிட்டான் சசிதேவிநாயகர்க்கு
தெண்டனிட்டசோழனைத் தேவேந்திரன்வாழ்த்தி
வணங்கியசோழனை வாயாரத்தான்வாழ்த்தி
பொற்பீடம்போடுமென்றார் பூலோகச்சோழனுக்கு
எட்டுப்படியின்கீ ழிட்டார்கள்பொற்பீடம்
வந்தமகாராசன் மன்னன்மனமகிழ்ந்து
அந்தமுள்ளபீடத்தி லமர்ந்தானேசோழனவன்
எதிராகப்பாண்டியனும் இருமாப்புதானடைந்து
மதுரையாளும்பாண்டியனும் வணங்காமற்றானிருந்தான்
நம்மைப்போலிவனொருவன் ராசனல்லோயிந்திரன்றான்
இந்திரனைநாமும் எப்படிவணங்குவது
பூலோகஇந்திரன்போல் பொன்மதுரையாளுகிறோம்
சங்கரன்கிருபையினாற் றரணியையாளுகிறோம்
ஈசன்தயவிருக்க யிவனைவணங்குவதோ
சொக்கர்மகத்துவத்தால் தொழாமலேகிரோநின்றான்
எதிர்நின்றபாண்டியனை யிந்திரனுந்தான்பார்த்து
வந்திருக்கும்பாண்டியன்றான் வணங்காமலிருப்பதென்ன

தன்மைமதிக்கவில்லை நாரணபாண்டியனும்
சாதிநல்மதியாம லிருக்கிறான்பாண்டியனும்
சொக்கர்வலுமையினால் தொழாமல்போனானே
நாதராதுயவலால் நடமைமதிக்கவில்லை
பூலோகமன்னனுக்குப் பெருமைகள்தானுமுண்டோ
கொருவம்படைத்தோர்க்குக் கேடுவரும்தெரியாது
இவனுடையகெருவத்தை யினியடக்கவேண்டுமென்று
நல்லதனத்தாலே நமக்கவைக்கவேணுமென்று
மர்மத்தைக்கொண்டாராம் வானவர்கோனிந்திரனும்
ஆரடாதூதுவர்கள் அருகிருக்குங்காவலரோ
சரியொத்தபாண்டியற்குச் சரிபீடம்போடுமென்றார்
எதிராகப்போட்டதொரு கூடான ஆசனத்தில்
குந்துமென்றார்பாண்டியனைக் கொலுமேடையாசனத்தில்
சரியாகவுட்கார்ந்தான் தனிமதுரைப்பாண்டியனும்
ஆரடாதூதுவரோ அரசாளுமன்னனுக்கு
வைத்தொருமன்னனுக்கு மாலையொன்றுபோடுமென்று
கண்காட்டயிந்திரனும் கணமுடனேமல்லருக்கு

இந்திரன் கெண்டிமாலைகுட்டினது.

பாண்டியராசனுக்குப் பதித்தமுத்துகெண்டியொன்று
ஆயிரம்பேர்சுமக்கும் ஆணிமுத்துகெண்டியொன்று
கொண்டுவைத்துபோடுமென்றார் கொடுமதுரைபாண்டியற்கு
குடசமாலையொருமாலை சோழனுக்குப்போடுமென்றார்
அப்படியேஒழிஞர்க ளந்தப்புரந்தானுழைந்து
ஆயிரம்பேர்மல்லரவ ரான்பிடித்துத்தோன்றி
கெக்கியெடுத்தார்கள் நேரானகழுத்துகெண்டி
இந்திரனேபாண்டியன்றான் சால்கத்திகிவான்
தாக்கிக்கொண்டுவந்தார்கள் சூரந்தமல்லர்களும்
இந்திரன்கண்காட்ட எதிர்வந்தார்மல்லர்களும்
பாண்டியற்குவெகுமதியாய்ப் பார்மாலைகுடுமென்றார்
போட்டார்கள்கழுத்திலேதான் போர்மல்லராயிரம்பேர்
அப்பெரியமாலையைத்தான அழகுள்ளபாண்டியனும்
நாதராதுகிருபையினால் நடுக்கங்களில்லாமல்
சொக்கரைத்துதிசெய்து தோளிலேதாங்கிக்கொண்டான்
மார்பைநெளித்துமே மாலையைத்தாங்கிக்கொண்டான்
கண்டார்களெல்லோரும் கனமானபாண்டியனை
தேவேந்திரன்கண்டானே சிறப்புள்ளபாண்டியனை
இவனுக்கொப்பாரில்லை [illegible]

அறிவோம்பிவனுடைய அங்காவலுமையை
பாண்டியன்மேலேயல்லோ பகைவைத்தானிந்திரனும்
ஒருவருக்குந்தெரியாம லுள்ளத்தில்கபடுவைத்தான்
பாண்டியன்முகம்நோக்கி பண்புடனே துசொல்வான்
சோழனேநீருமாய்ச் சொர்க்கபதிவந்ததென்ன
வந்தவயணமதை வகைபிரித்துச்சொல்லுமென்றார்
அப்போது பாண்டியனும் அருள்புரிந்தே துசொல்வான்
எந்தனது காரியமா யிவ்விடத்தில்வந்ததில்லை
சோழனுக்காயிங்குவந்தேன் சொர்க்கபதியிந்திரனே
அவ்வாசனலுவலைகொண்டு அமர்பதிவந்தேனென்றான்
தொந்தனைகள்பதிநீறனே சோழனிந்தமன்னவனும்
மழைமாரியில்லாமல் வருத்தங்கள்மிகவாகி
சம்மூடேதாச்சியங்கள் கருகுதேபூமியெல்லாம்
பரிசனங்களெல்லவரும் பரதேசியானார்கள்
பன்னிரண்டுதன்வருடம் பாரில்மழையில்லையாது
அந்தவிசனத்தாலே அடித்துவந்தாரெந்தனையும்
என்றுலேயாகாதென்று யிசகண்டைபோயுரைத்தேன்
எம்மண்டைபோகவல்லோ உத்தரவுசெய்தார்கான்
ஈசன்விடைபெறறுமல்லோ யிவ்விடத்தில்வந்தோம்யாம்
உம்மாலேயானதல்ல உதவிபெறவேண்டுமென்றான்
அந்தமொழிகேட்டு ஆயிரங்கணிந்திரரும்
சோழன்முகம்பார்த்துச் சொல்லுவாரிந்திரரும்
எதுக்குமஞ்சாதே யின்பமுள்ளமன்னவனே
ஈசர்தயவாலே இனியசவுக்கியமுண்டு
அப்படியேசெயவிப்பேன்யான் அஞ்சாதேசோழனென்று
செற்முறைமைதானறிந்த நீதியுள்ளமன்னவனே
ராஜனுவார்த்தைக்கு நானொன்றுசொல்லலாமோ
அப்படியேயானடப்பேன் அரசனே நடவுமென்றார்
இந்திரனுஞ்சொல்லத் திக்கிட்டெழுந்திருந்து
பாண்டியனுந்தெண்டனிட்டுச் சரணமென்றடிபணிந்து
வாழ்த்திவிடைகொடுத்தார் வானவர்கோனிந்திரரும்
உத்தரவுபெற்றேனே உலகாளுஞ்சோழமன்னன்
பாண்டியனுமப்போது பக்குவமாயிப்பொழுது
இந்திரன்விடைதாறு மெங்களிருவருக்கும்
போய்வாருமென்றுசொல்லி போகவிடைகொடுத்தார்
ஆனந்தமாய்ப்புரிந்து அரசர்களிருவருமாய்
தெய்வலோகம்விட்டேயல்லோ திரும்பினார்பூலோகம்
மதுரைவளநாட்டில் வந்தார்களிருவருமாய
சோழனுக்குமிகுமதிகள் செய்தபாண்டியனும்
அருமையினால்பெற்றுக்கொண்டு அனுப்பிவிடைகொடுத்தார்
பாண்டியன்விடைபெற்றுப் பழமன்னன்சோழமன்னன்

சொக்கனாந்தரிசித்துச் சோழன்கடந்துவிட்டான்
தன்னுடையராச்சியத்திற் றனஞ்சயனுபோய்கடந்தான்
இப்படியாய்ச்சோழ னிருக்குமந்தவேளையிலே

இந்திரன்கோபித்துச் சோழன்பெருமைபடவும்

பாண்டியன்சிறுமைபடவுஞ் செய்தது.

ஆசாபவிந்திர னன்புடனேதுசெய்தார்
பாண்டியன்வந்ததுவும் பார்சோழன்வந்ததுவும்
தன்னைவணங்காமற் றயிரியமாய்ப்போனதுவும்
நரனானபாண்டியன்றா னம்மைவணங்காததினால்
மதியாமற்போனவனை மட்டடக்கவேணுமென்று
கோபங்கள்கொண்டானே கொழுந்தனல்போலிந்திரனும்
எரிபறந்தகண்களுடன் இந்திரனேதுசொல்வார்
மேகங்களனைத்தையும் மேன்மையுடன்வரவழைத்து
சப்தமேகமத்தனையுஞ் சதிராய்வரவழைத்து
வருணபகவானை வரவழைத்திந்திரனும்
கேளுங்கள்மேகங்களே கீர்த்தியுடனென்வார்த்தை
இன்றுமுதலாக ஈடழிவான்மதுரையிலே
கால்வைக்கக்கூடாது கருமேகங்களெல்லாம்
அக்கினிவான்மதுரையிலே அடிவைக்கலாகாது
தூரல்விழப்போகிறீர்கள் துன்மார்க்கன்மதுரையிலே
எரித்தழிவையாமல் இடைக்குமழைபெய்யுங்கள்
அவனுடையபூமிதனி லடிவைக்கலாகாது
மதுரையிலேநீங்களும்போய் மழைபெய்தீராமானால்
கால்விலங்கும்கைவிலங்கும் கழுத்துப்பெருவிலங்கும்
தாள்விலங்கும்தோள்விலங்கும் தரிக்காப்பெருவிலங்கும்
விலங்குகள்போட்டுமல்லோ வெட்டிவெறிக்கிறேன்
என்வார்த்தைதனைத்தகித்து வருவிக்கப்போறீர்கள்
சோழனதுபூமியிலே சொர்ணமழைபெய்திடுங்கள்
மாதமும்மாரிகள் வருஷிப்புங்கள்சோழனுக்கு
முப்போகந்தான்விளைய மும்மாரிபெய்திடுங்கள்
கருப்புக்கொடியலேதான் கருமேகம்பொருந்திடுங்கள்
சர்வாளுஞ்சோழனுக்கு இடையூறுவாராமல்
அவனுடையசீமையிலே ஆமாகதுயம்பூப்பெய்திடுங்கள்
என்றுவிடைகொடுத்தா ரிந்திரனையபோது
நல்லதென்றுசொல்லியல்லோ மேயாகமேகமெல்லாம்
மதுரைவையாடமல் வருகிறதேமேகமெல்லாம்

சோழராசன்பெருமைபட்டது.

சோழனாட்சியையிலே சொரிகின்றதே பெருமழைகள்
கடலிறைச்சல்போலாக கம்மிற்றே மேகமெல்லாம்
குமுறியிடித்துக் குடங்கொண்டுபொழிந்ததுவே
இறைச்சலுடனாக ஏகவெள்ளம்பொழிகிறது
சோனமழைகளாக சொரிகிறதே பூமியெல்லாம்
நல்லமழைகளாலே நாடுசெழித்ததுவே
பூமிகுளிர்ந்ததங்கே பொய்கைகள்நிரம்பியது
ஏரிகுளம்நிரம்பி கால்வாய்கள்தானிரம்பி
ஊற்றுகள்தான்சுரந்து ஓடிற்றேசலம்விசையாய்
தடாகங்கள்தானிரம்பித் தாமரைபூத்தனவே
வயல்கள்நிரம்பியல்லோ வாய்க்காலுந்தானோடி
உலர்ந்தமரங்களெல்லாம் உயிருண்டாய்த்துளிர்த்தனவே
அடியற்றமரங்களெல்லாம் அன்பாய்த்துளிர்த்தனவே
காடுசெடிகளெல்லாங் கனமாகவே துளிர்க்கும்
செடிகள்மரங்களெல்லாம் செழிப்பாய்வளர்ந்திருக்கும்
பூவாமரங்களெல்லாம் பூத்துச்சொரிந்தனவே
காயாமரங்களெல்லாங் காய்த்துச்சொரிந்தனவே
செந்நெல்விளைந்தனவே தேசஞ்செழிந்தனவே
கிள்ளப்பழுந்ததுவே கிளிகள்வந்துசேர்ந்ததுவே
அள்ளப்பழுந்ததுவே அணிகள்வந்துகோதுவன
சோலைகள்சாலைகள் சூழ்ந்ததடாகங்கள்
குருவியடுத்தனவே குயில்கள்வந்துபாடுதும்
குயில்களிறைச்சலிடுங் கோகிலங்கள்சத்தமிடும்
அன்னங்கள்பேடையது அனேகம்வந்துசேர்ந்தங்கே
பண்டுபழங்கள்தின்று களிந்தனபறவையெல்லாம்
ஏர்கட்டியுழுவாரும் இளாற்றுகிவாரும்
பழிநிங்குடிகளெல்லாம் பலப்பட்டார்பூமியிலே
ஓடின்குடிகளெல்லாம் ஊர்வந்துசேர்ந்தார்கள்
பரிதேசிபரிதேசி பஞ்சைபநாதியெல்லாம்
சோழராசன்பட்டணத்தில் சுகப்பட்டுவாழ்ந்தார்கள்
பிச்சைக்காரரெல்லாரும் பெருமையடைந்தார்கள்
சோழமண்டலங்களெல்லாம் சுகமாய்த்தழைந்தனவே
சோழமகாராசன் தொலைந்தான்விசனமெல்லாம்
கீர்த்தியடைந்தானே கிருபைக்கடலானான்

இந்திரலோகமனைத்தனிலே எந்நாளும்நினைத்திருப்பான்
மாதமும்மாரி வருஷிக்கும்மண்டலத்தில்
சோழமகாராசன் தொலைந்தான்விசனமெல்லாம்
அப்படியாகவாழ்ந்தான் அழகானசோழமன்னன்

பாண்டியன் வறுமையடைந்தது.

பாண்டியநாட்டார் பரதேசம்போனார்கள்
மழைகள்கிடையாது மதுரைநகர்சீமையிலே
காய்ந்துலர்ந்துபோயினதே கனமதுரைப்பட்டணத்தில்
எறிந்துபுகைகிறதே ஈரங்கிடையாமல்
குடிக்கநீர்கிட்டாது குளங்கள்மடுக்களெல்லாம்
காகங்குடிப்பதற்குக் கரண்டிசலங்கிட்டாது
ஆறுகள்குளங்களெல்லாம் அடங்கலும்வரண்டனவே
ஏரிகள்வரண்டனவே ஏற்றக்கோலாழமட்டும்
பூமிகள்சூடெழும்பிப் பொங்கிற்றேதணலாக
விளைவுகள்கிடையாது வேந்தன்மதுரையிலே
களவுகள்கிடையாது கனமதுரைப்பூமியிலே
பொன்மதுரைநாட்டிலே புழுதியடைந்ததுவே
சருகுபோலுலர்ந்தனவே தழைத்தமரங்களெல்லாம்
பூமியுலர்ந்தது பூண்டுகிடையாமல்
பறவைகள்கிடையாது பாண்டியன்தேசத்தில்
குடிவலசைவாங்கினார் கொடுமதுரையுள்ளவர்கள்
பஞ்சைபறதியாய்ப் பரதேசம்போகிறார்கள்
அன்னங்கிடையாது அழகுள்ளமதுரையிலே
மதுரையைச்சுற்றி மகாவனங்கள்செடிகளெல்லாம்
காய்ந்துமிகத்தீய்ந்து கரும்புகைச்சல்கொண்டனவே
தங்கநிழல்கிடையாது தனிமதுரைப்பூமியிலே
ஊரிலேயுள்ளவர்கள் உறக்கங்கள்கொண்டார்கள்
பாழடைந்தமுகமானார் பாண்டியநாட்டிலுள்ளோர்
அன்னவிசாரம் அதுவேபெரிதாச்சு
பன்னிரண்டுவருஷம் பாரக்கருப்பாயிற்று
சரீரம்வெளுத்தார்கள் சல்லடைக்கண்ணானார்கள்
பெண்டுபெண்பிள்ளை புருஷர்களொருங்கேதாம்
சிக்குகள்கட்டித் திசைமாறிப்போனார்கள்
அப்படியிளைத்தது அணிமதுரைப்பூமியெல்லாம்
[illegible]

ஒருபிட்டுசுட்டாளும் உதிராதிருப்பதில்லை
சுடப்பட்டபிட்டனைத்துஞ் சொரசொரென்றுதிர்ந்திடுமாம்
உதிர்ந்ததொருபிட்டுக்கு ஓடிவந்துநிற்பாராம்
பிட்டுதின்றுகொண்டே போவாரொருதட்டு
பிட்டுவிலையாகவில்லை ஒட்டன்வேலைசாயவில்லை
பாதியணையாயிற்று பாதியின்னங்கட்டவில்லை
அவரவர்கள்பங்குக்கு அணைகட்டியாயிற்று
வாணிச்சிபங்குக்கு வரபுகட்டிதீரவில்லை
பிட்டுகளைதின்கிறதும் போகுறதும்வருவதுமாய்
ஒட்டன்திரிவதிலே உதிர்ந்தபிட்டுஞ்சரியாயிற்று
பொழுதுமறைந்தது பொன்மதுரைப்பாண்டியனும்
கட்டின அணைகளை கனமுடனே பார்த்துவந்தான்
வாணிச்சிபங்கு வரப்பின்னங்கட்டவில்லை
ஆருதடாயிந்தபங்கு அணைகட்டிதீரவில்லை
எவனுதடாயிந்த அணை யென்றானே பாண்டியனும்
அரசனுக்குச்சொல்லுகிறா ரணைகட்டுமன்னவர்கள்
வாணிச்சிபங்குக்கு வந்தானொரொட்டனவன்
அவனுடையபங்கிதுதான் அணைகட்டவில்லையென்றான்
கோபங்கள்கொண்டானே கொற்றவனார்பாண்டியனும்
எங்கேயடாஒட்டனவனிழுத்துகொண்டுவாருமென்றார்
ஒட்டனைப்பிடித்துவந்தார் உலகாளும்ராஜனண்டை
கண்கள் சிவப்பேறிக் கனமதுரைபாண்டியனும்

சொக்கர் பெறம்பாலடிபட்டது

பிட்டுக்குமண்சுமந்த பித்தரென்றறியாமல்
ஒட்டனென்றெண்ணியல்லோ ஓங்கியடிக்கலுற்றான்
கைபிடித்தபிரம்பதனைக் கரகரென்றுதான்சுழட்டி
ஒட்டன்முதுகின்மேலோங்கியடித்தானே
அந்தஅடிபடவே ஐயரந்தசொக்கருக்கு
வருத்தங்கள்கொண்டாரே மதுரைசொக்கநாதருந்தான்
அந்தவடியுந்தானனைவருக்கும்பட்டனவே
அவரவர்கள்தம்முதுகில் அடித்தழும்புநேர்ந்தனவே
திக்குதிசைகளும் தேவாந்தரங்களெல்லாம்
அண்டங்கள்நீயுமும் ஆகாசமெவ்விடத்தும்
சகலசீவஜெந்துக்கும் தழும்புமிகவுண்டாச்சு
பாண்டியன்முதுகின்மேற் பார்த்தழும்பாயிற்று
எல்லவரும்பயந்தா ரிந்தவடியாலே
பாண்டியனும்போது பயந்துநடுங்கி
எங்கேயந்தவொட்டனென்று யேறெடுத்துப்பார்க்கும்போது
[illegible]ப்போதாய்மறைந்தார் வந்தோரொட்டனவர்

சங்கெங்குந்தேடினான் இளமதுரைபாண்டியனும்
காணாததிலே கனக்கத்தீர்விடிவிழுந்தான்
வந்தவரொட்டனல்ல மாயாண்டிசொக்கரவர்
ஆண்டவராகவேணும் ஆளடிமைசெய்யவந்தார்
தெரியாமற்போச்சுதென்று சிந்தைமிகவாடி
தீவினைக்காளானேனே தெய்வமென்றும்பாராமல்
வல்வினைக்காளானேன் மகாதேவனென்றறியாமல்
இந்தவிதிப்பயனை எப்போதொலைத்திடுவோம்
அந்தனமக்குமல்லோ மதிமோசமென்றுசொல்லி
எந்தவிதத்திலேயும் ஈடேறப்போவதில்லை
தெரிந்ததுநமக்கென்று தென்மதுரைப்பாண்டியனும்
மெத்தவிசனமாய் வீட்டிற்குவந்துவிட்டான்
அருமையசொக்கரவர் ஆண்டவனாரப்போது
ஒட்டனென்றவுருவை உத்தமருந்தான்மறைந்து
ஆலயத்தில்வந்தாரே அட்டாளுஞ்சொக்கலிங்கர்
வருத்தத்துடனேயவர் வந்துநின்றாராலயத்தில்
அப்போதுமீனாட்சி அன்னையவளோடிவந்து
ஏதுகாண்சுவாமிநீரு மிப்படிக்குவந்ததென்ன
அதையுரையுமைய்யநீர் அக்குறையைச்சொல்லுமென்றாள்
கேளுமென்னுயிரே கிளிமொழியேமீனாட்சி
ஊழியக்காரனல்லோ மண்சுமக்கப்போயிருந்தேன்
பிட்டுக்குமண்சுமக்கப் பிரம்படிபட்டுவந்தேன்
அடித்தான்பிரம்பாலென் னங்கத்தழும்பேற
கொடுத்தான்முதுகின்மேற் கொடும்பாவிபாண்டியனும்
சகாயஞ்செய்யப்போய்நான் அபாயம்வந்துநேர்ந்ததுகாண்
அபாயமென்னைச்செய்தவனை ஆதரிக்கப்போவதில்லை
என்றுரைக்கச்சொக்கரைத் துணைப்பாள்மீனாட்சி
அறியாமற்செய்தபிழை பெரியோர்மனம்பொறுப்பார்
மறுரூபங்கொண்டல்லோ மண்சுமக்கப்போனதினால்
ஆளடிமையென்றுசொல்லி அடித்தான்பிரம்பாலே
ஆளென்றுதானறிந்தா லடிபணிந்துதொழுதிடுவான்
தெரியாதவன்செய்தால் குற்றத்தில்லையாமல்
ஆதரிக்கவேணுமென்றாள் அங்கயற்கண்மீனாட்சி
அவ்வசனங்கேட்டு அழகுசொக்கரேதுசொல்வார்
என்னையடித்ததடி எல்லோர்க்கும்பட்டதுகாண்
உலகத்துக்கெல்லாம் உரைத்ததேபிரம்படித்தான்
சித்தர்கள்முனிவர்கள் தேவருக்கும்பட்டதுவே
ஞானவர்ரிஷிகளுக்கும் பாலனுக்கும்பட்டதுவே
சப்தரிஷிகளுடன் தபோதனர்க்கும்பட்டதுவே
சகலஜீவஜெந்துக்குந் தழும்புவந்துநேர்ந்ததுவே.

கன்னியர்கள்சொர்பங் கருவுக்குபட்டதுவே
இந்தப்பழிபாவம் எப்படிதொலையுமடி
இந்தப்பழிக்குப்பெண்ணே மைந்தன்வரம்நான்கொடுக்கேன்
கருவுதரிக்கவேதான் கன்னியரேநான்கொடுக்கேன்
அந்தப்பழிபாவம் அத்தோடேதொலையுமடி
என்றுமிவருரைக்க ஒந்திழையும்பேசாமல்
மௌனவாய்த்தானிருந்தாள் மதுரைமீனாட்சியரும்
இப்படிசிலகாலம் இருக்குமந்தநாளையிலே
பாண்டியனும் பரிசனங்களெல்லவரும்
அரசனும் அருமைமழையில்லாமல்
தத்தளித்துபோகிறதே தனிமதுரைபூமியெல்லாம்
அரனுரைத்தானடிக்க அக்கொலைப்பாதகனும்
கம்புதோற்றிற் கதறுதேபூமியெல்லாம்
மைந்தருமில்லை மகுடமுடிஅரசனுக்கு
பிள்ளைகளுமில்லை போனமன்னனுக்கு
அப்படியாய்த்துன்பம் அரசனும்பட்டிருந்தான்
ஆரையும்வணங்காதே அந்தசித்திராங்கதனும்
சிறுத்தேனென்றுசொல்லிப் பெருந்தவரைபோயடுக்கான்
தெய்வமேகதியென்று தேசத்தையாண்டிருந்தான்
சொக்கரேகதியென்று தோத்திரங்கள்செய்திருந்தார்
பன்னிரண்டுதன்வருடம் பாரில்மழையில்லாமல்
துன்பங்களுடனேயல்லோ துரைத்தனம்பண்ணுவார்

சொக்கரும்மீனாட்சியுங் கானகமடைந்தது.

மதுரையிலேவாழும் மகாதேவர்சொக்கலிங்கம்
அங்கயற்கண்மீனாட்சி அம்மனும்சொக்கருமாய்
இருவருமப்போதுஏகாந்தவேளையிலே
தேவியரைப்பார்த்து சுவாமியேதுசொல்வார்
பெண்ணேபெண்ணேமீனாட்சி பொற்கொடியேஆலயத்தில்
நணலாயெறிகிறது தனிகாற்றடியாமல்
ஒடுக்கங்களாகுறது உன்மதுரைபட்டணத்தில்
காற்குளிக்குடிக்க தண்ணிவிருட்சங்கிடையாது
ஒடுக்கங்கள்தீரவேண்டி உலாவிசாய்வந்திடலாம்
காத்துவாடைக்குநாம் கானகத்தில்போய்வரலாம்
மதுரையைச்சுற்றி வருவோம்நாம்பெண்மயிலே
வாருமென்றுசொக்கர் மயிலனையைதானழைக்க
அப்படியேநல்லதென்று அங்கயற்கண்மீனாட்சி
சம்மதிப்பட்டு சதியும்புருடனுமாய்
இடபத்தின்மேலேறி ஈஸ்பரனுமீஸ்பரியும்
எருதின்மேலேறி யிருவரும்வெளியானார்
ஆலயத்தைவிட்டு இருவரும்வெளியானார்
மதுரையைவிட்டு மகாதேவர்வெளியானார்

துரையைச்சுற்றி வந்தார்களிருவருமாய்
பட்டணங்கள்சுற்றி பார்த்துவருகையிலே
அழகுமறைந்து அழகானதென்மதுரை
கண்டவொருநிழலும் ஆதரிக்கக்கிடையாது
ஒண்டநிழலில்லை ஒருமரமுங்கிட்டாது
தோட்டங்கிடையாது துறவுகள்துந்திருக்கும்
நிற்கநிழலுமில்லை நிலைத்திற்றரிப்போமென்றால்
கிளைகளத்தனையும் கட்டையாயுலர்ந்திருக்கும்
செடிகள்கிடையாது செட்டிகள்கிடையாது
தழைகள்கிடையாது சற்றேயிருப்போமென்றால்
வெய்யலுரைக்கின்றது வெங்கானல்வீசிடுமாம்
கானலுரைக்கின்றது கடுங்கானல்வீசிடுமாம்
வேர்வைபொழிகிறது விமலருக்கும்பார்வதிக்கும்
அண்டமுடிகூடவில்லை அக்கினிவாடையது
அக்கினிவாடையது அனல்கொண்டுவீசுதையா
இக்காட்டில்வந்தார்கள் நாதருந்தேவியுமாய்
அந்தநடுக்காட்டில் அலைந்துவருகையிலே
அங்கேயொருவில்வமரம் அடர்ந்துதழைத்திருக்கும்
பசுமையாகத்தழைத்துப படர்ந்துநெருங்கிருக்கும்
சந்துகள்தெரியாமல் தழைந்திருக்கும்வில்வமரம்
எந்நேரமுஞ்சலங்கள் இலையிற்படர்ந்திருக்கும்
காய்த்துப்பழுத்து கனிகளுதிர்ந்திருக்கும்
பூத்துப்பழுத்து புட்பங்கள்பரிமளிக்கும்
தென்னலதுவீசும் தேகங்குளிர்ந்திருக்கும்
அந்தமரமொன்று அவ்விடத்திற்றழைத்திருக்கும்
அவ்விடத்தில்வந்தார்கள் அரனுமுமையவளும்
அந்தவதிசயத்தை அன்புடனேகண்டுவிட்டார்
சோபந்தெளிந்து தேகமுந்தான்குளிர்ந்து
இந்தநடுக்காட்டில் இத்தழைந்தவதிசயத்தை
கண்டறிவோமென்று கடுகியேகீழிறங்கி
எருதைநிழலில்விட்டு இறங்கினார்மரத்தருகில்
ஆயாசந்தீர்வதற்கு அவ்விடத்திலுட்கார்ந்தார்
சவுக்கியமானார்கள் தங்கள்சரீரத்தில்
இருவருமுட்கார்ந்து ஏகாந்தமாயிருக்க
பட்டப்பகலிலே பாங்கானவேளையிலே
உச்சியிற்சூரியன் உருமத்தின்வேளையிலே

நீர்க்காக்கையைக்கண்டது.

அந்தவொருநீர்க்காகம் அலைகடலில்போய்முழுகி
[illegible]

செப்பட்டையில்நிறைய சலங்கொண்டுவருகிறதாம்
கடல்நீரைக்கையிலே காகமதுகொண்டுவந்து
வில்வமரத்தின்மேல் மேலாகத்தான்பறந்து
மேலிருந்துவீசிற்றாம் மேன்மையுள்ளகாகமது
மழைமாரிபோலே வருஷிக்குங்காகமது
வருஷித்தஜனங்கள் மகாதேவர்மேற்படவே
குளிர்ந்ததுதிரேகங் கொடிமதுரைசொக்கருக்கு
அங்கயற்கண்ணம்மனுக்கு அங்கம்குளிர்ந்ததுகாண்
ஏதிந்தஜலமென்று எடுத்துப்பார்த்தார்கள்
சங்கரரும்சங்கரியும் தலையெடுத்துப்பார்க்கையிலே
நீர்க்காகம்சலம்பொழிந்து நின்றுபறந்ததுவே
அந்தநல்லகாகத்தை ஆண்டவனார்தான்பார்த்து
பார்த்தாயோபெண்ணேநீ பட்சியிடதன்னறிவு
கண்டாயோபெண்ணேநீ காகத்தின்தன்னறிவு
இந்தமரத்துக்கு இக்காகம்நீர்தெளிக்க
ஏதனால்தெளிக்கிறதோ இதையறியவேண்டுமென்று
காகத்தைத்தான்கேட்டு காரியமறிவோமென்றார்
அப்படியேயறியுங்கள் அறிவுள்ளகாகமதை
என்றுஉமையாளுரைக்க ஈஸ்வரனும்மப்போது
ஆகாயத்திற்றான்பார்த்து அந்நீர்க்காகமதை
கைகாட்டிதானழைத்தார் கைலாசநாதருந்தான்
கண்டதுகாகம் கைலாசநாதரென்றும்
அஞ்சிபயந்து ஆகாயம்விட்டிறங்கி
தாய்தகப்பன்வந்தாரோ நற்காக்கநம்மையென்று
சீக்கிரமாய்தானிறங்கி இட்டணவேயோடிவந்து
முக்கால்வலம்வந்து முடிவணங்கிதெண்டனிட
நாற்கால்வலம்வந்து நமஸ்கரித்துதெண்டனிட
தெண்டனிட்டபட்சியைச் சிவனாருந்தான்வாழ்த்தி
அடிபணிந்தகாகமதை அரனாருந்தான்வாழ்த்தி
இந்தமரத்துக்கு இறைப்பிதென்னநீசலத்தை
இந்தமரத்தினாலே இத்தனைவருத்தமென்ன
வருத்தத்துடனேநீ வந்துநீர்தெளிப்பதென்ன
சொல்லுமென்றுகேட்டார்கள் சொக்கரும்அம்மனுமாய்
கண்டதுகாகம் கனக்கமிகப்பயந்து
சொல்லுகிறதுகாகஞ் சொக்கரவர்கேள்விபட
தங்களுக்கேயுகந்த தனித்தமரமென்றுசொல்லி
விமலருக்குகந்த வில்வமரமென்றுசொல்லி
அதனால்கடல்நீரை அள்ளிவந்துயான்தெளித்தேன்
நாடோறும்[illegible]தெளித்தேன் நாதருக்கேற்றதென்று
இதுதானேயெந்தனுக்கு ஈஸ்வரனார்கட்டளைதான்

அவ்வார்த்தைதான்கேட்டு அரனும்அம்மனுந்தான்
பூரித்திருந்தோரும் புத்தியுள்ளகாகமென்று
ஆனந்தமாய்பூரித்து அறிவுள்ளகாகமென்று
கட்டித்தழுவி காகத்தைதானோக்கி
எந்தனுக்கேற்றதொரு இரதமாமென்றறிந்து
களையாகவந்தவர்க்கு களையாற்றிவைத்தாயே
இந்தச்சகாயமதை எங்களுக்குசெய்தாயே

சொக்கர் நீர்க்காக்கைக்குவரங்கொடுத்தது

உனக்கொருசகாயம் உதவிசெய்வேனென்றுசொல்லி
என்னவரம்வேண்டும் இன்பமுடனுந்தனுக்கு
கேற்றவரம்தருவேனென்றார் கிருபைமிகக்கூர்ந்து
அப்போதுகாகந்தான் அரனரைச்சேவித்து
சொல்லுகிறதுகாகஞ் சொக்கருக்குதெண்டனிட்டு
கைலாசநாதரே கண்மூன்றுடையவரே
என்மனதிலிருக்கின்ற எண்ணத்தைச்சொல்லுகிறேன்
கன்னிப்பெண்ணரசி நன்மதுரைப்பாண்டியனை
சேரவேண்டுமென்று சிந்தையில்நினைத்திருந்து
என்னுடையபாலனுக்கு இசைந்தபட்டந்தரவேணும்
அந்தவரமெனக்கு அருள்புரியவேண்டுமையா
காகமதுசொல்வதை கண்டாரேசொக்கலிங்கம்
ஆனாலொருவார்த்தை அன்பானகாகமேகேள்
கன்னிப்பெண்ணரசி நன்மதுரைநீபோனால்
மன்னனைச்சேர்ந்தாலுங் மலடியாய்போய்விடுவாய்
உன்னைப்பெண்ணரசி ஒருயாதக்கெர்ப்பமதாய்
ஆரென்றுகேட்பான் நன்மதுரைபாண்டியனும்
ஆருமற்றபாவினன் அண்டவந்தேனுமையென்று
சொல்வாயாயாமாகில் தோழியாய்வைத்துகொள்வான்
தாதியாயிருந்தானால் தையலரேயுந்தனைத்தான்
வசந்தனானால் மருவமணங்கொள்ளுவாய்
ஆருமறியாமல் அணைவானேயுந்தனைத்தான்
அணைத்தாசைதீர்ந்திடுவாய் அரிவையிளமாதே
உன்வயற்றிலேபிறக்கும் உருதியுள்ளபாலனுக்கு
பட்டந்தரிப்பான் பட்டணத்திலொருபங்கு
[illegible] யேடவுமென்றார்
சம்மதித்துகாகஞ் சந்தோஷங்கொண்டதுவே
[illegible]
[illegible]
டவுமென்றுபேர்கொடுத்து நாதரவர்போய்விட்டார்

நீர்க்காக்கை பெண்ணாகிப் பாண்டியனையடுத்தது.

அப்போதுநீர்க்காக்கை யரிவையந்தபெண்ணணங்கு
மதுரைநகர்தேடி வந்தாளேபெண்மயிலாள்
பாண்டியனிடத்தில் பக்குவமாய்வந்துநின்றாள்
அப்போதுபாண்டியன் அரிவையைத்தான்பார்த்து
சுந்தரமும்வடிவுமுள்ள தோகையைத்தான்பார்த்து
ஆரடிபெண்ணே நீ யறியவுரையுமென்றார்
அவ்வசனங்கேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
ஆருமில்லாப்பரதேசி அண்டிவந்தேனும்மையென்றாள்
ஒருமாதங்கெர்ப்பம் உத்தமியாளெனதனுக்கு
ஆருமற்றவெந்தனைநீர் ஆதரிப்பாயென்றுரைத்தாள்
அவ்வசனங்கேட்டு யந்தமுள்ளபாண்டியனும்
கெர்ப்பமானமங்கை கிளிமொழியாளாகையினால்
காப்பாற்றவேண்டுமென்றால் கன்னியமோமஞ்சாதே
அப்படியேசெய்வேனென்று அரிவையைக்கூட்டிப்போய்
தன்னுடையதேவியண்டை தாதியாய்வைத்துவிட்டான்
சகலவிசாரணைக்குந் தாதியாய்த்தானிருந்தாள்
அழகுந்திருமேனி அலங்காரமாயிருப்பாள்
புத்தியுள்ளகுணவதியாய்ப் பூஷணலங்கிர்தையாய்
பாண்டியன்தேவிக்கு பட்சமாய்த்தானிருந்தாள்
சுந்தரமும்எவ்வளமுஞ் சொல்லத்தொலையாது
வாலிபமாய்ப்பெண்மயிலும் மன்னவனார்தேவியண்டை
அதிகாரமும்பெற்று அவளிடத்திலிருக்கையிலே
வசந்தமானகாலம் வந்துமிகநேரிடவே
மன்மதவேதனையால் மன்னனந்தபாண்டியனும்
தன்னுடையதேவியாந் தையலரண்மனைக்கு
மாளிகைதேடிவரும் போதந்தவேளையிலே
வாசற்படியிலே மயில்போல்தாதியவள்
பொற்பதுமைபோலே பொன்னுபரணமின்ன
நின்றாளேநீர்காக்கை நேரிழையைத்தான்பார்த்து
அதிகமயல்கொண்டானே அந்தமுள்ளசுந்தரிமேல்
அவளுமிவர்பேரி லாசைகொண்டுநின்றாளே
ஒருவர்க்கொருவர் உடன்பட்டிருவருமாய்
ஆசையுடன்செய்வதற்கு அரிவையைத்தானழைத்தார்
அதற்கந்தநீர்க்காக்கை அரிவையருஞ்சம்மதித்து
என்வயற்றிலேபிறக்கும் இனிதானமைந்தனுக்கு
பட்டங்கொடுப்பீரோ பாண்டியரேயென்னாளும்
காசிலொருபங்கு நடத்துவேன்மங்கையரோ
அப்படிக்குச்சம்மதித்தாள் அரிவையிளமாது
ஆருமறியாமல் அங்கொருவர்காணாமல்
கூடியணைந்தான் கோலவிழிமாதரசை

நானக்கவிந்திர்க்கலேனே அரண்கொடுக்கவாக்கிறேனே
சுகந்துடனேசேர்ந்து தரிசமுடன்பாண்டியனும்
தேவியன்னுடனே பாண்டியனுஞ் சிறமாய்நடத்திட்டான்
இப்படிசிலகாலம் யிருக்குமந்நாளையிலே
அப்போ நீர்க்காக்கை அரிவைபிள்ளைதனையும்
மாதமுமாபத்தாச்செய வருந்திபெக்கவிக்கு

நீர்க்காக்கை நின்முகனைப்பெற்றது.

பிள்ளையைப்பெற்றாள் பேருள்ளமதுரையிலே
மைந்தனைப்பெற்றாள் மாதந்நீர்க்காக்கை
சாதிவையிற்றிற் சந்தமிப்பிறந்ததென்று
சந்தோஷங்கொண்டு சர்க்கரைவழங்குகிறார்
நீர்காக்கைபெற்றெடுத்த கோபாலனுக்கு
நின்முகனென்று பேர்தியாப்பேருமிட்டார்
பிள்ளையில்லாமலிதையிற் பிள்ளைபிறந்ததென்று
பாண்டியன்தேவி பட்சமாய்த்தான்வளர்த்தாள்
பிள்ளையும்வளர்ந்தது பேரணம்மாளிகையில்
தாதியின்பிள்ளையென்று சதங்கைகொலுசயிட்டு
காப்புகடகமிட்டு கண்டசரமணிந்து
ஆடைகளிட்டு ஆபரணந்தான்பூட்டி
வைதுமைக்குமாக வளர்த்துவருநாளையிலே
ஐந்துவயதாகி அமர்ந்திருப்பள்ளியிலே
பன்னுதமிழ்வித்தை படிக்கவைத்தார்பள்ளியிலே
அம்புபிடிக்கறிந்தான் ஆயுதம்பிடிக்கறிந்தான்
சகலமுங்கற்று சாமர்த்தியமான பின்பு
அவனுக்குவேறே அரண்மனையமர்த்திவைத்தார்
வெள்ளாட்டிபெற்றெடுத்த வீரியன்நின்முகனும்
அப்படியாயிருக்க ஆளுமொருபாண்டியனும்
நமக்குப்பிள்ளையில்லையென்று ராசனந்தபாண்டியனும்
சிங்காதனத்திற் செங்கோலுந்தான்பிடிக்க
பட்டணத்தையாள்வதற்கு பாலகனில்லையென்று
விசனத்தைகொண்டானும் வேந்தனந்தபாண்டியனும்
மித்திராங்கதனுடனே சேர்ந்திருந்தபாண்டியர்கள்
ஆறுபேரும்போகன் அணிதிரளாம்பாண்டியர்கள்
பிள்ளைகளில்லாமற் பெருமலடாய்ப்போனோமே
ஆறுபேரவர்களனைவருமலடானோம்
அவர்களுடன்கூட ஆரார்கள்நான்மலடி
பாண்டியர்களெழுவரும் பட்டத்தானை [illegible]

குவித்தார்பூசம்பாரதர் தாகங்கொடுத்தலியார்
ஆண்டிபரதேசியைப்போல் அலைந்தொருநாளவடிவெடுத்தேன்
பாண்டியராசாக்கள் பருமுந்நாளத்தலைகளிலே
சிவகுருவென்றுசொல்லி சேர்ந்துவைத்துபிச்சையெடுத்தேனே
பதராணமுக்கெடுத்துப் பாளிவெனக்கிட்டார்கள்
இப்பிழுக்குப்போட்டார்கள தோஷியத்துபாண்டியர்கள்
பதறிட்டபாவிகட்குப் பாலன்கொடுப்பதில்லை
பிட்டுக்குமண்சுமந்தோன் பிரம்படியும்பட்டுவந்தேன்
என்னதவம்பண்ணினலும் ஏதாலும்பிள்ளையில்லை
ஏழுபிறப்பிலேயு மிப்புறப்புபிள்ளையில்லை
என்றதுதான்கேட்டு ஈஸ்வரியாளதுசொல்வாள்
எப்பாவஞ்செய்தாலு மீஸ்வரனேமனமிறங்கி
புத்திரனளிக்கவேண்டும் புகழானபாண்டியற்கு

பாண்டியற்குஈஸ்வரிபுத்திரவரங்கொடுத்தது.

(உன்)சித்தமிரங்காமற் போனலுமீஸ்வரனே
ஒருபெண்ணுகிலுமளிப்பேன் புகழானபாண்டியர்க்கு
அங்கயற்கண்ணம்மை யவளிதமனமகிழ்ந்து
தோள்சதைதனைக்கிள்ளியம்மை தூரவெறிந்துவிட்டாள்
அல்லியுங்கொடியுமாயடர்ந்தொருபொய்கையிலே
செந்தாமரைவெண்டாமரை சேர்ந்தொருபொய்கையிலே
வானவரிந்திரரும் வந்திருக்குமபொய்கைதனில்
சந்திரருஞ்சூரியருஞ் சத்தியண்ணும்பொய்கையிலே
தாமரைப்பொய்கையிலே தண்ணீர்தடாகந்தன்னில்
அல்லியிலைமேலே வந்துவிழுந்ததுகாண்
கையாடிக்காலாடிக் கண்ணுறுமுகமுருகாமி
குவ்வாகுவ்வாவென்றுசொல்லி குழந்தையழுகிறது
சந்திரனைப்போலத் ததும்புதண்ணீர்ப்பொய்கையிலே
சூரியனைப்போலே துலங்குகிறக்குழந்தை
மேகத்துமின்னலைப்போல் மின்னுகிறக்குழந்தை
குன்றுமேற்சந்திரனுங் குதித்தெழுந்தபாலனைப்போல்
இருண்டிருக்கசோலையிலே திரண்டெழுந்தசூரியன்போல்
இப்படியாகவேகா ணிருக்கிறவேளையிலே
அங்கயற்கண்ணம்மை யவளிதமனமகிழ்ந்து
குழந்தைதனைக்கேற்றபடி குலாவிக்கொடுத்தாள்
ஏழாம்பிராயந்தனில் இளவரசுபட்டமென்று
பன்னிரண்டாம்பிராயத்தில் பாரதனைக்கையாள்விட்டு
எல்லையரசனை இசைந்தவரங்கொடுத்தாளே
அம்மன்கற்றுதேவி யணிந்தபக்கமுடன்

கலாபிசமூர்த்தித் தவிகதபகர்ககுமம
[illegible] வரிசையுள்ளகுழந்தைக்கு
அல்லியென்றுபேருமிட்டு அங்கயற்கண்ணையமாள்
பாண்டியனைத்தானழைத்து பார்வதியேதுசொல்வாள்
ஆறுயிரவரே அணிஇளம்பாண்டியரே
அல்லியிவள்மேலே அருமைதனிருக்கிறது
ஆணுமதுபெண்ணுமது ஆறாயிரவருக்கும்
ஏகத்துப்பெண்ணாருமென்று சவ்வரியும்தானுரைத்தாள்
அப்போதுபாண்டியரும் அரனுரைத்தாள்வணங்கி
நவசுநிலைகலந்து தானெழுந்தார்பாண்டியர்கள்
அல்லியிவள்மேலே அனைத்திருந்தகுழந்தையைத்தான்
நாங்கள்பெற்றதுபோலே தழுவியெடுத்தார்கள்
வாரியெடுத்தார்கள் மார்போடணைத்தார்கள்
மதுரைநகர்நோக்கி வருகிறார்பாண்டியர்கள்
அரணோடேவிட்டார்கள் அறிக்கையிட்டார்பாண்டியர்கள்
மைந்தனைப்பெருமெற்று வருகிறார்பாண்டியர்கள்
புத்திரனைப்பெருமெற்று புண்ணியர்கள்வாருர்கள்
நின்முகராஜனுக்கு நிருபஞ்சொல்லுமென்று
அதனுடனேசொல்லியே சேதிவிட்டார்பாண்டியர்கள்
நூற்றுவொருவனுக்கு [illegible]க்கேட்டுசொன்னான்
கேட்டதுநின்முகனும் கோபமதிகமாகி
ஆரடா நூறுவரே அகங்காரமல்லர்களே
பாண்டியராசனுடனே பங்காளர்த்தைசொல்லும்
நின்முகராசனுடைய சிம்மாசனராச்சியத்தை
[illegible] பாவப்பட்டமது
பட்டதுவைதல்லவே பாருலகமவருவதில்லை
மதுரைநகருவந்ததிலே [illegible]வாருவேன்

நின்முகராசனுக்குப் பாண்டியர்கள் பகுதிகட்டசீர்மானித்தது

நீங்களெல்லோரிருந்தாலும் எங்களுக்குப்பகுதிகட்ட
வருத்துக்கொருதாமே வரவனுப்புப்பாதுடைகள்
ஆறாயிரம்பாண்டவர் அனுப்பவேணுமென்னசக்கு
அனுப்பாதேபோனால் வாகினைகள்செய்திடுவேன்
நின்முகராசன் நிச்சயமாய்ச்சொன்னானென்று
பாண்டியராசனுக்குப் பாங்குடனேசொல்லுமென்றான்
நூற்றுவொருதனுமே தேடினராசண்டை
ஆயிரம்பாண்டியர்க்கு [illegible]கொண்டுவிட்டு
நின்முகன்சொன்னதொரு சேதியெல்லாம்சொல்லலுற்றான்
உடனேயவர்கள் [illegible]
[illegible]
வெட்டியது [illegible] பட்டணத்தில் வந்துகுடிக்கணமாய

உழவுகுடித்தனமா ராக்கமார்கள் அரசுபண்ணுறார்
வருஷத்துக்கொருக்கத்தான் வரிகொடுப்பார் பாண்டவர்கள்
இந்தவிதமாகவேதா னிருந்தார்கள் பாண்டியர்கள்
சொக்கருளாலே அல்லியாளல்லியற்கு
மாணிக்கத் தொட்டிலிட்டு வளர்த்தார்கள் பாண்டியர்கள்
ஒருமாதமிருமாத மொன்றிரண்டு மூன்றுமாச
சிற்றாடைகட்டிவளர்ந்து சிறுப்பிள்ளையாகிவாள்
பாவாடைகட்டிவளரும் பத்தினியாயிருவாள்
அம்மானைப்பந்துகளும் அழகாகவிளையாடுவாள்
ஐந்தாம்வருஷத்தில் எழுதாணிப்பள்ளிவைத்தார்
எழுபிராயமட்டும் இளங்கொடியாள் தான்படித்தாள்
ஆறுசாஸ்திரம் நான்குவேதம் அறுபத்துநாற்கலைக்கியானம்
அடவித்தைவில்வித்தை அஸ்திரவித்தைதப்பில்லாமல்
காவியபாஷியங்கள் கற்றுக்கொண்டாளல்லியரும்
பளிரின்கைறை பகற்பாடமொப்பித்து
பாலயிர் தழுவுங்கக்கூ பத்தினியாள்வாளுற்றாள்
அப்போது பின்முகன்று ஒருபிசெண்டை
ஆயிரத்து ஐவரை அனுப்பினான் சின்முகனும்
ஆயிரங்குடத்தி லப்படைமாணபாளாய்
வாங்கிவரச்சொல்லியே வரவிட்டான் அதுவரை
மலைகளுடன் றலைகொடுக்கு மல்லர்வெளிப்பட்டார்கள்
காற்றிலும்வேகமாக கடந்துவந்தார் வாருர்கள்
தக்கக்குடமெடுத்துத் தான்வந்தார் மல்லரெல்லாம்
பாண்டியராசனிடை பாற்குடமேவைத்தார்கள்
பகுதிகளைக்கட்டிமென்று பாற்குடங்கள் முன்னேவைத்தார்
அரண்மனைக்குப்போகவேனும் அனுப்புங்கள் பாலையென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தியத்தெழுந்து
காராவின் பசும்பாலை கறந்துமே பாண்டியர்கள்
ஆறாயிரங்குடத்தி லன்பாய்ப்பிரப்பிவைத்து
மந்திரன் ஆணிமேற்கட்டி மாலைகளைச்சுற்றிவைத்தார்
பாற்குடங்கள் தன்னை பார்த்திருத்துவைத்தார்கள்
வரிசைவரிசையாக வைத்தார்கள் பாற்குடத்தை
பதினாயிரத்துதருக்கும் பாலமுதுபோசனங்கள்
போசனஞ்சமைக்கவுமற்றார் போசனபாண்டியர்கள்
அரிப்பதுவும் பொரிப்பதுவும் அடிசில்சமைப்பதுவும்
இந்தவிதமாக இருக்கின்றவேளையிலே,
அந்தச்சபைதனிலே அல்லியம்மன் வைத்துவிட்டாள்
பதினாயிரங்குதவைப் பாற்குடங்கள்பார்த்தவளே
[illegible]

இத்தனையிட்டுக்கொண்டு ஏதுசொல்வாளல்லியம்மாள்
ஒருகாருக்கண்டதில்லை உசிதசக்கிரமங்களை
பூவின் மருதுசெயமே பெத்தலுக்குத்தோன்றிற்று
இக்கவுரன்மறையா கொக்கிருக்குவந்தவர்கள்
ஒருகாருக்கண்டதில்லை உச்சிதமானவரை
இவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வாள்பாண்டியர்கள்
அவ்வார்த்தையுங்கேட்டு சொல்லுநல்லதைப்போய்ப்பட்டமா
பாலருக்கன்றே புறப்பட்டுவந்தோமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமனமகிழ்ந்து
இத-சொல்லமற்பேசலாகுமோ சிராசபாண்டியரே
வல்லவிராமனே நல்லோடேமோதுவேன்
செத்துமடிந்திடுவேன் செலவழித்துப்போய்விடுவேன்
மாண்டுமடிந்திடுவேன் வைகுந்தஞ்சேர்ந்திடுவேன்
அவ்வார்த்தைதான்கேட்டு ஆறுபேர்சொல்வார்
ஆறுபேருமே ஆண்மலடிபெண்மலடாய்
வாசமில்லைவேண்டியபல்லோர் மகாதவம்பண்ணுமம்மாள்
என்னதவம்பண்ணிலும் மகாலும்பிள்ளையில்லை
மகாமுனிவர்தபசுபண்ணு மாமலையைத்தான்தேடி
நாங்கள்தவசுக்கு நகர்விட்டுப்போவதற்கு
வெள்ளாட்டிபெற்றதொரு வீரணனின்முகத்தை
பட்டந்தரித்துவைத்துப் பாரத்தவசுபோனோம்
சிவபதபருவத்திற் சேர்ந்துதவம்பண்ணுமம்மாள்
சொக்கநாதனாலே சிவகாமிதாயாலே
அல்லியிலேமேலே ஆரணத்தைப்பெற்றெடுத்தோம்
ஒருவர்-வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடிகெடுத்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
குடிக்கிறதண்ணீரிலே யுள்ளமணற்சேருமுண்டு
அடிக்கிறகாற்றதனி லனகாற்றுருப்புமுண்டு
காலகாலகண்டருக்கு கண்டத்தில்கருப்புமுண்டு
குன்றின்மணிக்காலுங் கொஞ்சகருப்புமுண்டு
சந்திரக்குமாரியுண்டு சற்றேகருப்புமுண்டு
உனக்கு-மயிரேகருப்பொழிய மற்றேதுகருப்புமில்லை
புருவங்கருப்பொழிய பின்னேகருப்புமில்லை
அல்லியிலேமேலே ஆரணங்கேபிறந்தாய்
வந்ததொரு பெருந்தவத்தால் வகையாய்மொழிந்தனரை
வெள்ளாட்டிபெற்றெடுத்த வீரணனின்முகத்தும்
ராசாவொட்டாமல் ஓட்டிவிட்டானப்புறத்தே
விழுவதுதிடமாக ஊரிற்பிழையுமென்றான்
ஆதிசம்பாண்டியற்கு ஆறுபேர்சம்பாற்குட்டமும்
வருகைக்கிடமகொடுக்கத்தான் வாங்கினான்பாண்டியவன்

உன்னைப்பெறவேண்டி ஊரிழந்தோம்பதியிழந்தோம்
சீமையிழந்தோமம்மாள் துரைத்தனமுந்தானிழந்தோம்
ஏழுவருஷமம்மா யிப்படியனுப்புகிறோம்
இந்தவருஷமே இங்குவந்தார்மல்லரவர்
பாற்குடமும்நிரப்பிவைத்தோம பாலமிர்தஞ்செய்கிறோம்யாம்
நீ-பாலமிர்தமுண்டலவோ பள்ளிக்கூடம்போவென்றார்

அல்லியம்மாள்மல்லர்களை அவமானஞ்செய்தனுப்பியது.

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லிமிகக்கோபமதாய்
எட்டிப்பழம்போலே இருகண்சிவந்தாளே
கோவைப்பழம்போலே கூரியகண்சிவந்து
வெள்ளாட்டிபையனுக்கு வீரியங்களுண்டாமோ
எருதுபசுவாமோ இளைத்தபசுவுமுண்டோ
உயரப்பறந்தாலும் ஊர்க்குருவிபருந்தாமோதான்
கொசுகுபருந்தாமோ கூடப்பறக்குமோதான்
விரலிலேஉரலானால் உரலென்னகொள்ளுமையா
வெள்ளாட்டிபையலைத்தான் வெட்டிதலைதள்ளாமல்
பாண்டியராசர்களே பாராளவைத்தீர்களே
உங்களைப்போல்ராஜாக்கள் உலகத்தில்காணேனே
என்றுமிகக்கோபமுடனெழுந்தாளேயல்லியம்மாள்
எழுந்திருந்து அல்லியம்மாள் இயலானபாற்குடத்தை
இடதுகால்தன்னாலே எட்டிவுதைத்தாளே
ஆறாயிரம்பாற்குடத்தை அகங்கொண்டிறடிவிட்டாள்
ஆரடாமல்லர்களே அழையும்பிடாரனைத்தான்
ஓடியழையுமென்றாள் ஒருநொடியில்வாருங்கள்
அங்கிருக்குமல்லா அதிதுரிதமாயோடி
பாம்புப்பிடாரர்களைப் பரிந்தோடியழைத்துவந்தார்
வாழ்வரசியல்லியற்கு வந்துதெண்டம்பண்ணினார்கள்
எம்மையழைத்தவகை ஏதுகருமமென்றார்
காட்டுக்குப்போய்நீங்கள் கண்ணிப்புறமுமருந்தைவைத்து
கருநாகஞ்செந்நாகம் காலக்கோட்டிவிஷங்களுடன்
மண்ணுளிதாசிரியுமலைப்பெரியவிரியன்தான்
ஊதுசுருட்டைபாம்பு இருதலைநாகங்களும்
நீக்கத்துக்குட்டிகளும் வகைவகையாய்க்கொண்டுவந்து
வண்ணவண்ணப்பாம்புகளும் வகைவகையாய்க்கொண்டுவந்து
ஓட்டம்நடையுமாக ஒருநொடியில்வாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அந்தப்பிடாரரெல்லாம்
ஓட்டம்நடையுமாக ஓடினார்கானகத்தில்
காட்டுக்குப்போனார்கள் கண்ணிப்புறமுமருந்தைவைத்து

வெண்ணாவல்நாகப்பாம்புகளை வரிசையுடன்தான்பிடித்தார்
பெட்டிகள்நிரம்பவே பிடித்தார்கள்பிடாரரெல்லாம்
காடுசெடிதாண்டி கடுகியேயோடிவந்தார்
அல்லியரசாணி அரண்மனைக்குமுன்புவந்தார்
பெட்டியிற்பாம்பையெல்லாம் பொற்கொடியாள்முன்னேவைத்தார்
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுரைப்பாள்
பாற்குடந்தன்னிலேதான் பாம்பையடையுமென்றாள்
பஞ்சவர்னச்சீலையினால் பானைகள்வாய்கட்டுமென்றாள்
ஆறாயிரங்குடத்தி லடையுமென்றாள்பாம்பையெல்லாம்
பஞ்சவர்னச்சீலைகட்டிப் பார்திருமுன்னேவைத்தார்
அல்லிப்பெருமாளு மாரணங்கேதுரைப்பாள்
அம்பட்டனைத்தேடி அழையுமென்றாளல்லியரும்
ஓடியழைத்தல்லவோ ஓட்டம்நடையாகவந்தார்
ஆறாயிரந்தூதுவனை அழகுமொட்டைசெய்யுமென்றாள்
தாடிமீசைத்தலையைத் தலைபொடிபண்ணுமென்றாள்
மீசைசிறையுமென்றாள் முன்பொடிபண்ணுமென்றாள்
கரும்புள்ளியுஞ்செம்புள்ளியுங் கலந்தழகாய்குத்துமென்றாள்
அல்லியம்மாள்சொற்படிக்கே அழகுமொட்டையிட்டார்கள்
ஆரடாதூதுவரே அன்பானவார்த்தைகேளும்
நீன்முகராசனுக்கு நீங்கள்போய்சொல்லுங்கடா
பாண்டியராசனுக்குப் பட்சமுள்ளஅல்லியம்மாள்
இந்தவரிசைகளை யனுப்பினளென்றுசொல்லும்
உன்-தொண்டைக்குந்தூண்டிமுளரு தொப்புளுக்குவீராணி
அவன்-மண்டைக்குகோடாலி மார்புக்குச்செப்புலகை
கழுத்தடியிற்கத்திபவன் காமாட்சியம்மையென்று
ஊட்டியறுக்கவந்த உண்மைப்பரஞ்சோதி
தலைமாட்டிற்பாம்பலவோ தாயாரங்கஅல்லியென்று
சொல்லுங்கள்தூதுவரே துரைராசநீன்முகற்கு
வெள்ளாட்டிப்பையனுக்கு விந்தையைசொல்லுமென்றாள்
ஆறாயிரந்தூதுவர்க ளக்குடமெடுத்துக்கொண்டார்
அருமைமதுரையது வடமதுரைதான்விட்டு
தேனுமதுரையது தென்மதுரைவருகிறார்கள்
செகத்தெருக்கடந்து தேரோடும்வீதிவிட்டு
மகாராசன்கொலுதனிலே வந்தார்கள்தூதுவர்கள்
அப்போதுநீன்முகனும் அப்பிங்கணமாடிகைக்கு
சனிபெண்ணெய்மண்டபத்தில் தானமர்ந்தான்வாழ்மார்பன்
வணையிட்டுக்கொண்டே இருக்கிறவேளைதனில்
பாற்குடக்கைமுன்னாலே பார்த்திருக்கின்றார்
வரிசைவரிசையாக வைத்தார்கள்பாற்குடத்தை

வந்திருந்தாரெல்லாம் வரிசையாய்நின்றார்கள்
கண்ணைத்திறந்தல்லவோ கட்டழகன்பார்த்தானே
இதுவெள்ளைவதியங்கள் ஆர்செய்தவன்மையிது
எட்டிப்பழம்போலே இருவிழிகள்சிவந்தான்
கோவைப்பழம்போலே கூர்விழிகள்சிவந்தான்
உருக்கியசெம்பொன்று உதிரம்போல்கண்சிவந்தான்
இப்படிச்செய்தவனை யெனக்கறியச்சொல்லுமென்றான்
பால்வார்த்தனுப்பாமே பாவையடைத்தந்தன்னை
ஆராதானுமே அறியவுரையுமென்றான்

நீலமுகராசனுக்குத் தூதர்கள் சேதிசொல்லுதல்.

அவ்வார்த்தைகேட்டவர்க ளஞ்சியுரைக்கலுற்றார்
ஐயாவேகேளும் அடியேனொருவார்த்தை
ஆறாயிரம்பாண்டியருக்கே அரிவையொருமகளாம்
பாண்டியராசனைநாம் பகுதிபோய்க்கேட்டவுடன்
பகுதியுங்கட்டினார் பாற்குடங்கள்தானிறைத்தார்
எங்களுக்குசாப்பாடு இன்பமுடனேசமைத்தார்
அவ்வளவில்வில்லா னனைக்குவாழ்மாதே
பள்ளிக்கூடத்துப் பகலமுழுமுன்னைவந்தாள்
எங்களைக்கண்டவுட னேவிளாதான்கேட்க
பாற்குடங்களேனையா பாண்டியரேசொல்லுமென்றாள்
அவ்வளவிற்பாண்டியர்க ளஞ்சிப்பயந்துரைப்பார்
உமக்குப்பட்டந்தரித்துப் பாரதவம்போனதுவும்
அல்லியனைப்பெற்றதொரு அதிசயத்தைச்சொன்னார்கள்
அதுகேட்டுஅல்லியவள் அதிகமானகோபதாய்
வெள்ளாட்டிப்பையனுக்கு வீரியங்களுண்டாசசோ
ஆறாயிரங்குடத்தை அரைநொடியிலிரடிவிட்டாள்
பாம்பைப்பிடித்துவந்து பாற்குடத்திலேயடைத்தாள்
வாருமென்றாளம்பட்டனை மழுக்கமொட்டையடியுமென்றாள்
தலைபோடிபண்ணினார்கள் துணிப்பொட்டுமிட்டார்கள்
தைபமிடம்வந்தவர்கள் தலைபோடியானோர்கள்
கரும்புள்ளியுஞ்செம்புள்ளியுங் கலந்தழகாய்ப்பொட்டுமிட்டு
உன்-தொண்டைக்குத்தூண்டிமுள்ளு தொப்புளுக்குவிராலி
மண்டைக்குக்கோடாலி மார்புக்குச்செப்புலக்கை
கழுத்தடியில்கத்தியென்றாள் காமாட்சியம்மனென்றாள்
ஊட்டியதுக்கலந்த உமையபாருஞ்சோதியென்றான்
உநதனுக்குச்சொல்லுமென்று உத்தமியனுப்பிவைத்தாள்
தருமதுரைமகாராசி தப்பிவிட்டாளெங்களைத்தான்

பிறைந்தாரங்கள்வக்கு இடங்கள் பெரியோர்செய்தபுண்ணியந்தான்
என்றுசொல்லக்கேட்டு எழுந்தானேநீன்முகனும்

நீன்முகராசன் அல்லியின்மேற்படையெடுத்தது.

ஆடாநாதலமே அழையுங்கள்மந்திரியை
இக்கட்சணமேதான் கூடாரம்போடுமென்றான்
இன் அடுவெளிகூடாரம் இயலுடனேபோடுமென்றான்
பாளையங்களெல்லாமே பயணமிட்டுவாருமென்றான்
சண்டைக்கொடிபோட்டுச் சண்டைமுரசடியுமென்றான்
சேனையலங்கரித்துச் சீக்கிரமாய்வாருமென்றான்
ஆறுபிரம்மத்திரிகை ஆனைவரும்பயணமென்றான்
யானைசேனைபரிவாரம் அடங்கலும்பயணமென்றான்
காலாள்பரிசேனை கடுகிப்பயணமென்றான்
ஆறுபேர்பாண்டியனை அரண்மனையில்போட்டுவிட்டு
அல்லியெனும்பெண்ணரசை அரைக்கொடியில்பிடித்துவைத்து
தலைபோடிபண்ணிப்பே அம்பலத்தேசமக்கவைப்பேன்
என்வினையிட்டபெண்தலைக்கே இயல்பாயரைப்பிடிப்பேன்
அப்போதுஸ்நானமா யாடுவேனபிஷேகம்
என்றுஎழுந்தானே இயல்புள்ளநீன்முகனும்
கட்டினதுகச்சையல்ல கைதனிலேவில்லுமல்ல
முகத்திலிலே மீசையல்ல முன்கட்டிச்சிலையல்ல
தலையிலேபாகையல்ல தரித்ததுஆடையல்ல
என்றவனுமார்பைத்தட்டி எழுந்தானேநீன்முகனும்
முகத்திலருமாலை முகமுகாய்தான்கட்டி
அம்பெடுத்தான்வில்லெடுத்தான் அம்புறாத்தூணிமுதுகணிந்தான்
காய்ச்சக்கரத்தானணிந்தான் கத்திவாளுமிடுக்கிவிட்டான்
சேனைசத்திகளலங்கரித்துத் தேரின்மேலேறினானே
ஏறினதேர்மேலே எடுத்தார்கெடிக்குடைகள்
காலற்குணக்கெடுத்தார் கருப்புநல்லகூடாரம்
வெய்யிலுக்கெடுத்தார்கள் வெள்ளைநல்லகூடாரம்
சருப்புவிஜான்செகப்புநிறமாய் கலந்துபறக்கிறது
அடிபடுந்தனமுரசு அனைவருக்கிக்கிடென்ன
கோடைகாலத்திடிபோல குமுறுதேதம்பேரிகைகள்
வெங்கலப்பேரிகைகள் விருதுமுழக்கமுடன்
அமரக்குந்தசமரதரும் அல்லிராசைவருகிறார்கள்
உயிர்த்தோழர்களுடன் கன்னடர்வருகிறார்கள்
துலுக்கர்மகுடக்கருடன் சோனகரும்வருகிறார்கள்
வன்னியரும்குறவரும் மராட்டியரும்வருகிறார்கள்
வருகிறஜெனங்களுக்கு மட்டுமிதங்களில்லை
பொக்குவெலந்தக்கதிபோல் குட்டமல்லிபுரத்தைப்போல்

வானங்கவிழ்ந்ததுபோல் மல்லிகைபூத்ததுபோல்
நீன்முகன்சேனையெல்லாம் நெருங்கிவருகிறது
செந்தூளெழும்புவது சிவலோகங்கப்பிற்று
கருந்தூளெழும்புவது கதிரோனைக்கப்பிற்று
கோட்டை கடந்தார்கள் கொப்பெனவேவருகிறார்கள்
அப்போதுபாண்டியர்க ளறிந்தார்கள்சேதிதன்னை
நீன்முகன்வருஞ்சேதி நிமிஷத்திற்றனறிந்தார்
ஐயோமகளேயென்று அலறலுற்றார்பாண்டியர்கள்
தவம்பண்ணிப்பெற்றோமே தவக்குலையநாளாச்சே
பாரதவம்நாங்கள்செய்து பாலகியைப்பெற்றோமே
நீன்முகன் கையாலே நீமடியநாளாச்சே
வருகிறான்நீன்முகனும் மட்டில்லாச்சேனையுடன்
என்னசெய்வோமகளேயென்று இடிவிழுந்ததுதானழுவார்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குதான்கேட்டு
அஞ்சாதேஐயமாரே அவனைப்பலிகொண்டிடுவேன்
மாண்டுமடிவேனென்று மனதில்நினைக்கவேண்டாம்
செத்துமடிவேனென்று சிந்தைதனில்வைக்கவேண்டாம்
அரைநாழிக்குள்ளேயவன் ஆங்காரந்தாழ்ப்பேன்
என்சமர்த்தைப்பாருமென்று எழுந்தாளே அல்லியம்மாள்

அல்லியம்மாள் சொக்கரையும் அம்மனையுந் தொழுது
வரம்பெற்றது.

அல்லிக்குளமுழுகி அலர்தாமரைப்பூவெடுத்து
சொக்கரதுஆலயத்திற் சுந்தரியும்போய்புகுந்து
கோயில்வலமவந்து கும்பிட்டுத்தெண்டனிட்டு
கொண்டுவந்தபூமலரால் கொம்பனையும்பூசைசெய்தாள்
ஒருவர்வயிற்றிற்பிறவாமல் வன்கொடுமைசெய்யாமல்
குடலிற்பிறவாமல் குலக்கொடுமைசெய்யாமல
அல்லியிலேயென்னை ஆச்சியரோபிறப்பித்தாய்
பொற்றாமரையிலேதான் பிறப்பித்தாயீஸ்வரியே
நீன்முகனைக்கொல்லவேண்டும் நீபட்டங்கட்டவேண்டும்
மாற்றானைக்கொல்லவேண்டும் வையகத்தையாளவேண்டும்
[illegible]ழுந்திவேலைகொடம்மா மந்திரவாள்கைகொடம்மா
[illegible]வணங்கியே இரங்கிநமஸ்கரித்தாள்
[illegible]ணிக்கச்சொக்கலிங்கம் மனதுமிககளித்து
[illegible]ண்டநாயகியாள் அங்கையற்கண்மீனாட்சி
[illegible]மீனாட்சியுந்தான் மங்கையர்கண்மனமகிழ்ந்து
[illegible]கொடுத்தாள் மந்திரவாள்கைகொடுத்தாள்
[illegible]கைகொடுத்து வண்டிறுநீரள்ளிவிட்டு
[illegible] மகாதேவர்கைகொடுத்தார்
[illegible] அனேகம்பேர்வந்துவிட்டார்

அல்லியம்மாள் நீன்முகனைச்சங்கரித்தது.

காலாளுஞ்சேனைகளுங் கடுகியேபயணமாச்சு
சேனாசுற்றிதெண்டனிட்டு தேறின்மீதேறினளே
அம்புவில்லைகைபிடித்து மச்சுரதந்திருப்பிவிட்டாள்
சேவகுந்துமிமுழக்க தேன்மொழியாள்வருகிறளே
சித்திரத்தேரும் செருக்களத்தேவருகிறதை
வந்துவளைத்தாளே வல்லிடிபோலல்லியரும்
வில்லைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
மாரிச்சரம்பொழிந்தாள் மகாசேனையுள்ளவர்மேல்
கொட்டாளேவில்லதனைச் சொரிந்துவிட்டாள்பாணமது
விட்டாள்சரபாணம் மேனியெல்லாந்தான்மறைய
யானைசேனைபரிவாரம அடங்கலுங்கொல்லலுற்றாள்
யானைத்தலைகளெல்லாம் அபயமிட்டுக்கீழ்விழவே
ஒட்டைத்தலைகளெல்லாம் ஓலமிட்டுக்கீழ்விழவே
குதிரைத்தலைகளெல்லாம் கொக்கரித்துக்கீழ்விழவே
யானைமேலிருந்தவர்கள் அபயமிட்டுக்கீழ்விழவே
ஒட்டகத்தின்மேலிருந்தவர்கள் ஓலமிட்டுக்கீழ்விழவே
குதிரைமேலிருந்தவர்கள் கொக்கரித்துமண்ணைக்கவ்வ
தென்னங்காய்போலாகச் சேனைதலையுருளவிட்டாள்
பனங்காயைப்போலாக பார்தனிலுருளவிட்டாள்
செண்டுசெண்டாய்வெணதலை செருக்களத்திலுருளவிட்டாள்
அறுந்ததலைகளெல்லாம் அம்மானையாடுகுது
ஆலையாடுங்கரும்புபோல் அறைத்துரசம்பிழிந்தாள்
கரும்புக்கரணைபோல் கண்டித்தாள்வேணதலை
மதப்பட்டயானைகள்தான் மடுவைகலக்கிறாற்போல்
குட்டிமதயானை குளங்கலக்கிவிட்டதுபோல்
கிண்ணியில்சந்தனத்தைக் கூட்டிவழிகடந்ததுபோல்
நீன்முகன்சேனையெல்லாம நிர்த்தூளிபண்ணலுற்றாள்
பிடாரியம்மன்கோயிலுக்குப் பலிகொடுக்கும்பாவனைபோல்
அம்மையார்கோவிலுக்கு ஆடுவெட்டும்பாவனைபோல்
அரைநாழிக்குள்ளே அதம்பண்ணாள்பாளையத்தை
சண்டைபண்ணமாட்டாமற் றளர்ந்தோடிப்போனார்கள்
பண்டாரமென்பாரும் பரதேசியென்பாரும்
நாமத்தைக்காண்பித்து நான்தாதனென்பாரும்
நூலைக்காண்பித்து பிராமணனென்பாரும்
சண்டைக்குவல்லையென்று சலாஞ்செய்தோடிவாரும்
தண்ணீர்தண்ணீரென்றுசொல்லி தவிக்[illegible]கள்
வடுகரெல்லாநீளென்பார் வன்றமிழர்தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொல்லிப்புலம்பினார்

இவ்விதமாய்ப்பாளையத்தை இறக்கடித்தளல்லியம்மாள்
நீன்முகராசனை நேரிழையும்வந்தெதிர்ந்தாள்
ஆரடாநீன்முகனே அறிவுகெட்டபாதகனே
வெள்ளாட்டிப்பையலே வீரியமுனக்கேதடா
தம்பலவட்டிலேன்றுந் தாதிபெற்றமகனோ
மதுரம்புளியாமா வைகாசிதையாமா
எருதும்பசுவாமா எதிர்த்துவந்தாயாண்பிள்ளையாய்
உன்னைவிடுவேனோ உனக்கொருசேவகமோ
கொசுவும்பருந்தாமோ கூடப்பறக்குமோடா
உயரப்பறந்தாலு மூக்குருவிபருந்தாமோ
அணிப்பிள்ளைசத்திறலு மாணைகுட்டிவிழுமோடா
ஒதிபெருத்தால்தூணுமா ஓட்டாங்கச்சிமுளையாமா
உன்னை-அதம்பண்ணும்படியாக அல்லியிலேபெண்பிறந்தேன்
பொற்றாமரையிலே பிறப்பித்தாளீஸ்வரியாள்
உன்-தொண்டைக்குத்தூண்டிமுள்ளாந் தொப்புளுக்குவிராணி
உன்-மார்புக்குச்செப்புலக்கை மண்டைக்குக்கோடாலி
உன்-கழுத்தையறுக்கவந்த காமாட்சியம்மனேடா
உன்னை-ஊட்டியறுக்கவந்த உண்மைபொருஞ்சோதியடா
உனகுலதெய்வமடா ஓங்காரஅல்லியம்மாள்
அறியாமற்போனாயடா அறிவுகெட்டநாய்கலையா
அரைநாழிக்கொள்ளையிலே யமபுரஞ்சேர்க்கிறேன்பார்
கால்நாழிக்கொள்ளையிலே கைலாசஞ்சேர்க்கிறேன்பார்
ஒருநாழிக்கொள்ளையிலே உயிர்வதைசெய்கிறேன்பார்
தின்றவப்புமாண்டதோ தெருவும்பாழாச்சோ
உண்டவப்புமாண்டதோ ஊரும்பாழாச்சோ
காலனுபரவந்து கைகாட்டியழைத்தானோ
இயமனுருபரவந்து இங்கேவாவென்றானோ
ஆகையினாலேயோ அமருக்குவந்துவிட்டாய்
என்சமர்த்துஞ்சேவகமு மிப்போதறிவாய்பார்
தேரைத்தூக்கிவிட்டாள் செங்கையிலேவில்லெடுத்தாள்
கேட்டந்நீன்முகனுஞ்சொர்பமதிகோபி
நெற்றிக்கண்ணீஸ்வரனோ நிமிர்ந்துவிழிப்பார்த்தாற்போல்
வலதுபக்கமீசையது வல்லயம்போலேதுடிக்க
இடதுபக்கமீசையது ஈட்டிபோலேதுடிக்க
மீசைதுடிக்கிறதும் முன்கோபமாகிறதும்
சானுண்டுபெண்ணே நீ சமர்த்தாகப்பேசுகிறாய்
உன்-சவுரியத்தைநானறிவேன் தம்பலங்களைத்தீர்ப்பேன்
வல்லமையைப்பாரென்று வளைத்துக்கொண்டானல்லியை
இவ்விருவர்சேரு மிருநிலத்திற்றன்சமுலை
மாணிக்கச்சொக்கனையு மனதில்நினைத்தாளே

[illegible]
மலை [illegible] விட்டான்பாணமது
பாவியர்தநீன்முகனும் பதரிச்சரம்பொழிந்தான்
விட்டான்சரமானம் மேல்சிறந்தல்லியின்மேனியிலே
கோடானகோடிபாணம் குறித்தானேநீன்முகனும்
அல்லிப்பெருமாளுக் கதிகமானகோபமுடன்
ஒன்றுக்குப்பத்தாக ஒருநூற்றுக்காயிரமாம்
சரமெய்த்தாம்பொழிந்தாள் சாமர்த்தியமுள்ளகன்னி
ஐவகையானஅஸ்திரங்கள் வாரணத்துஅஸ்திரங்கள்
தெய்வீகமானஅஸ்திரங்கள் திக்குமுள்ளஅஸ்திரங்கள்
சண்முகனஸ்திரமாஞ் சலந்திகானஸ்திரமாம்
மகாதேவியஸ்திரமாம் பார்வதியஸ்திரமாம்
வச்சிரஅஸ்திரமாம் மருடகல்லஅஷ்திரமாம்
இடிவிசைத்துஅஸ்திரமாம் இந்திரனதுஅஸ்திரமாம்
இராமசந்திரஅஸ்திரமாம் கலைசந்திரஅஸ்திரமாம்
சூரியஅஸ்திரமாம் சுப்பிரமணியஅஸ்திரமாம்
கார்த்திகைமாதத்தில் கனத்தமழைபெய்ததுபோல்
ஐப்பசிமாதந்தன்னி லடர்ந்தமழைபெய்ததுபோல்
சோனைமழைகளும் சொரிந்தாற்போற்றானும்விட்டார்
விட்டதொருபாணமது மட்டுமிதுகளில்லை
நான்குநாள்மட்டும் நல்லசண்டைபண்ணுகிறார்
விற்பிடித்தகைகளும் மெத்தசிவப்பேறிற்று
அம்பெடுத்தகைகளிலே அல்லிப்பூவருணமாச்சு
செவ்விப்பழம்போலே நெருங்கிற்றுகொப்பளங்கள்
நித்தியமாக இருவர்சண்டைபண்ணினார்கள்
அப்போதுஅல்லியம்மாள் அம்மனையேநோக்கித்து
இடியாஸ்திரமெடுத்து இந்திரசாபந்தானுமிட்டு
மார்புளொங்கியல்லோ தோள்பிரளத்தான்தொடுத்தாள்
கைகளில்நெருப்பெரிய வந்துவிழுந்தனவே
தேருமுடைந்தனவே செம்புரவிசெத்தனவே
பொட்டசட்டைவச்சிரகபாய் பொடிப்பொடியாய்தானழிந்து
சட்டதமான்வச்சிரகபாய் தவிடுபொடியாயினவே
சல்லடைக்கண்கள்போல சரீரங்கள்சிதறியாகி
பதாதியாய்நின்றானே பராக்ரமநீன்முகனும்
எதிர்த்தான்வில்லைத்தடுத்தை [illegible]
கண்டாளேஅல்லியம்மாள் கனத்தகல்லகோபமுடன்
கேடகமும்வாளெடுத்து கொச்சித்துக்குதித்தாள்
[illegible] அல்லியம்மாள்
பசுகண்டபுலியதுபோல் பாய்ந்தானேநீன்முகனும்
பாம்புகண்டசிலகம்போ லல்லியெதிர்த்தாளே
பொருத்தன்பாசாணிபோற் குதித்தானேநீன்முகனும்

மானைக்கண்டசிங்கியைப்போல் வருகிறாளே அல்லியம்மாள்
உன்னைவிடுவேனென்று உன்மனதிலெண்ணாதே
நீன்முகா உன்தலையை நிமிஷத்தில்வாங்குவேன்பார்
இடசாரிவலசாரியா இருவருமேசுழலுகிறார்
சக்கரஞ்சுழல்வதுபோற் சமர்த்தர்சுழலுகிறார்
வண்டுதும்பிபோலாக வட்டமிட்டகருடனைப்போல்
முன்கந்துபாய்ந்தலவோ முதுகின்மேல்வெட்டுவாளாம்
தட்டியுதறிநிற்பான் தாக்குவானல்லியனை
எமனுமியமனைப்போ லிந்திரனுமிந்திரனும்
மலையுமலையோடு வந்தெதிர்த்தபாவனைபோல்
புலியும்புலியுடனே பதுங்கியெதிர்த்ததுபோல்
நான்குநாழிகைமட்டும் நல்லசண்டைபண்ணினார்கள்
பொற்றாமரைதனிலே பிறந்தெடுத்த அல்லியரும்
ஆலவாய்ச்சொக்கரென்று மாண்டவனைத்தானினைந்து
மதுரைமீனாட்சியரை மனதிலேதானினைந்து
முன்கந்துபின்கந்து முப்பத்திரண்டுகந்து
பக்கவளைவாகவந்து பாச்சலுடனெழும்பி
வீசினாள்வாளாலே வேறிரண்டுதுண்டாக
கருமபுகாணையைப்போற் கண்டித்துக்கீழ்விழுந்தான்
எறினாள்தேர்மேலே யெடுத்தார்பெருங்குடைகள்
நீன்முகன்விழுந்தானென்று நீலிசங்குதான்தொனித்தாள்
கேணைதிருப்பிவந்தாள் தேன்மொழியாளல்லியம்மாள்
நீன்முகன்மார்மீதில் நீலிரதமோட்டினாளே
செயங்கள்செயங்களென்று செயபேரியடித்துவந்தாள்

அல்லியம்மாள்மதுரைக்குப்பட்டங்கட்டிக்கொண்டது.

எழுபதுசேனாதிபதி எல்லவருமோடிவந்தார்
தப்பிப்பிழைத்தவர்கள் சகலசேனைகளெல்லாம்
அல்லிப்பெருமாட்கு அடிபணிந்துதெண்டனிட்டார்
அடைக்கலமாச்சியென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
தேவதுந்துமிமுழங்கத் தேவர்பூமாரிபெய்ய
ஆறுவிரவொன்னு மையன்மார்தாமறிந்தார்
சந்தோஷப்பட்டார்கள் தார்வேந்தரோடிவந்து
மகள்தன்னைப்பார்த்தல்லவோ மகிழ்ந்தார்கள்பாண்டியர்கள்
மதுரைத்தெருவனைத்து மகுடதோரணங்கட்டுமென்றார்
அரைநாழிக்குள்ளே அலங்கரித்தார்பட்டணத்தை
எங்குமலங்கரித்து எத்திசையுநீர்தெளித்து
வாழைமரம்கமுகுமரம் வாசலெல்லாம்நட்டார்கள்
சேனைகள்சூழ்ந்துவரச் செயபேரியடித்துவர
மேளங்களார்ப்பரிக்க மெல்லிவருகிறாளே

[illegible]த்தெருவைச்சுற்றி மாளிகையில்வந்தார்கள்
கொம்பால்மலையைக் குத்திச்செயிக்குமானையது
கன்னியர்கள் கட்டழகிப்பெண்களவர்
யானையைக்கண்டுமே யடிபணிந்துதெண்டனிட்டார்
கலையாதிமுன்போட்டுக் கன்னிமாரேதுசொல்வார்
அல்லிப்பெருமாளு மாரணாக்குமாயியாள்
நீங்கள்-தவப்பலனிப்பெற்றெடுத்த தையனல்லாளல்லியரும்
உன்னைக்காணவிருப்பமாகி யலக்கித்தவிக்கிறாளே
பார்க்கமனதாகிப் பதைத்துப்புலம்புகிறாள்
போசனமு மன்றுமற் புலம்பித்தவிக்கிறாள்காண்
உன்னுடனிருக்க வொருபொழுதுந்தாடாள்
பக்கமைப்பொறுக்காமே பத்தினியாளல்லியம்மாள்
அழுதகண்ணுஞ்சிந்தபுமா யழைத்தோடிவாருமென்றாள்
நீவாராமற்போனக்கால் மாண்டுவிடுவேனென்றாள்
செத்துமடிவேனென்றாள் செலவழித்துப்போவேனென்றாள்
கடுகெனவேவாருமென்று கையெடுத்துதெண்டனிட்டார்
கேட்டதமதயானை கெர்ச்சித்துதான்வருமாம்
யானைவரும்போது அழகானதாதியர்கள்
தெற்குதெருவாண்டி தேரோடும்வீதியிட்டு
அல்லியம்மாள் தன்னருகே யானைக்குமோடிவந்து
யானைவருகுதென்று அடிபணிந்துதெண்டனிட்டார்
மதுரைநகராச்சியவள் மாதுகன்னிதான்கேட்டு
கரும்புகைதனைத்தான் கட்டுக்கொட்டையையுமென்றாள்
தென்னமட்டை பனமட்டை தோதுகளையுமென்றாள்
பச்சரிசிசக்கரையும் பாக்குகளையுமென்றாள்
நுங்கைச்சரளமாற மருகலமெட்டுக்கொட்டை
கெஞ்சாவபினிகளும் கொண்டுவந்தையுமென்றாள்
இடிமருந்துபாஷாணம் பிளக்கொடியையுமென்றாள்

கொண்டுவந்துவைத்தார்கள் கொம்பனையாள்முன்றனிலே
வாழ்மதுரைபட்டணத்தில் மத்தகசம்வருகிறதாம்
யானைவருகுதென்று அம்மதுரைப்பட்டணத்தார்
மதுரைக்குடிபடைகள் மாளிகையிற்போய்நுழைந்தாள்
ஓடியொளிப்பார்களுத்தமானவர்கள்
அப்போதுமத்தகஜம் ஆங்காரமாய்நடந்து
தெத்துதெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
கடையுங்கடைத்தெருவும் கருமாரவீதிவிட்டு
அல்லியம்மாள்தன்னுடைய அரண்மனையில்வந்தார்கள்
யானையைக்கண்டவுட னல்லியெழுந்திருந்து
மத்தகஜமுன்னேவந்து வணங்கியேதெண்டனிட்டாள்
யானைக்குமுன்பாக ஆகாரம்வைத்தார்கள்
வயிராரவுண்டதுவே மயக்கம்பெரிதாச்சே
கண்கள்செவந்தனவே கனமயக்கங்கொண்டதுவே
அல்லிபெருமாளு மடிவணங்கியேதுசொல்வாள்
நான்பிறக்கவேணுமென்று நல்லதவஞ்செய்தார்களே
நீங்கள்தவசுபண்ணிபெற்றமகள் தடுமாறிநின்றுவிட்டேன்
அன்று-ஏழுபிராயத்திலே யெதிர்த்துவந்த நீன்முகனை
வெட்டித்தலையறுத்து வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
நீன்முகனைக்கொன்றுநான் நீலிபட்டமாகுகிறேன்
வாடிபெண்ணேயென்பார்கள் வையகத்திலாருமில்லை
அடியென்றழைத்தவர்கள் யாருமில்லைபூமியிலே
ஆண்டியிடவாயாலே யலைச்சல்படுகிறேன்யான்
சாதிகெட்டபண்டாரந் தாறுமாறாய்ச்சொல்லுகிறான்
சொல்லாதுஞ்சொல்லுகிறான் சென்மமுறுகுதம்மா
பொருத்துமுடியவில்லை யெரும்பாவிசொன்னதெல்லாம்
செல்வங்குலைந்துதம்மா சீரழிந்துநின்றுவிட்டேன்
ஆண்டியைக்கொல்வதற்கு அழைப்பித்தேனுச்சியென்றாள்
அல்லியதுவார்த்தைகேட்டு ஆங்காரக்கோபமுடன்
கண்சிவந்துமத்தகசங் காளையரைக்கொல்வதற்கு
தும்பிக்கையைதூக்கியல்லோ சுற்றியரையவரும
முதுகில்மட்சரேகைகளும் முன்னழகுங்கண்டதுதான்
மட்சவடிவுகண்டு மயங்கிற்றுஅப்போது
மட்சரேகைபடைத்தவர்கள் மண்டலத்திலாருமில்லை
அருச்சுனனொருவனல்லால் அவனியிலேயாருமில்லை
வாழ்விசையனல்லாமல் மண்டலத்திலாருமில்லை
தேவேந்திரன்மகன்காண் திருமாற்குமைத்துனன்காண்
துரௌபதையைமாலையிட்ட தேர்விசையனிவர்காணும்
அல்லியரைக்கன்னமிட ஆண்டிகோலமாகிவந்தார்
மாப்பிள்ளையைக்கொல்லவென்று மருந்துவிட்டாள்மாபாவி

சாலவனைக்கொல்வதற்குக் கனத்தமருந்திட்டானே
அல்லிதன்வார்த்தைகேட்டு அர்ச்சுனனைக்கொண்டுவிட்டால்
ஆயர்பெருமானுமே அறிந்தால்பழுதுவரும்
வீமனறிந்தாலே வெகுமோசம்நேர்ந்துவிடும்
அல்லியர்க்கேற்றதொரு அழகுள்ளபுருஷனிவன்
மகாராஜமாலையிட வையகத்திலாருமில்லை
செல்வமருமகன்தா னலேச்சல்படுவேனேன்
அருமைமருமகன்தா னலைச்சல்படுவானேன்
தமயிக்கையாலேதான் சுழற்றியடித்துக்கொண்டு
கும்பஸ்தனத்தில்வைத்து கூத்தாடிபாவையது
கண்டானேயானைதன்னை கண்கொள்ளாகோபமுடன்
மகயானைதான் புழுங்க மருந்தறிவான்பாவியிவன்
காட்டானைதான்மயங்க கனமருந்தறிவான்டி
என்னைமயக்கும்வகை யிவனறியமாட்டானே
ஆரடிதாதிகளே யடியங்கன்யானைதனை
மாறியடியுமென்றாள் மதயானைதன்னையவள்
அப்போதுமத்தகவசம் அல்லியரைப்பார்த்துரைகரும்
மாப்பிள்ளையும்நீயுமாக மணக்கோலம்வரும்போது
என்னையழைத்தாலும் ஏந்திழையேவருவேனோ
வேண்டியழைத்தாலும் வருவேனோமெல்லியரே
என்றுரைத்ததுவே இருண்டவனக்குக்கு
மதயானைபோனபின்பு மாயவரேதுசெய்தார்
மான்செவியுங்கண்கள் ரெண்டுமாயவனார்தெரியவைத்தார்
கணுணுந்தெரிகிறதே காதிரண்டுங்கேட்கிறதே
அல்லிப்பெருமாளு மாரணக்கேதுசொல்வான்
பாக்கியிலுமுகல்லவளே பவளசேனைநாயகியே
இந்தக்கிழவனைத்தான் என்னசெய்வேன்தோழியென்றாள்
செல்வக்குலமயிலடி தேன்மொழியேயென்னசெய்வேன்
பாண்டியபெருமாளே பதறுதேசற்றேகிலும்
அறிந்துநான்வாதுமல்லோ ஆச்சியரேசொல்லுகிறேன்
தெரிந்துநான்வந்துமல்லோ சொல்லுகிறேனுனக்கு
திடுக்கென்றெழுந்து தோழியருள்வருகிறாரோ
சங்கமறுராகுமெல்லவருதையலருமேதுசொல்வான்
ஓபாபெரியவரே யறிவைப்படைத்தவரே
நீரப்படிக்கவரே தெளிவறிந்தசங்கமரே
புதிதாதவசுப்பண்ணி புத்திமிகக்கற்றவரே
என்னிருந்துவந்தீர்கா ளிங்கேபுலம்புகிறீர்
வருவகையாக இங்கேவந்தீர்சொல்லுமையா
ஆர்காணுமாச்சியரே யருகில்வந்துகேட்கிறது
மல்லிகார்ச்சுனனிருந்து வந்தேனிதுவாதிபாய்
துங்கபத்திரிகோதாவரி துய்யகிருஷ்ணநதியுடனே

கேதாரகுசால்வழியும் ஸ்நானங்களாடிவந்தேன்
பாராஸ்தலங்களில்லை பணியாதகோவிலில்லை
மூழ்காததீர்த்தமில்லை மிதியாதகோவிலில்லை
புண்ணியகோடிதீர்த்தமாடிப் போரேனம்மா ராமேசுரம்
மதுரைநகரம்வந்து வைகைதீர்த்தமாடினேன்யான்
பிட்டுக்குமண்சுமந்த பித்தனையுந்தெரிசித்தேன்
நாறுபத்துஞ்சென்றதம்மா திகாரனென்வயது
தோலும்நரம்புகளும் தொங்குதுபாரெந்தனுக்கு
இப்போதுபின்னேயோ இன்னமரைநாழிகையோ
எப்போவேயென்சடலம் விறப்பதுயானறியேன்
அல்லிப்பெருமாளும் அரசாளும்நாயகியாள்
கன்னிகையென்றார்கள் கட்டழகிபல்லியனை
பத்தினியாளென்று வெகுபேர்களுஞ்சொன்னார்கள்
ஆகையினலேதானுசனங்களைத்தேடிவந்தேன்
எங்கள்முப்பாட்டனாளையிலே தைத்தபழஞ்சோளி
அட்சபாத்திரங்கா ணடிப்பிறலாச்சுதென்று
சோளிக்குபழஞ்சேலை கேட்கவந்தேன்சுந்தரியே
உடுத்திக்கிழிந்திருக்கு முள்ளாடையொருமுழந்தான்
எனக்குமவன்தன்னாலே எழுந்திருக்குதுபோவேணம்மா
அவ்வார்த்தைதான்கேட்டு ஆரணங்குவந்துவிட்டாள்
அல்லியர்க்குத்தெண்டனிட்டு அன்புடனேதுசொல்வாள்
ஐயாபெரியவராமேலாயாசப்பட்டீரே
அவர்முப்பாட்டனாளையிலே தைத்தபழஞ்சோளியய்யா
அட்சயபாத்திரந்தா ணடிபிறலாச்சுதம்மா
சோளிக்குப்பழஞ்சேலை கேட்கிறார்சுந்தரியே
பிச்சைகொடுத்தனுப்பும் போய்விடுவான்சுவாமியென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அரசிதுரைநாயகியாள்
அறுபதுமுழப்புடவை அழகானபச்சைவடம்
எடுத்துக்கொடுக்கணடி இரக்கமில்லாபாவியர்க்கு
பச்சுநச்சென்றிறது நரைக்கிழவன்போராட்டம்
எப்போதுதான்தொலையும் எடுத்துக்கொடுங்களென்றார்
ஓட்டம்நடையுமாக ஓடிவந்தார்தாதியர்கள்
சேலைவடங்கொண்டுவந்து பண்டாரமுன்னேவைத்தார்
ஐயாபெரியவரே யறிவுபடைத்தவரே
நாசனிக்குப்பழஞ்சேலை சுந்தரியைக்கேட்டீரோ
முப்பதுமுழப்புடவை முன்னேவைத்தோமெடுத்துப்போம்
ஆர்காணுமாச்சியரே ஆரணங்குநீர்கேளும்
இப்படிக்குவேணுமானால் எனக்குமிகவுமுண்டு
நாட்டிலேகொண்டுலட்சம் நமக்குக்கொடுப்பார்கள்
பத்தினியாள்கட்டினதோர் பாவாடையுள்ளாடை
உள்ளாடைசேலைதனி லொருமுழம்வேண்டுமென்றார்

அவ்வார்த்தைதனைக்கேட்டு அல்லியருங்கோபங்கொண்டு
இப்படிக்குயிச்சைகேட்டோருண்டோ வுலகுதனில்
பார்தனிலும்நல்லதொரு பவளசேனையேதுசொல்வாள்
ஆச்சியரேயுந்தனக்கு அதனாற்பழுதுமில்லை
கொடுப்பதினாலேயம்மா குறைவொன்றுவருவதில்லை
அழகில்லாக்கன்னிதோர் ஆடைதக்காற்பேதமென்ன
கொடுக்காமற்போனாலவன் கொஞ்சத்திற்போவதில்லை
சனியன்தொலையவேணும் சற்றேகொடுத்தனுப்பும்
அப்படியேநான்கொடுத்தால் ஆண்டியவன்போவானோ
கேட்டுவாதாதியரே கேடுகெட்டசங்கமனை
பார்தனிலும்நல்லவளாம் பவளசேனையோடிவந்து
ஐயாபெரியவரே அறிவைப்படைத்தவரே
தீர்ப்படித்தவரே தெளிவறிந்தசங்கமரே
உன்னாடைசேலையது ஒருமுழத்துக்காலே
போதுமோபெரியவரே புண்ணியரேசொல்லுமென்று
ஆனல்லோ ஆச்சியரே அதிலுமொருபகைநற்
கத்திறையாள்பிச்சைதந்தால் இருகையுமாவாங்கிக்கொள்வேன்
தேன்மொழியாள்சேலைதனைத் தீட்டியேயான்பிடிக்க
அள்ளியேநீகிடுவேன் ஆனந்தமாயக்கு
இருகையிலும்வாங்கி யாதிறையாளிகவேண்டும்
உலகத்திலுள்ளபடி உத்தமியேதப்பாது
அவ்வார்த்தைதனைக்கேட்டு அழகானமாதியரும்
மெருடத்தானைச்சியற்கு வந்தவனும்பின்தன்னிட்டான்
ஆச்சியரேநீகேளு அடியேனொருவார்த்தை
ஐயருக்குப்பிச்சையது ஆமானக்கேதக்கவினபு
உன்னைத்தலத்தைத்தான்பிடித்துக்கவிடுமேபொல்லவ
உலகத்திலுள்ளபடி யுனக்குக்குறையுமில்லை
தலைவிதியெழுத்திலும் மைகயலேமென்றேமாழி
உடுத்திடுசேலையது உன்னாடை தான்கிழிக்கான்
இக்குறைக்காகுமென்று மாதவிளம்பேரப்பாள்
மாக்கையந்தசங்கமனும் வாழ்வசெபுகன்பார்த்து
அள்ளியேநீவிட்டார் ஆமானருசைத்தலையில்
பத்தினியவளார்த்தியவர் பல்வேளனிசைக்கண்டனரே
அழகானபின்னைப்போல் வல்லியக்குசொன்னதுது
மன்னியமக்கிறேளே கட்டழகியல்லியவள்
காண்டுபவருக்சலஞ்சு கற்றுப்பாரத்துவிட்டார்
தெத்தகொருதாண்டி ராசாகட்டுமை
மாயன்பெருமாளிடம் வந்துவிட்டாளருச்சனனும்
அல்லியின்மாச்சலிலே அதிசயங்கொண்டனாம்
மாயருடன்சொல்லியவிலோ பவளந்தாபபப டேருதன்

மாலைதரிப்பதெப்போ மனதுகுறைதீர்வதெப்போ
கூடியணைவதெப்போ குறைகளெல்லாந்தீர்வதற்கு
மன்மதபாணமது மார்பு ஐப்போகுதென்றான்
அப்போது அல்லியரும் அவள்சோபந்தீர்ந்தெழுந்து
ஆரடிதோழியர்களாயிரம்பேர்வாங்களடி
ஆண்டியையக்கொண்டுவாரும் ஆக்கினைகள்செய்யவேணும்
பாக்கியிலும்நல்ல பவளசேனையேதுசொல்வான்
சந்திரனோ சூரியனோ சதுர்முகபிர்மாவோ
மாணிக்கச்சொக்கலிங்கம் வடிவுகொண்டுவந்தாரோ
எங்கென்றுதேடுவோம் எழிலானசங்கமனை
போனாலும்போய்ப்போறான் போவோமரண்மனைக்கு
அல்லியரைக்கூட்டிக்கொண்டு அரமனையில்வந்தார்கள்
மாளிகைவாசலது மண்டபம்வந்தார்கள்

ஸ்ரீகிருஷ்ணபகவான்பாம்புப்பிடாரனாகவும் அருச்சுனன்
பாம்பாகவும்வடிவுகொண்டது

அப்போதுபெருமானும ஆயரென்னவடிவெடுத்தார்
தொண்ணூற்றம்பத்துஞ்சென்ற துவண்டக்கிழவனானார்
பண்ணைப்புப்போலாகப் பழுத்தகிழவனானார்
பத்துவிதப்பாம்புகளைப் பாரளந்தாருண்டுபண்ணார்
வாள்விசையனருச்சுனனை மாணிக்கப்பாம்பாக்கி
போர்விஜையனருச்சுனனை பெட்டியிலேதானடக்கி
மூப்பதுவிருதுகட்டி முகடிக்குழலெடுத்து
பாம்புப்பெட்டிக்காவடியைப் பாரளந்தார்தோளில்வைத்து
மகுடிக்குழலூதி வாராரேயெம்பெருமாள்
அல்லியவள்பிறந்த அழகானபொய்கையண்டை
ஆலமரத்தடியில் அரிராமர்வந்தமர்ந்தார்
நடுகாட்டிடைச்சியர்கள் நானூறுகன்னிகளும்
பாற்குடங்கள்தாமெடுத்துப் பத்தினிக்குக்கொண்டுவாரார்
காராம்பசும்பாலைக் கப்பங்கட்டிவைத்தார்
ஆலமரநிழலிலே அனைவரும்வந்தமர்ந்தார்
பெண்ணரசுமாதரெல்லாம் பிடாரனைக்கண்டார்கள்
ஐயாபெரியவரே அழகானபிடாரனேநீர்
எந்தவூரெந்தநாடு எங்கிருந்துவந்தீரையா
ஊரென்னபேரென்ன உத்தமரேசொல்லுமென்றார்
கொங்குமலையாளம் கொச்சிதேசமெங்களது
பாம்புபிடிக்கிறதும் பவனியாட்டிவைப்பேனென்றார்
ஆனால்கேளையாவே அடியேனொருவார்த்தை
என்னென்னபாம்புவிதம் எடுத்துநாட்டுமென்றார்
பரிபாயிருக்குதம்மா பாம் [illegible] ட்டாது
ஐந்துநாளாச்சுதம்மா ஆகாரந்தான்புசித்து

போசனங்களில்லாமல் புல்லுடல்பட்டுதம்மா
பாலதுதான்கொடுத்து பசியதுதீர்ந்ததானால்
அப்போவிளையாடும் அழகானபாம்பிதுதான்
அவ்வார்த்தைதான்கேட்டு அங்கிருக்குமாதரெல்லாம்
கொஞ்சம்பால்வார்க்கிறோம் குடிக்கவையும்பாம்பையென்றார்
அப்போதுபிடாரன் ஆவரவரேதுசொல்வார்
ஒருவர்கண்பார்க்கமுடியாது கணமுள்ளபாம்பிதுதான்
பக்கத்திரைவளைத்து பாற்குடத்தைமுன்புவைத்தால்
உண்டிபசியாறும் உத்தமியேஇப்பாம்பு
பாற்குடங்களைத்திலுள்ள பால்களையெல்லாம்
பாம்புகுடித்தது,
அத்தண்டபெண்களெல்லாம் அவ்வார்த்தான்கேட்டு
பாற்குடமுள்ளதெல்லாம் பார்த்திர்த்துவைத்தார்கள்
சுற்றித்திரைபோட்டு சீரானபாம்பைவிட்டார்
பக்கத்திரைபிளந்து பாம்புகளையுள்ளேவிட்டார்
ஆறலூருமன்னன் அருச்சுனவீரியனும்
பாலைக்குடித்துவிட்டு பானையுருட்டிவிட்டான்
திரையெடுத்துப்பார்த்தார்கள் திகிலடைந்தார்பெண்களெல்லாம்
ஐயையோதெய்வமென்று அறைந்துகொண்டாரெல்லவரும்
பாவிகெடுத்தாயே பாலெல்லாம்போச்சுதடா
இத்தனைபாலையது எத்தாம்குடித்ததடா
அல்லியறிந்தாலே ஆக்கினைகள்செய்வாளே
தாமணிப்போட்டல்லவோ தலையைத்தறிப்பாளே
கொலைவினைப்பாளே குடிகேடுவந்திடுமே
ஆடாபாதகனே அறிவுகெட்டபிடாரகீ
கொஞ்சம்பால்குடிக்குமென்று குடமெல்லாம்வைத்தாயே
ஊரைக்கலையாய்ப்பிடிக்க கிழத்தலைக்குக்கேடுவா
எங்களைக்கொடுத்தாயடா எங்கள்பாவங்கொண்டாயடா
என்றுபுலம்புகிறா ரிளங்கொடிமாரெல்லாரும்
அழுதகண்ணுஞ்சிந்தையுமாய் போறார்கள்மாதரெல்லாம்
அல்லியம்மாள்தன்வாசல் அரண்மனையில்வந்தார்கள்
அல்லியர்க்குமுன்புவந்து அடிவணங்கி தெண்டனிட்டார்
அச்சியரேயென்தாயே அறிவயதைநீர்கேளும்
மதுராபுரியருகே வைகைக்கரையோரம்
ஆலமரத்தடியில் அங்கயொருகிழவன்
பாம்புப்பிடாரனவன் பாருலவியமறியோம்
பத்துவிதப்பாம்புகளின் பஞ்சரத்திலேப்பாம்பிதுதான்
சந்திரனைப்போலாகத் தருப்புருநெளிந்துமெச்சி
சூரியனைப்போலேயல்லோ துலங்குதேயென்றாச்சி
வெற்பவளமது மின்னுகொக்கியைப்போல்
மின்னிக்கொடிபோலே விளங்குகிறதப்பாம்பு

பாம்புபசியா யிருக்கிறது பால்வார்த்துபோகவென்றான்
பாற்குடத்தைக்கீழிறக்கிப் பாலதுவார்க்கவந்தேவ
கண்ணாலேபார்த்தாலே காண்டிபால்குடியாதென்றான்
அந்தப்பாலையுந்தா னப்பாம்புவுண்டுதம்மா

அல்லியரசாணி பாம்புப்பிடாரனைவரவழைத்தது.

அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியருமென்னசொல்வாள்
இந்தவிசயத்தை எங்கிலுநான்கண்டதில்லை
பாம்புகளைப்பார்க்கவேண்டும் பிடாரனையழையுமென்றாள்
அந்தக்கிழவனைப்போய் அழைத்தோடிவாருமென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அலங்காரத்தாதியர்கள்
ஐயாபெரியவரே ஆச்சியழைக்கிறாள்காண்
பாம்புதனையாட்டிவைத்தால் பாக்கியங்கள்தந்திடுவாள்
வேணுமென்றவுச்சிதங்க ளுத்தமியாள்தான்கொடுப்பாள்
வாருமையாவென்றுசொல்லி வருகிறார்தாதியர்கள்
அப்போபிடாரனவன் அரிராமர்தாமெழுந்து
காவடியைத்தோளில்வைத்துக் கடுகிவழிநடந்தார்
மகுடிக்குழலூதி வந்துவிட்டார்தென்மதுரை
கடையுங்கடைதெருவுங் கருமாரவீதிகளும்
அங்காடிவீதிகளும் அரண்மனைத்தெருதாண்டி
அல்லியம்மாள்தன்வாச வரண்மனையிற்போய்புகுந்தார்கள்
வாசலும்வாசலது படியேழுதான்தாண்டி
சிங்காதனத்துக்கு முன்பாகவந்துநின்றார்
உத்தமியைக்கண்டவனும் ஒதுங்கியேதெண்டனிட்டான்
வந்துபணிந்தவரும் வணங்கியேநிற்கலுற்றார்
ஐயேபிடாரனே அப்பாம்பையாட்டுமென்றாள்
வண்ணவண்ணப்பாம்பெடுத்து விதவிதமாயாட்டலுற்றான்
ஆடாதகூத்துகளை யாட்டிவைத்தான்பிடாரனவன்
ஐயாகிழவனாரே அன்பானபிடாரனே நீ
வேரிற்பவளம்போலே மின்னுகுதுபெட்டியிலே
சந்திரகாசம்போலே தளராபுகுதுபெட்டியிலே
சூரியன்போலே துலங்கிறதுபெட்டியிலே
என்னபாம்பிருக்கிறது எடுத்துநீயாட்டுமென்றாள்
ஆச்சியரேநீர்கேளும் அடியேனொருவார்த்தை
என்னோடேதான்பிறந்த எனதிளையதங்கையவள்
தங்கையவள்வளர்த்துவந்த தயவானபாம்பிதுதான்
இப்பாம்பெடுத்தாலும் யிப்பாம்பெடுத்தறியேன்
பெண்டுகளைக்கண்டாலே பிரியமுடனோடிவரும்
மார்மேலுந்தோள்மேலும் மடிமேல்புரண்டாடும்
தோளின்மேலேறியதுந் தும்பிப்பறப்பதுவும்
மார்பின்மேலேறுவதும் மடியிலிருக்குமது
முகத்தோடேமுகமணைந்து முத்தங்கொடுத்தாடும்

மார்பின்மேலேறியல்லோ மருவிவிளையாடும்
கீதங்கள்பாடுமது கொண்டாடிக்குமது
ஆடாதகூத்துகளும் அரும்பவனியாடுமது
வெட்டும்பிளெக்குமது மெத்தெனவேவாயிலிடும்
ஜெம்பிலைச்சுருளெடுத்து விரும்பியதுகொடுக்கும்
பஞ்சரத்னப்பாம்பிதுதான் பத்தினியேகாணெடுக்கேன்
உன்னையிதுகண்டாலே ஓடிவந்துமடியிலேறுமே
இப்பாம்பைநானெடுக்கேனென்றானேபிடாரனீ
ஆனால்கேளாயாவே அன்பானபிடாரனீ
அப்பெரியபாம்பினது அதிசயத்தைப்பார்க்கவே ஏனும்
சற்றேயெடுத்துவிடும் சந்தேகம்படவேண்டாம்
உசிதங்கள்வேணதெல்லாம் உன்தனுக்குயான்றருவேன்
மெத்தவருந்தினாளே மெல்லினல்லாளல்லியரும்
அப்போபிடாரனவன் அப்பாம்பைதானெடுத்தார்
பெட்டிதிறக்கையிலே போனானாம்விசயன்

அர்ச்சுனன்பாம்புருக்கொண்டு அல்லியம்மாளைமருவியது.

அல்லிமடிமேலே அருச்சுனனேறினானே
மார்மேலுந்தோள்மேலும் மருவிவிளையாடுகிறான்
முகத்தோடேமுகமணைந்து முத்தங்கொடுக்கிறானே
போதுமையாமைத்துனரே போய்வாருஞ்சுவாமியென்றான்
மாயவனாக்கண்காட்டி வழிபிடித்துப்போங்களென்றான்
தும்பிபறக்கிறதுஞ் சேர்ந்துவிளையாடுவதும்
கொண்டாடிப்பதுவுங் கூத்தாகஆடுவதும்
வெற்றிலைபாக்கெடுத்து மெல்லியர்க்குக்கொடுப்பதுவும்
பார்த்துமகிழ்ந்தாளே பத்தினியாளல்லியம்மாள்
ஓபாபிடாரனே அன்பானவார்த்தைநீகேளும்
இன்றைபார்த்திருக்க இருக்கட்டுமிப்பாம்பு
நாளைக்குவந்துநீதான் வாங்கிப்போம்பாம்பையென்றாள்
அவ்வார்த்தைதான்கேட்டு அன்புடனேபோதுசொல்வான்
என்னுடையதங்கையவள் இப்பமுன்னாயியாள்
பஞ்சணைமெத்தையிலே படுத்திருக்கும்போதையிலே
கூடப்படுத்துக்கொண்டு குலாவிடுறபாம்பிதுதான்
பக்கத்திலிருக்கவில்லை பத்தினியாள்தங்கையவள்
காணமற்போனாலே கலங்கித்தவிப்பாளே
பாராமற்போனாலே பரிக்கக்கொடுத்தாளே
உன்றனுடன்குலவியாளே உறக்கங்கெட்டுத்தூக்காளே
அல்லவென்றுன்னிடத்தில் வாங்கிப்போனான்விட்டுப்போனால்
பாம்புகளோர்ந்துபோருமபத்தினிமேல்...
அரைப்பலம்குறைந்துபோகும் அந்தப்பாம்பு
கரைந்துதுன்பத்தால் கலங்கும்...

தராசுகிலையாக நிறுத்துப்போம்பாம்பையென்றான்
அப்படியேசம்மதித்தான் ஆயன்பிடாரனவன்
எடுத்துத்தராசில்வைத்து இனை பார்த்துதந்துவிட்டான்
பாலும்பழங்களுமே பசிபாமல்வையுமென்றான்
நாளைவருகிறேனே நாயகமேபோகிறேனையான்
பாஷையிலேயல்லோ பார்த்திபனேதுசொல்வான்
எட்டொருநாள்போனபின்பு இங்கேவாமைத்துனரே
இந்தவிசுவாசமெனக்குத்தெரியுமென்றான்
போங்காணுஞ்சுவாமியென்று புகழாகத்தெண்டனிட்டான்
பாம்பைகொடுத்தல்லவோ பாரளந்தாபோய்நடந்தார்
பாலும்பழங்களுமே பாம்புக்குவைத்தார்கள்
பார்த்திபனருச்சுனரும் பசியாறித்தானிருந்தார்
அந்திகாலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தார்
ஆதித்தன்தான்மறைய அல்லியம்மாளேதுசொல்வாள்
அநுஷ்டானம் அனைத்துமிகக்கழித்து
செபதபங்களுள்ளதெல்லாம் செய்தாளேயல்லியம்மாள்
சொக்கரைப்பூசைசெய்து செவிதனிலேபூச்சொருகி
போசனச்சாலையிலே புகுந்தாளேயல்லியம்மாள்
சுருக்கரைப்பாற்போசனமும் சாதங்கறிவகையும்
உண்டுபசியாறி உத்தமியாள்கையலம்பி
பஞ்சணைமெத்தையது பள்ளியறைசோடியென்றாள்
தோழிமாரானவர்கள் சுருக்காயெழுந்திருந்து
கன்றுன்றுடையதொரு கனவயிரக்கட்டிலிட்டார்
மெத்தைமடித்து இட்டார் மேலேதலையணைபோட்டார்
சாம்பரிந்தஜங்கலப்பூ கட்டிலின்மேல்தான்சொரிந்தார்
தங்கத்தலையணையுஞ் சார்மணையுமிட்டார்கள்
ஒருகுதலையணையும் ஓய்யாரத்தின்டுவைத்தார்
அருகுதலையணையும்வைத்து அலங்காரஞ்செய்தார்கள்
அத்தாபுனுகுகளும் அள்ளித்தெளித்தார்கள்
கதம்பமுங்கஸ்தூரி கரைத்துத்தெளித்தார்கள்
சந்தனமும்பன்னீருஞ் சாடிறைரெத்திசையும்
சந்தனப்புகைசொடுத்து சாம்பிராணிதூபமிட்டார்
குத்துவிளக்குகளைக் கொளுந்துபடவேற்றினார்கள்
மாடங்கள்தோறுமங்கே மணிவிளக்குமேற்றினார்கள்
சன்னலிலேபன்னீரைச் சாடிறைரெத்திசையும்
பஞ்சணைமெத்தையண்டை பாக்குப்படிகம்வைத்தார்
முத்துசுட்டசுண்ணாம்பும் மோரங்கிவெற்றிலையும்
ஆரங்கிபாக்குகளும் அழகுநலவெற்றிலையும்
காய்சசாக்களிப்பாக்கும் கம்மாறுவெற்றிலையும்
வாசாய்ச்சுருள்மடித்து மாணிக்கத்தட்டில்வைத்தார்
கின்னரியிற்பாலைவைத்து கொண்டிகையில்தீர்த்தம்வைத்தார்

சோடித்த காமாட்சியென்று தெண்டனிட்டார் காதியர்கள்
பாம்பெடுத்து மடியில்வைத்து பத்தினியாள் தானடந்தாள்
பஞ்சணைமெத்தையிலே படுக்கையறைபோய்ச்சேர்ந்தாள்
மாணிக்கக்கதவடைத்து வயிரத்தாள் பூட்டினாளே
அந்தவண்ட தாதிகளும் அங்கங்கே பள்ளிகொண்டார்
பஞ்சரத்னப்பாம்பெடுத்து பக்கத்தில்வைத்துக்கொண்டாள்
பைங்கிளியாளல்லியம்மாள் பள்ளிகொண்டாள் மலரணையில்
அப்போதருச்சுனரும் ஆயனைத்தானினைந்து
மாயன்பெருமானை மனதிலேதானினைந்து
எனசோபந்தெளியவேண்டும் ஸ்ரீராமா தயவுசெய்யும்
காமவிகாரமது களைதீரவேண்டுமென்றான்

ஸ்ரீகிருஷ்ணபகவான் பூதேவி விஜயமுத்து
அல்லியின்மேல் பிரவேசிக்கச்செய்தது.

அருச்சுனன்தன் துயரமறிந்தாரே யெம்பெருமான்
சீக்கிரமாய்முன்பிறந்த திருவிளையாள் பூதேவி
பூமிதேவிநாயகியை முகில்வண்ணர்தாமழைத்து
மருட்டித் துறைச்சியர்க்கு மாறாத நித்திரையை
விடுத்துமொருசாமம் மெல்லிநித்திரை தெளியாமல்
மாறாத நித்திரைகொள்ளுமென்று வரமிட்டார்மாயவரும்
வந்துநித்திரைகொண்டாள் வளமைபெரியபூதேவி
அனந்தல் தெளியாமல் அசந்துநித்திரைபோகலுற்றாள்
பாம்புவடிவைவிட்டு பார்த்திபனருச்சுனனும்
எப்போதும்போலாக இளவிசயன்வடிவுகொண்டான்
சங்கரருமபார்வதியும் சருவியிருந்ததுபோல்
சிவனுடனேபார்வதியாள் சேர்ந்திருக்கு பாவனைபோல்
சென்னகரிராமருக்குச் சீதைவந்துவாய்த்ததுபோல்
கந்தருடன்வள்ளியம்மை கைகலந்தபாவனைபோல்
சாரையுஞ்சர்ப்பமும் சருவிமயலானதுபோல்
மானுங்கலையுமல்லோ மருவியணைந்ததுபோல்
கூடிமருவினரே குங்குமப்பூமெத்தையிலே
கன்றுடுமேலேயல்லோ கடுகுருண்டபாவனைபோல்
மல்லிகைப்பூமேலே வண்டுறைந்துவாய்த்ததுபோல்
மருவியணைந்தனனே மகாவிடாய்தீர்ந்தானே
ஆறாதமோகமெல்லாம் ஆறினனருச்சுனனும்
தீராதசோகமெல்லாம் தீர்ந்தானருச்சுனனும்
மங்கையவள்புணர்ந்தல்லோ மருவினானருச்சுனனும்
வெள்ளிப்பூண்கையிலே வெடிகொட்டான்கூவும்போது
பாம்புருவெடுத்துப் பக்கம்படுத்திருந்தான்
எப்போதுஞ்சர்ப்பம்போல் வெகுவிசையனிருந்தான்
பொழுதுவிடிந்ததுமே பொற்கொடிமார்கன்னியர்தாம்
தோழியர்காதியர்கள் திடுக்கிட்டெழுந்தார்கள்

அல்லிப்பெருமாளும் அசந்துநித்திரைபோகலுற்றாள்
கொம்பனையைத்தோழிமார்கள் கூவியெழுப்பினார்கள்
தட்டியெழுப்பினார்கள் தாமக்குழலாளை
பொட்டெனக்கண்விழித்துப் பொற்கொடியாள்தானெழுந்து
அலைகுலையத்தனகுலைய ஆடைகலைந்திருக்க
கதவைத்திறந்தாளே கட்டழகிஅல்லியம்மாள்
பாங்கியர்கள்சூழவேதான் பவளசேனைவந்துவிட்டாள்
அல்லிப்பெருமாளை ஆரணங்கைத்தான்பார்த்து
உற்றுற்றுப்பார்த்தவளும் உத்தமியைக்கேட்கலுற்றாள்
ஒருகாலுமில்லாத உச்சிதங்கள்காணுதம்மா
வாரிமுடித்ததலை மயிருங்கலைந்ததென்ன
கோதிமுடித்ததலை கூந்தல்கலைந்ததென்ன
மஞ்சளழிந்ததென்ன மார்பழிந்துபோனதென்ன
பொட்டுக்கலைந்ததென்ன பூவழிந்துபோனதென்ன
கண்ணிலிட்டமைகளெல்லாங் கரையவந்தகாரணமேன்
கோவைப்பழம்போல் குமரியின்செவ்வுதடும்
குமரியின்செவ்வுதடும் கோதியிருப்பானேன்
பல்லக்கைகலைவானேன் பஞ்சணைகலைவானேன்
காம்பரிந்தஜங்கலப்பூகசங்கிகசங்குவானேன்
மங்கையரேயுந்தனுக்கு வாட்டம்வந்தவாறேது
அல்லிப்பெருமாளு மாரணங்குமேதுசொல்வாள்
பிடாரனவன்சொன்னவார்த்தை பொய்யல்லதாதியரே
மனிதருடன்கூடவே மருவினபாம்பிதுகாண்
பஞ்சணைமெத்தைமீலே பக்கத்தில்வைத்திருந்தேன்
ராவில்விளையாடிற்றே இளங்கொடியேயென்தோழி
[illegible]முத்தின்மிதியடியை தொட்டுநடந்தசைந்தாள்
[illegible]யைத்திப்போய்ப் புனல்கங்கைநீராடி
[illegible]கொண்டுபல்விளக்கி ஏலைகொண்டுநாவழித்து
[illegible]கொடியாள் கமலமுகஞ்சுத்திசெய்து
[illegible]பல்லும மதிமுகஞ்சுத்திசெய்து
[illegible] திருநீற்றுக்காப்பணிந்து
சிங்காரமெத்தையின்மேல் தேன்மொழியாள்வந்தமர்ந்தாள்
ஆரடிதாதியரே அலங்காரத்தோழியரே
பாட்டுதனக்குப்பாலும் பழக்களுமவலுமென்றாள்
கொண்டுவந்துவைத்தார்கள் குடம்நிறைந்தபாலதுவை
பஞ்சரத்னப்பாம்பதுதான் பாலைக்குடித்ததுவே
அப்போதுபெருமாளும் ஆயாசர்தாமெழுந்து
பிடாரனைப்போலாகப் பெருமாளும்வந்துவிட்டார்
வாசலுள்ளாசலது படியேழுந்தாண்டி
அல்லியம்மாள்முன்னேவந்து அடிபணிந்துதெண்டனிட்டார்
ஆக்கியவீரர்கேளும் அடியேனொருவார்த்தை

இப்பார்ப்புயில்லாமல் என்றுடையதங்கையவள்
அழுதமனனுருந்திருக்கையுமாய் அழுதுண்ணமாட்டாமல்
கண்ணீரைவிட்டவளும் கலங்கியழுதாளே
கேளாதகாரத்தையெல்லாம் கேட்டேனம்மாவுன்றலே
உன்றலேபட்டகளை உத்தமியேபோதுமம்மா
என்னுடையபாம்புதான் எத்தனைகரைந்துபோச்சோ
எவ்வளவுதேய்ந்துதோ எதுவாகிருப்பேனென்றார்
கொண்டுவந்துநிறுத்தினார்கள் கொப்பெனவேதிராசுதனில்
பாரமிகக்குறைந்து பாம்புதட்டேழும்பியது
அரைவாசிகுறைந்ததம்மா அழகானபாம்புதான்
இன்னமிரண்டுநாளிருந்தால் இங்கேதான்சாகுமம்மா
அதியாமல்விட்டுப்போனேன் அனர்த்தம்வரலாச்சுதம்மா
கொஞ்சமிடைக்குத்தான் கொண்டுவாருமரத்தினத்தை
என்றுசொல்லத்தான்கேட்டு இளங்கொடியல்லியம்மாள்
வச்சிரமுமாணிக்கமும் வைத்திடைக்கட்டிதந்தாள்
பாம்பெடுத்துப்பெட்டியிலே பாரளந்தார்வைத்துக்கொண்டார்

ஸ்ரீகிருஷ்ணபகவானருச்சுனனுக்கியபார்வைபடுத்துப்போனது
போகிறதுசரியென்று போய்நடந்தாரடாரணையன்
கோட்டைக்கடந்தவரும் கொத்தளமுங்காண்டாண்டி
தெருத்தெருக்கடந்து தேரோடுவீதிவிட்டு
ஆரணியக்கன்னிலே அரிராமர்வந்துவிட்டார்
ஆனைமுகுமன்னவன் அர்ச்சுனனோடுசொல்வார்
வாழ்வரசிஅல்லியரை மாலையிடுவதெப்போ
தாலிதரிப்பதெப்போ சுவாமிபெருமானே
பட்டணமிருந்துநாத்தூக் கலியாணஞ்செய்வதெப்போ
என்றுதெளியுமோ எக்காலஞ்சென்றிடுமோ
அல்லிமேற்சிந்தையா அலைகிறுனருச்சுனனும்

ஸ்ரீகிருஷ்ணபகவான்மறுபடியுமமிருகங்களை உண்டுபண்ணினது
அன்றுபோய்மற்றநாள் அரிராமரேதுசெய்தார்
மாயமிருகங்களை வனத்திலேயுண்டுபண்ணுர்
காட்டானைசிங்கங்களும் காடுபுலியாளிகளும்
ஏனங்கடைமைகளும் கருமைச்சூரக்குகளும்
புள்ளிமான்முள்ளம்பன்றி புனுகுபூனைமுயல்களுடன்
மயில்குயிலன்னமும் வன்னவண்ணபட்சிகளும்
அனந்தமானமிருகமெல்லாம் அரிராமருண்டுபண்ணுர்
மதுரைக்குப்படைகள் வனத்தில்வர அஞ்சுகிறார்
கண்டவனையெதிர்க்கிறது காட்டானைசிங்கந்தான்
ஓடிபதுங்கியல்லோ ஒளிபார்சனங்களெல்லாம்
அழுதகண்ணுந்தேம்பிக்கையுமாய் அல்லியண்டையோடிவந்தார்
அழுதமுகத்துடனே அல்லியெதிரிவந்தார்
இத்தனைநாளிழைந்தோம இப்படியில்லாதிருந்தோம்

என்னகுறைசெய்தோமோ இயலானமிருகமம்மா
காட்டானைத்துங்கரடிபுலி கண்டுஓரதுமம்மா
எந்தவிதம்நாம்பிழைத்து இருக்கமில்லாதிருப்போம்
மிருக்கபுன்றிமானினமும் விம்மிதுரத்துதம்மா
மறுதேசம்போய்நாங்கள் வாகாய்பிழைப்போமம்மாள்
மதுரையிலுள்ளஜனம் வைகைகுடிபோறோமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு வலங்காரத்தாதியர்கள்
அல்லியம்மாள்தன்னுடனே அறிக்கையிட்டார்தாதியர்கள்
மகுடத்துரைச்சியவள் வார்த்தையதுகேட்டு
வேட்டைகாரபெண்களை விரைந்தோடியழையுமென்றாள்
குறவர்பெண்கள்மறவர்பெண்கள் கூட்டிவாதாதியென்றாள்
வில்லியப்பெண்களைநீ வேட்டைக்கழையுமென்றாள்
கேட்டதகாதியர்கள் கொப்பெனவேயோடிவந்தார்
வேட்டைக்காரப்பெண்களைத்தா னோடியழைத்தார்கள்
அப்போதுவில்லியர் மெல்லியர்வாறார்கள்
கார்செருப்புந்தோறகுல்லாவும் கைதனிலேசில்லாக்கோலும்
இரட்டைகுண்டுதுப்பாக்கி இருதோளில்வைத்தார்கள்
பன்றிகுத்தும்வல்லயங்கள் பாங்குகளுந்தானெடுத்தார்
மான்வலையுமுயல்வலையும் வகையுடனேதானெடுத்தார்
உண்டுவில்லுஞ்சுண்டுவில்லுஞ் சுங்காணிவில்லெடுத்தார்
வேட்டைபெண்களுள்ளவர்கள் விருதுகட்டிவருகிறார்கள்
வெள்ளித்தமுக்கடித்து வெண்கலக்கொம்பூதிவாரார்
பொன்னின்தமுக்கடித்துப் புறப்பட்டார்பெண்களவர்
வேட்டைநாயுஞ்சங்கிலியும் விருதுகட்டிவாரார்கள்
கருநாயுஞ்சங்கிலியும் கடுகெனவேகூட்டிவாரார்
அல்லியம்மாள்வீதியிலே அனைவரும்வந்துநின்றார்

அல்லியம்மாள்மறுபடியும்வேட்டைக்குப்போகிறது.

ஐயாயிரந்தோழியர்க ளடங்கலும்பயணமென்றாள்
பல்லக்கைசோடியென்றாள் பத்தினியாடல்லியரும்
கனககண்டிசொப்பமிட்டுக் கன்னியர்கள்முன்னேவைத்தார்
ஆயிரம்பெண்களவ ரழகுள்ளகுதிரையேறி
பாண்டியபெருமாளுமே பல்லக்கிலேறினளே
பாராசாரிபுரவியது பஞ்சகல்யாணியது
விருதுதிரைசோடித்து மெல்லியர்களைகொண்டுவந்தார்
ஏறினாள்கனககண்டி எடுத்தார்கொடிவிருது
யானையின்பேரிகைதா னடிபடுதேகுபுகுமென்று
வெண்கலப்பேரிகைகள் விருதுமுழங்குதங்கே
மேளமுழங்கிறது மும்மண்டலமதிர
மதுரைத்தெருகளெல்லா மன்னூராளைபூட்டுறது
மதுரைக்கெதிரேதாண்டி வந்துவிட்டார்கானகத்தில்
காடுசெழிப்புற்று கனவேட்டையாடுகிறார்

ளைக்கண்டுவிட்டு நங்கை கட்டழகி அல்லியம்மாள்
ஏறினாள்புரவியின்மேலே லெடுத்தாளே அம்புவில்லு
தட்டினாள்புரவிதன்னைச் சாரிவிட்டாள்கானகத்தில்
வளைத்தாளேவில்லதனை வாங்கிவிட்டாளஸ்திரத்தை
இழுத்துவிட்டாள்பாணந்தன்னை இமையமிகடுக்க
தொட்டாளேவில்லதனைச் சொரிந்துவிட்டாள்பாணங்களை
காட்டானைசிங்கங்களைக் கணடுதரக்கூற்றர்
புலிகள் கரடிகளைப் போக்கிறாள்பாணத்தாலே
கலைமானும்பன்றிசருகு கண்டமிருகங்களை
மட்டில்லாமிருகங்களை வதைபண்ணிப்போட்டுமாள்
புள்ளிமான்றன்னைக்கண்டு போட்டாளேபாணத்தாலே
மதயானைமிருகங்களை அதமாக்கிப்போடுகிறாள்
அனேகமிருகங்களை அதமாக்கிப்போடுகிறாள்
மாயன்பெருமாளும் மாலைசோதியே செய்தார்
அந்தவனந்தனிலே அதிகசலமில்லாமல்
தண்ணீர்கிடையாமல் தவாமிர்வர்வுண்டுபண்ணி
அல்லிப்பெருமாட்டு அதிகதாகமுண்டுபண்ணார்
தண்ணீர்களையல்லோ தாகவிடாயளோளே
நெஞ்சுலர்ந்துபோகிறதே நினைவுதப்பிப்போகிறதே
உன்னுக்குத்தொண்டையது உலர்ந்துமேபோகிறதே
காதையடைக்கிறதே களையாய்வருகிறதே
தண்ணீர்களையாலே தான்விழுந்தாள்பூமியிலே

அர்ச்சுனன்காசிபிராமணனாகவந்துகாசிதீர்த்தங்கொடுத்தது

காண்டீபனருச்சுனனுங் கட்டழகப்போது
காசிபிராமணன்போல் கடுகவடிவெடுத்தார்
தொண்ணூறும்பத்துஞ்சென்ற துவண்டகிழவனைப்போல்
காணப்பூபோலேயல்லோ நரைத்தகிழவனுனார்
காசிநல்லதீர்த்தமது காவடியைத்தோளில்வைத்து
மூர்ச்சையாய்விழுந்தானே மொய்குழலாளல்லியம்மாள்
அந்தவழியாக அருச்சுனரும்வந்தாரே
பிராமணனைக்கண்டார்கள் பொற்கொடிமார்தோழியர்கள்
ஆயோபெரியவரே அழகானவேதியரே
மெத்தப்பெரியவரே மேனாட்டுவேதியரே
பாருலகையாளுமொரு பத்தினியாளல்லியம்மாள்
தண்ணீர்களையாகத் தவித்துவிழுந்தாளே
தாகவிடாய்பிடித்து தளர்ந்தார்காண்ராசகன்னி
மாதையடைத்தகவலுங் களைத்துவிழுந்தாளே
காசிதீர்த்தம்வாருமையா களைகள்தெளியவேணும்
புண்ணியமாய்ப்போகுமையா பிராமணரேதீர்த்தங்கொடும்
என்றுதான்கேட்டு இறக்கினான்காவடியை
திறந்தானேகாவடியை தீர்த்தகுப்பிதானெடுத்து

மாதுகளைத்தெளியவார்க்கலுற்றான் தீர்த்தமதை
தாகந்தெளியதற்குத் தண்ணீரும்மொண்கொண்டு
களைகள்தெளித்தானே கட்டழகிஅல்லியம்மாள
கடுக அந்த அருச்சுனனுங் காவடியைத்தோளில்வைத்து
காற்றுப்பறந்துமல்லோ வரியமால்பக்கம்வந்தான்
ஆயன்பெருமாளே வார்த்தையொன்றுநீர்கேளும்
களைபட்டிருந்தாளே கன்னியிளங்கொடியாள்
தண்ணீரையான்கொடுத்து தாகவிடாய்தீர்த்துவந்தேன்
மாலைதரிப்பதெப்போ மணமுகூர்த்தஞ்செய்வதெப்போ
தாலிதரிப்பதெப்போ சுவாமிபெருமாளே
என்றுதெளித்திடவே எக்காலஞ்செல்லுமோதான்
அல்லியின்மேல்சிந்தைகொண்டு அலகிறானருச்சுனனும்
மாதுமேல்சிந்தையாய் மயங்குறானருச்சுனனும்
மாயன்பெருமாளு மாலோசனைசெய்தார்

ஸ்ரீகிருஷ்ணபகவானும் அருச்சுனனும் மாறுவேடங்கொண்டு தண்ணீர்ப்பந்தல்வைத்தது.

அந்வானகானகத்தி லாரண்ணியந்தன்னிலேதான்
தண்ணீர்ப்பந்தல்போடுகிறார் சுவாமிபெருமாளும்
வெந்நீர்குளிர்ந்தநீர் மோர்களும்வைத்தாராம்
கொள்ளுதண்ணீர்வைத்தார் குளிர்ந்தசலம்வைத்தாராம்
தண்ணீர்ப்பந்தல்வைத்தபின்பு சுவாமிஎன்னவடிவெடுத்தார்
தெய்வயிருமணத்தில் சிறுபெண்வடிவெடுத்தார்
காய்க்கும்பிராயமவள் கன்னிகட்டும்பாவனையாம்
பூக்கும்பிராயமவள் பிஞ்சுவிடுங்காலமவள்
கொஞ்சம்வயதல்லவோ கொழுந்தெல்லாம்பிஞ்சுகண்டார்
சோலையிலேசந்திரனைச் சுற்றிப்பிடித்ததுபோல்
ஈழத்துதச்சனவ னெழுதிவரவிட்டானோ
மேல்நாட்டுத்தச்சனவன் விளைந்துவரவிட்டானோ
வெளிற்பவளமது மின்னுகிறகாந்தியைப்போல்
மின்னற்கொடிபோலே மேகவர்ணர்வடிவெடுத்தார்
அழகுதுலங்குவது ஆணந்தங்கொஞ்சுவதும்
வடிவுதுலங்கிறதும் மாணிக்கங்கொஞ்சுவதும்
இந்தவிதமாகஎம்பெருமாள்வடிவெடுத்தார்
அருச்சுனராசனரை அவரென்னவடிவானார்
தொண்ணூறாம்பந்துஞ்சென்ற துலன்னடகிழவனைப்போல்
பண்ணைப்பூப்போலாக பழுத்தகிழவனானார்
நாணற்பூப்போலாக நரைத்தகிழவனானார்
தோலுநரம்புகளும் தொங்குதுகிழவனுக்கு
ஒருகண்ணுபொள்ளைக்கண் ணொருபக்கல்நொண்டிக்கால்
ஒருகையுமொண்டிக்கை ஒருபக்கஞ்சாய்ந்தவுடல்

இந்திரவிதமாக இளவிசையன்வடிவெடுத்தான்
தண்ணீர்ப்பந்தலுக்குள்ளாகத் தானிருக்காரிருவர்களும்
பிடிச்சாம்புகைபிடித்து பிராமணத்திமுன்னிருந்தாள்
அல்லிப்பெருமாளும் அவளுடையசேனைகளும்
அந்தவானகத்தில் அந்தவழிவாரார்கள்
மிருகவேட்டையாடியல்லோ வெளிப்படுவாரார்கள்
தண்ணீர்பந்தல்வழியாகத் தையலர்கள்வாரார்கள்
கண்டாளே தண்ணீர்பந்தல் கன்னியுள்ளேவந்தாளாம்
பக்கத்திலிருக்கிறார்கள் வர்ணலட்சம்சேனையெல்லாம்
அத்தலட்சேனைகளும் அனைவோரும்வந்தமர்ந்தார்
தாகக்களைகளுமே சகலருந்தான்தெளிந்தார்
அல்லிப்பெருமாட்டுக்கு ஆசனங்கள்போட்டார்கள்
ஆசனத்தின்மேலாக அமர்ந்தாளேயல்லியரும்
பிராமணக்கன்னியென்னும் பெண்ணரசைதானபார்த்து
ஆர்காணுங்கன்னியரே அலங்காரப்பெண்மயிலே
எந்தவூர்பிறந்ததேசம் எங்கிருந்துவந்தீர்காண்
அந்தவானகத்தில் ஆர்வைத்தார்தண்ணீர்பந்தல்
இந்தவனத்திலே எவர்வைத்தார்தண்ணீர்பந்தல்
பிராமணப்பெண்ணழகி பொற்கொடியாளேதுசொல்வாள்
எம்பாவம்பெரிதுகண்டீர் பத்தினியேயேதுசெய்வேன்
தெய்வலோகம்வாழுகின்ற தெய்வப்பிராமணத்தி
நல்வாழ்வுபெருமையது மகிட்சிகள்மெத்தவுண்டு
ஆண்டிபாதேசி அமுதுக்குவந்தார்கள்
அள்ளிப்படைத்திட்டு அனியாயம்பண்ணதோஷம்
சாணிதிரட்டிவந்து சாணங்கள்போட்டதோஷம்
ஆதிசிவன்சந்நிதிமுன் அறுகாய்வளர்ந்ததுகாண்
மகாதேவர்சந்நிதிமுன் மலையாய்வளர்ந்ததுகாண்
சாணிமலையதுதான் சதிராயவளர்ந்ததுகாண்
பிட்சைக்கிருகாலுக்குப் புரப்பட்டார்சொக்கலிங்கம்
முப்பத்துமுக்கோடி முனிவர்களுமதேவர்களும்
வானவருமிந்திரரு மகாதேவர்தான்முதலாய்
வைகையாறுசுற்றியல்லோ வருகிறவேளையிலே
சாணிமலைதனைச் சங்கரனார்கண்டுவிட்டார
என்றுவேவந்தருதொரு இடருகளைத்தமரிந்தார்
பொல்லாதசாபமிட்டுப் பூமியிலேபோகமென்றார்
சாபந்தொலைவதற்கு தண்ணீர்பந்தல்வைத்தேனம்மா
அண்ணனுமில்லை தம்பியில்லை அரவணைக்கயாருமில்லை
தாய்வீட்டுசொந்தங்களில்லை தாபரிக்கயாருமில்லை
மாமிவீட்டுசொந்தங்களில்லை மட்டுமேனிதரில்லை
தாலாட்டிதழைவதற்கு தாழ்வாரமில்லையம்மா

எட்டிநுழைவதாக்கு எரவாணந்தானுமில்லை
வாவென்றழைப்பதற்கு மனிதரொருவரில்லை
தோலும்எலும்புகளும் தொக்குசிறகிழவனுக்கு
மாளுங்கிழவனுக்கு மாலையிட்டேனென்னுச்சி
இந்தக்கிழவனுக்கா னிறந்துமடியவில்லை
பாவந்தொலையவில்லை பத்தினியேயென்னசெய்வேன்
ஏவல்பணிசெய்து எங்கேயாகிலும்பிழைப்பேன்
அவ்வார்த்தை தான்கேட்டு அல்லியம்மாளேதுசொல்வாள்
எந்தனுக்குந்தோழியாக என்னருகில்நீயிருந்தால்
சகலமானபாக்கியமுஞ் சம்பத்துந்தருவேனென்றாள்
கூடவருவாயோ கொம்பனையேயென்றழைத்தாள்
எப்படிவருவேனம்மா இளங்கொடியேயுன்பிறகே
இலக்குமிநோன்பதுதான் நாளைவருகுதம்மா
நோன்புமுடிக்கவேணும் நீதியுள்ளதாயாரே
எனறனக்குமுன்னடிமையாகவிருக்கிறேன்காண்
மகுடத்துரைச்சியவள் மாதருமேதுசொல்வாள்
எந்தனரண்மனையி லுந்தனிடநோன்புதன்னை
குறையாமற்செயதுவைப்பேன கொம்பனையேயென்தோழி
வேணுமென்றசாமான்கள் மெல்லியரேயான்தருவேன்
வாருமம்மாவென்றுசொல்லி வருந்தியழைக்கலுற்றாள்
இந்தமுடவனைநான் எங்குபோட்டுவருவேனம்மா
டோலியிலேபோட்டவனைத் தூக்கிவரச்செய்யுமென்றாள்
பல்லக்கிலேற்றினாள் பத்தினியாளல்லியம்மாள்
கிழவனை தூக்கிவந்து டோலியிலேபோட்டார்கள்
தோழிமாருள்ளவர்கள் தூக்கியெடுத்தார்கள்
காடுசெடிதாண்டி கடுகவருகிறார்கள்
ஆறுசுனைதாண்டி அதிகவனந்தாண்டி
மதுராபுரிபட்டணத்தில் மகிழ்ச்சியுடன்வந்தார்கள்
தெத்துத்தெருதாண்டி தேரோடும்வீதிவிட்டு
மாளிகைவாசலிலே வந்தாளேயல்லியம்மாள்
கனகதண்டிவிட்டிறங்கி கன்னிபருமபோகலுற்றாள்
இந்தக்கிழவனையி லிவ்வாசலில்வையுமென்றாள்
ஐந்தாங்கட்டுவாசலிலே ஆரியனைவையுமென்றாள்
அப்போபிராமணத்தி அரிராமரேதுசொல்வார்
தனியாகவிட்டுப்போக தரிக்குமோவென்மனது
முடவனைநான்விட்டுவிட முறையல்லவெந்தனுக்கு
அவராலேஎன்னகுற்றம் ஆச்சிவாட்டுமென்றாள்
அல்லிப்பெருமாளும் அரண்மனையிற்போய்புகுந்தாள்
முத்துசெம்பொனவாசலது மூன்றுகட்டுந்தான்தாண்டி
ஆசாரவாசலது அரண்மனையிற்போய்ச்சேர்ந்தாள்
அந்தியனுஷ்டானமது அனைத்துமேதான்கழித்து

போசனச்சாலையிலே புகுந்தாளேயாதுகன்னி
பிராமணகன்னியற்கும அவளுடையபுருஷனுக்கும்
அமுதுபடியரிசி ஆனதெல்லாங்கொடுக்கவென்றாள்
அந்திகாலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தான்
போசனங்களுண்டவர்கள் பொற்கொடிமார்பள்ளிகொண்டார்
மற்றநாட்காலையிலே கதிரோனும்வந்துதித்தான்
திக்கட்கிழமையது தசமிபுனர்பூசம்
அன்றையதினமதிலே அரிராமரேதுசொல்வார்
அல்லிப்பெருமாளே அரசதுரைநாயகமே
விரதமுடியவேண்டும் என்கோன்புதீரவேண்டுமே
சாலுங்கரகமதை தையலரேவேண்டுமென்றான்
வேணுமென்றசாமானை வாங்கிக்கொண்டாள்பிராமணத்தி
தேவையுள்ளவன்று வெல்லாஞ்சேகரித்துக்கொண்டவரும்

அருச்சுனன் அல்லியம்மாளைச் சூதகத்தாலிகட்டி
விருதநறந்துப்போனது

பந்தக்கால்நட்டியல்லோ பந்தலலங்கரித்தார்
பச்சோலைப்பந்தலது பாங்காயலங்கரித்தார்
நிலத்தைமெழுகியல்லோ மாவாலேகோலமிட்டார்
சாலுங்கரகமுமே சதுராய்நிறுத்திவைத்தார்
வாலிகைவைத்துமல்லோ பாங்காய்முளைதெளித்தார்
அரசாணிகால்நட்டி அம்மிகுழவிவைத்தார்
அந்திகாலமாச்சுதங்கே ஆதித்தன்போய்மறைந்தார்
ஆயிரம்பெருவிளக்கை அழகாகயேற்றிவைத்தார்
குத்துவிளக்கும் குடவிளக்குமேற்றிவைத்தார்
மாயன்பெருமானும் மலராமரேதுசெய்தார்
அத்தண்டதோழிகட்கும் அல்லிபெருமாட்கும்
மயக்கத்தைப்பண்ணுனார் மாயன்பெருமானும்
மூதேவிதன்னையழைத்து முகத்திலிறையுமென்றார்
வந்துநின்றாளே வாவடையிட்டாள்மூதேவி
சொன்னதப்பித்தோழியர்கள் சோர்ந்துபடுத்தார்கள்
அப்போபெருமானும் அருச்சுனனைத்தானழைத்து
ஓமம்வளர்த்துமென்று உலகளந்தமாயவரும்
வேதங்கள்தப்பாமலே வேள்விவளர்க்கிறார்கள்
ஆயன்பெருமானும் அருளாளரேது செய்தார்
தேவேந்திரனையல்லோ சிந்தனையிலேதானிருந்தார்
அருச்சுனராசனிவன் அல்லியரைமணம்பொருந்த
மணமுகூர்த்தமசெய்வதற்கு மங்கிலியம்வேண்டுமையா
யானைத்தலைபோல அழகானமங்கிலியம்
தும்பிக்கைபோலே திருமங்கிலியச்சரடு
பாபத்திருநீரும் வரவனுப்பவேண்டுமென்று
தோத்திரம்செய்தாரே ஸ்ரீராமரெயபெருமாள்

இந்திரருமப்போது இருதயத்திற்றானறிந்து
உள்ளமகிழ்ந்தாரல்லோ உம்பர்பிரானிந்திரரும்
யானைத்தலைமேலே அழகானமங்கிலியம
தும்பிக்கைமேலே இருமங்கிலியச்சரடும்
மாயத்திருமேனும் மகிழ்ச்சியுடன்தானெடுத்து
தாதன்கையிற்கொடுத்து ஸ்ரீராமர்கைகொடெனார்
வாங்கியந்தத்தாதனவன் மாயவனார்கைகொடுத்தார்
ஆயரவர்வாங்கியல்லோ அர்ச்சுனனார்கைகொடுத்தார்
லக்கினமுமதப்பாமல நலவிசையனகைகொடுத்தார்
தாராபலன்பார்த்து தரியுமென்றாமங்கிலியம்
மாயரிடத்தன்பாதம் வணங்கியந்த அர்ச்சுனனும்
ஈஸ்வரரைபார்வதியை இருதயத்தில்தானினைந்து
பிட்டுக்குமண்சுமந்த புனிதனைத்தானினைந்து
தேவேந்திரபகவானை சிந்தையிலேதானினைந்து
அல்லியென்னும்பெண்ணரசி ஆரணங்குகன்கழுத்தில்
சிவசிவாவென்றுசொல்லித தேர்விசயன்கட்டலுற்றான்
ஆரகராவென்றுசொல்லி அழுத்தினான்மங்கிலியம்
பிரமமுடிமூன்றுமுடி போட்டானேஅர்ச்சுனனும்
ஈஸ்வரனார்வெண்ணீறதை இட்டானேநெற்றியிலே
மாயன்பெருமாளும் வரமென்னதான்கொடுத்தார்
இந்தமங்கிலியந்தன்னை யிவள்கொத்திப்பிளந்தாலும்
கோடாலியலேயிவள் கொத்திப்பிளந்தாலும்
இரம்பத்தைப்பூட்டியிவள் ஈலமாயறுத்தாலும்
கத்திகொண்டறுத்தாலுங் கட்டழகிமங்கிலியம்
அறுமலிருக்கவென்று அரிராமர்வரமளித்தார
அர்ச்சுனனைக்கூட்டிக்கொண்டு அரிராமர்தானடந்தார்
பத்துசுற்றுகோட்டைகளும் பார்த்தேபின்தாண்டிவந்து
மஞ்செட்கொடிகளுமே மகுடாதன்தோரணமும்
பொம்மைவிருதுகளும் பூசத்தலைகளுமே
அல்லிக்கொடிவிருதும் அறுத்தெறிந்தானர்ச்சுனனும்
மூச்சலேகட்டாக்கொடிவிருதை ரூனைவீரன்தானறுத்தான்

கிருஷ்ணபகவான் அருச்சுனனும தருமாபுரம்வந்துசேர்ந்தது

வீராதிவீரன்தம்பி விசையனவெளியானன்
மாயனுந்தானுமாக வழிநடந்துபோனார்கள்
மதுராபுரிகடந்து வனமாய்வனங்கடந்து
காடுசெடிகடந்து கரியமலைதான்கடந்து
ஆறுகுளைதாண்டி அதிகானந்தான்தாண்டி
பொல்லாதவனந்தாண்டி போய்சேர்ந்தார்தருமாபுரம்
மாளிகைவாசலிலே வந்துசேர்ந்தாரிருவருமாய்
பொற்சோதிசூரியனல்லோ பொழுதிறங்குங்காலை
சுக்கலாதேவிபுத்திரன் சூரியனும்வந்துதித்தான்

அருணோதயகேரேழி ஆதித்தன்வந்துதித்தான்
தோழியரும்தாதியர்கள் தூக்கம்விழித்தார்கள்
அந்தண்டதோழியர்கள் அனைவருங்கண்விழித்தார்
பாங்கியிலும்நல்லதொரு பவளசேனையேது சொல்வாள்
அல்லிப்பெருமாளின் அருகாகவந்தார்கள்
தட்டியெழுப்பினார்கள் தாமக்குழலாளை
பொட்டெனக்கண்விழித்தாள் பொற்கொடியாளானவளும்

அல்லியம்மாள் மங்கிலியங்கண்டுபோதவிக்கிறது

கழுத்திலேமங்கிலியம் கண்டாளே அல்லியம்மாள்
அந்தண்டதோழிகளும் அனைவோரும்பார்த்தார்கள்
முன்னாப்போலேதாலியது முன்மார்பில்தொங்குதங்கே
கண்டுதிடுக்கிட்டாள் கட்டழகிஅல்லியரும்
பார்த்துப்பதைகுலைந்தாள் பத்தினியாளல்லியரும்
இங்கிருந்தபாபபாத்தி எங்கேபோனாள்பாருமென்றாள்
தேடிப்பிடித்துநீங்கள் சீக்கிரமாய்வாருமென்றாள்
எங்கெங்குந்தேடி இனியவிடமாராய்ந்தார்
தேடியலைந்தார்கள் திசையெட்டுங்கண்டதில்லை
என்றதுமேமங்கையவள் இடிவிழுந்தாளல்லியம்மாள்
கத்தியெடுக்களடி கடுகஅறுகவென்றாள்
கத்திகொண்டறுத்தாளே காரிழையாளல்லியம்மாள்
இரும்பக்கொண்டறுத்தாலும் நாலுதுண்டாய்ப்போகுதங்கே
வாள்கொண்டறுத்தாலும் வாளுமடியுதங்கே
மெத்தவிசாரமிட்டு மெல்லிபுலம்பலுற்றாள்
கட்டினவிருதுகளுங் கழுத்தில்தாலிகட்டினதார்
ஆரென்றறிவேனடி ஆரணங்கேபவளசேனை
எவரென்றுயானறிவேன் ஏலப்பசுங்கிளியே
ஆரியபிராமண்டியரை அழகுக்கொடியார்களென்றாள்
பொன்னிமலைசாரநாளும் பெருகித்தஅணைமேடையுமே
அழைத்தோடிவாருமென்று அனுப்பினாள்தாதியரை
ஓட்டப்பெருநடையாய் ஓடிவந்தார்தாதியர்கள்
ஆரியப்பாண்டியர்க்கு அன்னைருக்கும் சரிசொன்னான்
மாதுகன்னியல்லியரை மங்கிலியங்கட்டினவர்கள்
கட்டினவிருதுகளைக் கடுகவறுத்தார்கள்
அல்லிப்பெருமாளும் அழைத்தோடிவாருமென்றாள்
யாருக்குத்தோமாவென்று வணக்கினார்தாதியர்கள்
அந்தவுரைகேட்டு ஆரியபிராமண்டியர்கள்
அல்லிருந்தபாசிருந்த அரசைப்புடைசூழ்ந்துவிட்டு
அல்லியிடவாசலுக்கு அனைவோரும்வந்தார்கள்
மகாராணியைக்கண்டல்லவோ வயிற்றிலடித்தழுதார்

ஐயோமகளேயுன்னை அக்கிரமம்பண்ணவனார்
யானைத்தலைபோல அழகானமங்கிலியம்
முடாப்போலதாலியல்லோ முன்மார்பில்கட்டினதார்
இதுவென்னகாரணமோ வென்றழுதார்பாண்டியர்கள்
கண்ணீரைவிட்டுமல்லோ கதறிப்புலம்புகிறார்
மகுடத்துரைச்சியவள் வாய்திறந்தேதுரைப்பாள்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
அங்கையர்கண்கிருபையாலே அல்லியிலேபெண்பிறந்தேன்
சொக்கர்கிருபையாலே தாமரையிற்பெண்பிறந்தேன்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநின்முகனை
வெட்டித்துணித்துநான் வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
பன்னிரண்டுபிராயமட்டும் பாருலகையாண்டிருந்தேன்
கொள்ளவருவார்க்குக் கூறடா குடுப்பேனென்றேன்
ஆள்வருஞ்சம்மந்தியை அடிப்பேனென்றேன்சேருபந்தல்
கலியாணமென்றவரைக் கண்ணைப்பிடுங்கிடுவேன்
என்றுவிருதுகட்டி எல்லையரசாண்டேனே
பொம்மைவிருதுகட்டி பூமியெல்லாமாளுகிறேன்
மூச்சுகொடிதெருவிற்கட்டி முடிசூட்டியாளுகிறேன்
காணவருவாருங் கைகட்டிநிற்பாரும்
பார்க்கவருவாரும் பணிந்துகைகட்டுவாரும்
எதிரிகளில்லாமல் எல்லையரசாண்டேனே
அடியென்றழைத்தவர்கள் அவனியிலொருவரில்லை
வாடிபெண்ணேயென்றவர்கள் வையகத்திலாருமில்லை
மதிக்கும்படியாக மண்டலத்தையாண்டேனே
கட்டினவிருதறுத்துக் கழுத்தில்தாலிகட்டினவன்
யாரோதெரியாது அக்கிரமம்பண்ணுனோனே
ஆகாயலோகத்து அமரரென்றுயானறியேன்
அந்தரலோகத்துக கந்தருவரென்றறியேன்
மண்டலத்துராசாக்கள் மந்திரிகளென்றறியேன்
நீக்கோட்டையாண்டதொரு துரைகளென்றுயானறியேன்
ஆனைபோலத்தாலிகட்டிப் பறையன்மகன்போனானே
முடாப்போலதாலிதொங்க முடிசூடியாளவேனோ
கண்டார்சிரிப்பாரே கலியுகத்தாரேசுவாரே
பார்த்தார்நகைப்பாரே பரியாசம்பண்ணுவாரே
சற்றுமமதியாரே தரணிதனிலுள்ளவர்கள்
நான்செத்துமடிந்திடுவேன் சிவலோகஞ்சேர்ந்திடுவேன்
மாண்டுமடிந்திடுவேன் வைகுண்டஞ்சேர்ந்திடுவேனே
வல்லபிராணனைநான் கல்மேலேபோக்கிடுவேன்
சாவேன்கெடுவேனென் சமுத்திரத்தில்போய்விழுவேன்
முட்டிகொண்டாளாரோடே முகத்திலறைந்துகொண்டாள்
மார்பிலறைந்துகொண்டு மண்மேலபுரண்டழுதாள்

பாண்டியர் அல்லியம்மாளுக்கு மனந்தேருதல்சொல்லுகிறது

ஆராயிரவர்களும் ஐயமாரேதுசொல்வார்
அஞ்சாதே என்மகளே ஆலோசனைசொல்லுகிறோம்
கட்டினதாலியை நீ கடுக அறுத்தெறிந்து
விருதெடுத்துக் கட்டியல்லோ வெற்றியுடன் ஆளுமென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியம்மாளேதுசொல்வாள்
கத்திக்கொண்டறுத்தாலும் கத்திமடியுதையா
வாள்கொண்டறுத்தாலும் வாளுமொடியுதையா
இரம்பங்கொண்டறுத்தாலும் இரம்பமொடிந்திடுதே
பட்டிமாடுபோலக பறையன்கட்டினனே
கழுத்துமிககொத்துதையா கட்டினதோர்தாலியாலே
எடுக்கமுடியவில்லை என்னசெய்வேனையாவே
ஆரென்றுகாணறிவேனையாவே சொல்லுமென்றாள்
அறிந்தேனேயாமாகில் ஐந்துதுண்டாய்ப்போட்டிடுவேன்
தெரிந்தேனேயாமாகில் சிவவதைசெய்திடுவேன்
என்றுசொல்லும்போது சொல்லுவார்பாண்டியர்கள்
வந்தவரலாற்றை மகளே நீ சொல்லுமென்றார்
ஆனால்கேளாயே ஆச்சரியங்கள்
பாரிவேட்டைப்போனேனையா பாரவனந்தனிலே
ஆரோஒருவனவ னம்புயொருக்கிதந்தான்
பார்த்தேனேயாமாகில் பாணத்தாற்போட்டிடுவேன்
அறிந்தேனேயாமானால் அம்புக்கிரைகொடுப்பேன்
காலும்பிடிக்கேனே கதையெனக்குச்சொன்னானே
அவன்முகத்தையான்பார்த்து ஆயுதமெடுக்கப்போனேன்
ஓட்டம்பிடித்துதானே ஓடிவிட்டான்பாவிமகன்
மற்றொருநாளையிலே மதுரையிலேயொருவன்
பயித்தியக்காரப்போல பவளக்கட்டுத்திருக்குளத்தில்
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைத்தானே
பாம்புதும்புஞ்சொல்லியல்லோ மருந்தையவனுரைத்தான்
அவனைப்பான்கொண்டுவந்து ஆக்கினைகள்செய்வதற்கு
ஆற்றிலேபோட்டவனை அம்பாய்ப்புரட்டுமென்றேன்
அதிலுஞ்சாகவில்லை அருமபாவியானவனும்
காக்குமரத்திலே துஷ்டனைப்போடுமென்றேன்
போடப்போனதாதியவள் பொலியாளுள்செங்கமலம்
காளியம்மன்கோவிலிலே கடுகபொலிபோடுமென்றேன்
அங்காளிசொல்லியம்மாள ஆண்டெபலிவண்டேனென்றார்
பூதகுழியிலே போட்டவனைக்கொல்லுமென்றேன்
பூதங்களுள்ளதெல்லாம் போதப்பணிசெய்ததய்யா
அதிலுஞ்சாகவில்லை அருப்பாவியானவனும
எவளோசிறுகன்னி இந்திராப்பாவைபோலவந்தாள்
தன்துணைவனென்றுசொல்லித் தனித்துப்புலம்பினதாள்

அவனைத்தூரத்திவிட்டேன் அழைத்துபோனாள்சீக்கிரமாய்
பண்டாரம்போலொருவன் படமெழுதிவந்தானையா
என்னைப்போலப்படமெழுதி இங்கேமாட்டினான்
சொல்லாதவார்த்தைசொல்லிச் சொளிக்குச்சோலைகேட்டானை
கொடுத்தாலேயல்லாது போகானென்றான்பாவியவன்
பாம்புகளைவிட்டேனே பாவியைக்கொல்லுதற்கு
ஆனைமதமேற்றி அவனைமேல்கொல்லவிட்டேன்
ஏதாலுஞ்சாகாமல் இருந்தான்மகாபாவி
மற்றொருநாட்பிடாரனவன் வகைவகையாய்ப்பாம்பெடுத்து
ஆடாதபாம்புகளை ஆடவைத்தான்வாசலிலே
மற்றொருநாளையிலே வனத்தில்நான்வேட்டைபோனேன்
தண்ணீர்களையாலே தாகவிடாய்ப்பட்டுவிட்டேன்
காசிபிராமணன்போற் காசிதீர்த்தம்வார்த்ததுண்டு
வனவேட்டையாடியபின் மாளிகைக்குவரும்போது
தண்ணீர்பந்தல்போட்டிருந்தாள் தையல்பிராமணத்தி
பாராதேயென்றழுதாள் பரிதாபப்பட்டேனையா
மாளிகைவாசலுக்கு மயிலணையைகூட்டிவந்தேன்
இலச்சுமிநோம்பென்று நடத்தினாள்பாவியவள்
கலியாணச்சடங்குபோல கலசம்நிறுத்தினாள்
வேள்விவளர்த்திருள் வேதங்களோதினாள்
பார்த்துமிருந்தேனே பண்ணினநோன்புகளை
கண்டிருந்தேனே கண்ணுறங்கி தூங்கிவிட்டேன்
பார்ப்பானைப்போலிருந்து பாவியவன்கட்டிவிட்டான்
கழுத்திலேதாலிகட்டிக் கனவிருதுமறுத்துவிட்டான்
ஆரென்றறிந்திடுவேன் ஐயாவேசொல்லுமென்றாள்
ஆயிரவர்களுக்கு ஆலோசனையேதுசொல்வார்
தேவனேயென்றாலே செயிக்கமுடியாது
மண்டலத்துராசரென்றால் மாதேயறிந்திடலாம்
சீமைசீமைராசருக்குத் திருமுகமெழுதுமென்றார்
சொக்கலிங்கர்தன்னுடைய சொன்னமயபச்சந்நிதியில்
அங்கயற்கண்ணம்மை அகிலாண்டர்சந்நிதியில்
கோயிற்கெதிராக கொப்பறையில்நெய்காய்ச்சி
சத்தியங்கள்தன்னைச்சொன்னால் சாடையறிந்திடலாம்
மண்டலத்துக்கணக்கெழுதும் மதியுள்ளமந்திரியை
இராசசமர்த்தெழுதும் நன்மையுள்ளமந்திரியை
ஊர்கணக்கப்பிள்ளைகளை உத்தமனைத்தானழைத்து

அரசர்களுக்குத் திருமுகமெழுதி அனுப்புகிறது

சீமைசீமைராசருக்கு திருமுகமெழுதுமென்றார்
என்னென்றோலை எழுதுவதுயென்றாரே
அ[illegible]புரிதனிலே
ஆரியப்பளமும் அச்சிறுப்பொருயாக்கம்

அங்கதேசம்கலிங்கதேசம் அவந்திஆளகாபுரி
மும்பாசிமன்னறு கோவைமலையாளம்
அஸ்தினபுரம்சந்திரனடு அழகுள்ள இந்திரனடு
துலுக்காணம்பைகோவை தெலுங்குதேசசருமாபுரி
குருநாடுசிந்துதேசம் பங்காளம்காம்பிலியதேசம்
விசையபுரிவீமாபுரி நேபாணம்யாழ்ப்பாணம்
மராட்டியம்சோமாபுரி மச்சதேசங்குடகுநாடு
சீனங்கிஞ்சுமாராக்கம் யைந்தாசிங்களமும்
ஆனைகுந்திபட்டணமும் அழகானஒட்டியமும்
ஐம்பத்தாருதேசத்து அரசர்களானவர்கள்
சமயிக்கைசெய்து சுகமுடன்போவதற்கு
அல்லிமிகநினைத்து அரியகணக்கர்களை
மெல்லியாளல்லியம்மாள் மிகவுமேதானழைத்து
தேசதேசராசருக்குத் திருமுகமெழுதுமென்றா
அப்படியேகணக்கர்க ளன்புடனெழுதுகிறார்
மதுராபுரியாளுகிற வாழ்வரசியல்லியம்மன்
செக்கராளாமேல சுந்தரியாள்தான்பிறந்தாள்
அங்கயற்கண் னருளாலே அல்லியதுதான்பிறந்தாள்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தவீன்முகனை
வெட்டித்தலைதுணித்து வீரபட்டங்கட்டினவள்
பன்னிரண்டுபிராயமட்டும் பாருலகையாண்டசெனனி
விருதுகொடிகட்டியல்லோ வேணமட்டுமாண்டவளகாண்
ஆராயிரம்பாண்டியர்க்கு அரியதுரைமகளாம்
அல்லியம்மாள்தன்கழுத்தில் ஆரோதெரியாது
தேன்மொழியாள்தன்கழுத்தில் திருட்டுத்தாலிகட்டினூர்காண்
கழுத்திலேதாலிகட்டிக கட்டினவிருதருந்தான்
இன்னவனென்றுசொல்லி எனக்குத்தெரியாது
சீமையிலுள்ளதொரு துரைகள்மேலெசநதேகங்கு
ஐயமறவுதோன்றிபது அரசமன்னராசர்களே
சீமையாளும்ராசர்கள் துரைகள்வரவேண்டும்
எல்லபராசருநம் இராசாககளிங்குவந்து
கழுத்திலேதாலியது கட்டவில்லையெனறுசொல்லி
நாங்கள்சொன்னதப்பிரதிக்கையைச் செயது கொடுக்கவேண்டும்
ஓலையைத்தள்ளிவிட்டு வாராதிருந்தேபர்களை
கோட்டையிடித்திடுவேன் கொத்தளங்கள்பேர்த்திடுவேன்
அரண்மனைபாழடித்து ஆமணக்குவிதைத்திடுவேன்
ஆண்சிறையும்பெண் சிறையு மடக்கலாசனமிடுவேன்
வெட்டித்தலையறுப்பேன் வீரசொர்க்கஞ்சேர்த்திடுவேன்
ஓலைகண்டதாழ்நீவரதிருந்திடுகவென்று சொல்லி
எழுதுமென்றுசொன்னாள் ... அல்லியம்மாள்
அவ்வார்த்தைதான்கேட்டு ... மந்திரிகள்

சேமக்குருக்கோலை சீக்கிரமாய்த்தானெடுத்து
ஈழுபானையோலை யிருபக்கஞ்சாம்பரிந்து
தாளிப்பனையோலை தலைபக்கங்காம் ரிந்து
வாரியவோலையிலே வக்கணைகள் தானெழுதி
செங்கிரிக்கும்போட்டுமெல்லிலா சிக்காமுத்திரைகள்வைத்து
அல்லியம்மாள்முன்புவைத்து அடிபணிந்துதெண்டனிட்டு
ஆடாசிட்டுமல்ல ராயிரம்பேரெழுந்திருங்கள்
சீமைபுள்ளராசருக்குச் சுருளோலைகொண்டுபோங்கள்
மல்லரெழுந்திருந்து வாங்கினாரோலைதன்னை
காலாலநடவாமற் காற்றாய்ப்பரந்தார்கள்
மதுரையைத்தாண்டியவர் வனங்கள்புகுந்தார்கள்
காடுசெடிதாண்டிக் கரியமலைதான்தாண்டி
சீமைசீமைராசருக்குத் திருமுகந்தந்தார்கள்
ஓலைச்சுருள்விரித்தா ருலகாளும்ராசாக்கள்
அதிலிருந்தமர்மமெல்லாம் அனைத்துமறிந்துகொண்டார்
நாமும்வருவோமென்றார் இராசாத்திசொற்படிக்கே
நம்பிக்கைதான்கொடுத்து கலமுடனேவருவோமென்றார்
தருமாபுரமாளும் தருமருக்கோலைதந்தார்
சந்தணவடிவழகர் தருமராவரேதுசொல்வார்
சீர்கணக்கரையழைத்து சுருளோலைபடியுமென்றார்
அப்போதுகணக்கப்பிள்ளை யன்பாயசுருள்விரித்து
படித்தார்களோலைதனைப் பாரவேந்தர்கேட்டுவிட்டார்
சந்தணவடிவழகர் தருமராதுகேட்டு
நாமும்வருகிறோம் ராசாத்திகொலுவுக்கென்றார்
மாயனபெருமாட்கு வந்ததேசுருளோலை
ஓலையதுபடித்து உலகளந்தமாயவரும்
நாமும்வருகிறோம் கடவுங்கள்தூதரெல்லாம்
சீமையிலுள்ளதொரு துரைகளுக்குசொல்லிவந்தார்
காடுசெடிதாண்டிக் கடுகிவந்தார்தூதரவர்
அல்லியம்மாள்முன்புவந்து அடிவணங்கிதெண்டனிட்டார்
சீமைசீமைராசருக்குச் சொல்லிவந்தோமாச்சியென்றார்
சீமைகளிலுள்ள துரைகளெல்லாம்வாரார்கள்
மண்டலத்துராசாக்கள் மகுடமன்னர்வாரார்கள்
திக்கெட்டையாண்டதொரு துரைராசர்வாரார்கள்
சந்தணவடிவழகர் தருமாவரேதுசொல்வார
ஆடாதுதுவரோ அலங்காரமல்லர்களோ
மாயன்பெருமானை வரவழைத்துவாருமென்றார்
ஓடடங்கட்டையுமாக ஓடிவந்தார்தூதுவர்கள்
மாயன்பெருமாட்கு வந்துமேதெண்டனிட்டார்
சந்தணவடிவழகர் தருமரும்மைகாணவென்று
அ கூடிவரச்சொன்னார்காண் கோபாலசுவாமியென்றார்
அப்போபெருமாளும் அக்கணமேதானெழுந்து

தாரகனையெச்சரித்து சுவாமிரதமேவேண்டுமென்றார்
கொண்டுவந்தான்தாரகனும் கொப்பெனவேசித்ரரதம்
ஏறினார்தேர்மேலே யெம்பெருமாளாண்டவரும்
காடுசெடிதாண்டிக் கடிதில்வந்தார்தர்மபுரம்
கோபுரவாசலண்டை கோபாலர்தானிறங்கி
மாயன்பெருமாளும் மாளிகையில்வந்துவிட்டார்
நாரணியனந்தமாயன் தருமருக்குதெண்டனிட்டார்
சிங்காதனம்போட்டு ஸ்ரீராமர்வீற்றிருந்தார்
இட்டசிம்மாதனத்தி லெம்பெருமாள்வீற்றிருந்தார்
என்னையழைத்ததுகா ரணேதுகருமமென்றார்
பாரார்புகழுடைய தருமரவரேதுசொல்வார்
மதுராபுரியாளுகின்ற வாழ்வரசியல்லிபற்கு
காணமல்மங்கிலியம் கட்டியேபோனார்களாம்
திக்கெட்டையாண்டநல்ல துரைகள்மகாராசருக்கு
கருவோலையெழுதியல்லோ அனுப்பினாள்தேசத்திற்கு
நம்பிக்கைசெய்துபோக நமகோலைவந்ததையா
அருச்சுனருமநீருமாக ஆரணியம்போனீர்களே
காசியாத்திரைபோனபோது களவுசெய்துவந்ததுண்டோ
தலைப்பெட்டிமகன் தாழ்வுசெய்துவந்ததுண்டோ
குற்றங்களுண்டானால் கோபாலாசொல்லுமென்றார்
அருச்சுனன்றன்னாலே யாதும்புண்டோசொல்லுமென்றார்
நான்ஒருக்கடந்தேனே வொருபாவங்கண்டதில்லை
கூடநடந்தேனே குற்றங்கள்நானறியேனே
அழும்புகளுண்டானா லருண்மைந்தாசொல்லுமென்றார்
ளர்த்துரைக்குமோலைதா னெழுதிவிட்டாள்காண்
நானுமிதோபோறே னம்மதுரைசீமைக்குச் [illegible]
வீட்டுக்கொருவரல்லோ வேந்தர்கள்போகவேணும்
ஐவர்களிலொருவராகிலும்வருமென்றார்
ஆரையழைத்துப்போறீ ரரிராமர்சொல்லுமென்றார்
வெற்றிமதயானை வீமனையழைத்துப்போறேன்
நம்பிக்கைகைதந்துவிட்டு நாங்களும்வந்திருப்போம்
போய்வாருமென்றுசொல்லிப் புண்ணியருஞ்செலவுதந்தார்

ஸ்ரீகிருஷ்ணசுவாமியும்வீமனும் மதுரைக்குப்போகுதல்.

வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
சந்திரகாந்திகட்டிகட்டித் தாமரைசபூச்சுக்குவிட்டார்
அப்புவில்இடக்கைபிடித்து அம்புறாத் [illegible]
தேர்மேலேறினானே திக்குவிசயங்கொண்டவீமன்
மாயன்பெருமாளு மச்சுரதமேறினாரே
இருவருமா [illegible]
[illegible]
[illegible]
[illegible]

வளமாய்வளந்தாண்டி வந்துவிட்டார்தென்மதுரை
மண்டலத்துராசரெல்லாம் வந்தார்மணிபுரத்தில்
முடிபோட்டமுடிவணங்க முடிமன்னாவந்துவிட்டார்
[illegible]பீடங்கள் மணிமுடிநெருங்குதங்கே
[illegible]ரசாண்டராசரெல்லோரும்வந்தமர்ந்தார்
[illegible] அல்லியருந்தானிருந்தாள்
[illegible]த்துரைச்சியவள் வாய்திறந்தேதுசொல்வாள்
[illegible]க்சொக்கலிங்கம் மகாதேவர்கோயிலண்டை
[illegible]வாசலண்டை கொப்பரையையுமென்றாள்
ஆவின்நெய்விட்டு அக்கினியைமூட்டுமென்றாள்
[illegible]தாளக்குழிபறித்துப் பாங்கானபள்ளம்வெட்டி
திருப்பாக்கல்லிலகொப்பரையை யெடுத்துவந்துவைத்தார்சன்
[illegible]நெய்வார்த்து அக்கினியைமூட்டினார்கள்
[illegible]கொதிக்கவைத்து நேரிழைக்குச்சேதிசொன்னார்
[illegible]நெல்லெடுத்துப் பாங்கியரேவையுமென்றாள்
அம்பாரம்போடுமென்று ளாண்டவனார்சந்நிதிமுன்
சம்பாநெல்லுங்காறுநெல்லும் அம்பாரம்போட்டார்கள்
மதுரைத்துரைச்சியற்கு மணிஆசனம்போட்டார்கள்
ஆறாயிரவர்களும் அல்லியருந்தானெழுந்து
ஆலயந்தன்னருகே வந்தார்களெல்லவரும்
கோபுரவாசலண்டை கொப்பெனவேவந்தார்கள்
மதுரைத்துரைச்சியும் வந்தமர்ந்தாள்ஆசனத்தில்
வந்தவந்தராசரெல்லாம் வீற்றிருந்தாரெத்திசையும்
அல்லிப்பெருமாளும் ஆரணங்குமேதுசெய்வாள்
கேளுங்கள்ராசர்களே கீர்த்திபெற்றமன்னர்களே
ஆலவாய்ச்சொக்கலிங்கம் ஐயர்தன்கிருபையாலும்
அங்கயற்கண்ணம்மை ஆச்சிசெயலாலும்
அல்லியிலைமேலே யாரணங்குபெண்பிறந்தேன்
ஒருவர்வயிற்றிற்பிறந்ததில்லை வனகொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரில் வள்ளேபணைறசேருமுண்டு
அடிக்கின்றகாற்றதனில் அலைகாற்றிற்றுரும்புமுண்டு
யாலாலமுண்டவர்க்கு கண்டகறுப்புமுண்டு
குன்றிமணிக்காணலும் கொஞ்சகறுப்புமுண்டு
எனக்குமயிரேககப்பொழிய மற்றுங்கறுப்பில்லை
[illegible]ப்பொழியப் பின்னைக்கறுப்புமில்லை
[illegible]லாப்பெண்பிறந்தேன் மீனாட்சிதன்செயலால்
[illegible] எதிர்த்துவந்தமன்முகனை
[illegible] வீரபட்டங்கட்டிகொண்டேன்
[illegible] பாருலகையாளுகிறேன்
[illegible]ர்கள் வையகத்திலாருமில்லை

வம்புதும்புஞ்சொன்னவர்கள் மண்டலத்திலாருமில்லை
யாரோதெரியாது அனியாயம்பண்ணுரே
காணாமல்மங்கிலியம் கட்டினானென்கழுத்தில்
இன்னானினியானென்றெனக்குத்தெரியாது
யானைகயினாலேதானழைப்பித்தேனுங்களோநான்
நானறியேனென்றுசொல்லி நம்பிக்கைசெய்திடுங்கள்
கொதிக்கின்றநெய்தனிலே கொப்பெனவேகையிடுங்கள்
அம்பாரம்போட்டநெல்லை யள்ளிநிமிட்டுங்கள்
நெல்லைநிமிட்டாமற் போனவளைவிடுவதில்லை
கைகளதுகொப்பளிக்க கண்டதேயுண்டானால்
வெட்டித்தலையிளப்பேன் வீரசொர்க்கஞ்சேர்த்திடுவேன்
நாகலோகம்போனாலும் நானவனைவிடுவதில்லை
ஆகாயம்போனாலும் அவனைவிடுவதில்லை
வானத்திற்போனாலும் வலைகட்டினான்பிடிப்பேன்
பாதாளம்போனாலும் பேதிப்பேன் பைங்கொடியாள்
விட்டுவிடுவேனென்று சற்றுமனமெண்ணவேண்டாம்
சத்தியத்தைச்செய்துநீங்கள் தயவுடனேபோய்விடுங்கள்
அவ்வார்த்தைதான்கேட்டு அனேகங்கோடிராசரெல்லாம்
எழுந்தார்கள்சபையிலேதுசொல்வார்ராசாக்கள்
அன்னநடைமாதே யானைக்குநாயகமே
பாருலகையாண்டதொரு பாண்டியர்கள்சீர்மகளே
செங்கோல்முடிசூட்டித் துரைத்தனங்கள்செய்பவளே
உன்னூரறியோம்பேரறியோம் ஒருசெய்கையாரறியோம்
மங்கிலியங்கொட்டுமல்லோ தரித்தவனையறியோம்
அறிந்தோமேயாமாகில் எழும்புகருமெங்களுக்கு
அக்கினிக்கெதிராக அனைவரும்வந்துநின்றார்
மகுடமுடிராசாக்கள் வந்தவர்கள்தாமெழுந்து
நெய்க்கிடாரந்தன்னருகே அக்கினிக்குமுன்னாலே
இருகையைக்கட்டியவரேதுசொல்வார்மன்னவர்கள்
ஐயாபிடாரிகளே ஆகாயதுர்க்கைகளே
அந்தரதேவதையே சந்திரசூரியரே
இந்திரப்பிரம்மாவே கந்தர்வரிஷிகளே
ஆலவாய்ச்சொக்கலிங்க மங்கை ந்கணம்மையே
மாணிக்கச்சொக்கலிங்க மகாதேவரீசுவரரே
ஏதுமறியோமென்று இருகையைதானெடுத்து
மாதருக்குமங்கிலியம் தரித்தவனையறியோம்
ஏதுமறியோமென் றிருகையைதானெடுத்து
காய்கின்றநெய்தனிலே கைவைத்துவந்தார்கள்
அம்பாரநெல்லையெல்லா மன்னர்நிமிட்டினார்கள்
ஒவ்வொருமன்னர்களாய்ச் சோதனைதந்தார்கள்
மாயன்பெருமானும் வந்துசத்தியமபண்ணினாரே

வெற்றிமதயானை வீமனெழுந்திருந்து
செய்திடாரந்தன்னருகே நேரேவருகையிலே
அக்கினியாய்வீசுது அருகில்வரவொட்டாமல்
வெந்துகாந்திறது வீமனது தேகமெல்லாம்
மாயன்பெருமாளே மைத்துனரே திருட்டுகிருஷ்ணா
முன்னிட்டகாலையவன் பின்னிட்டுவாங்கிகொண்டான்
அக்கினிபகவானை ஆயருமனைதொழுது
எம்பெருமாள்மாயமதும் யாரைநினைக்கலுற்றார்
என்னையுமழைத்து எம்பெருமாளென்றுகேட்டான்
அருகில்வரவொண்ணாமல் அக்கினியாய்வீசுதுகாண்
சேரவேவொண்ணாமல் செந்தணலாய்வீசுதுகாண்
ஒருபாவமொன்றறியேன் ஏதுவினையென்றறியேன்
ஒருநன்றிசெய்தவரை யுள்ளத்தில்வைக்கவேண்டும்
அக்கினிபகவானே அர்ச்சுனருமக்கு
அத்தனைசகாயஞ்செய்தா ரெல்லாமறந்தீரோ
மாளுகின்றவுன்னைபந்த வாழ்வினைசயன்காத்தானே
அந்தச்சகாயமல்லோ அறியாமலேன்மறந்தீர்
பெண்டுடையமன்னவன் பெண்ணரசிமாலையிட்டான்
உங்களுக்குக்கோபமென்ன வுந்துவானேன்செந்தணலாய்
கோபத்தைதணையாதே குளிர்ந்தசலம்போலிருங்காண்
என்றுதொழுதாரே யெம்பெருமாள்மாயவரும்
ஆயரதுசொற்கேட் டக்கினிதேவரவர்
குளிர்ந்தசலம்போலாக கொப்பெனவேநின்றுவிட்டார்
வாருங்காண்வீமசேனா வார்த்தைகேளுமைத்துனரே
மாதினுக்குமங்கிலியம் மதவீமாதறித்ததுண்டோ
செய்ததேதுண்டானால் சேரவரவொட்டாது
கலக்கங்களுண்டானால் கட்டழகாதாரநில்லு
மனைவிற்கபடிகளும் வஞ்சனைகளில்லையெனறால்
இராசாக்கள்போலேநீ நம்பிக்கைசெய்யுமென்றான்

வீமராசன்நெய்குடித்துவிட்டுக் கொப்பறையையுதிட்டினது

மறுபடியும்வீமராசன் மன்னவனுந்தான்வருவான்
கொதிக்கிறநெய்யருகே கொப்பெனவேவந்துநின்றா
மணக்கின்றநெய்தன்னை மதவீமன்பார்த்துவிட்டான்
தூக்கினான்கொப்பறையைத் துரிதமாய்நெய்யையெல்லாம்
வெற்றிமதயானை வீமனவன்வந்துவிட்டான்
மாயனுமாக வழிபிடித்துபோய்நடந்தார்
மனைத்தெருகாண்டி வனமாய்வனங்கடந்து
காடுசெடிதாண்டி கரியமலைதான்தாண்டி
ஆறுசுனைதாண்டி யதிகவனந்தான்தாண்டி
கன்னபுரிப்பட்டணத்தில் தார்வேந்தர்வந்துவிட்டார்
அல்லிப்பெருமாளு மாரனைக்குயேதுசொல்வான்

இக்கனைபோர்க்களிலே எவனைத்திருடனென்பேன்
அநேககோடிராசர்களி லாரைத்திருடனென்பேன்
சத்தியங்கள்செய்தாரே தரணியுள்ளராசரெல்லாம்
நெய்யிலேகைதோய்த்து கெல்லியிட்டுவிட்டார்
சோரனைகாட்டியல்லோ அரசர்களெல்லாமேபோகையிலே
அனைவோரைப்போராக அவனைக்கைதோய்க்கவேண்டும்
கொதிக்கின்றநெய்யதனை குடிக்கவிதிமுறையோ
திருடருக்குதெய்வமுண்டோ சோரருக்குநேசமுண்டோ
வானஞ்சுழல்வதற்கு மருந்துண்டவன்கையில்
பூமிசுழல்வதற்குப் பொடியுண்டவன்கையில்
வண்ணமருந்தெடுத்துத் தண்ணீரிலூறவைக்கிலேயோ
வைப்பு தம்புபேசியவன் வாய்பழுதுசொல்லலையா
ஆற்றில்புரட்டிபகலோ அவனைநான்கொல்லுமென்றேன்
அவனுடையமந்திரக்கா லற்றதைத்தடைக்கட்டலையோ
தூக்கிமேலேபோட்டவனைத் தோழியரேகொல்லுமென்றேன்
தாதியைக்கொன்றுவிட்டான் தந்திரவித்தையினால்
காளியம்மன்கோவிலுக்கு காவுகொடுக்கின்றேன்
வடவாசல்செல்லியம்மை வாய்தடைக்கட்டிவிட்டான்
பண்டாரம்போலேவந்து படம்பிடித்தான்வாசலிலே
வம்பானவார்த்தைகளும் வாய்பழுதாச்சொன்னானே
அரவத்தைவிட்டிலோ ஆண்டியைக்கொல்லுமென்றேன்
பாம்பைத்தடைகட்டினானே பாதகனவனும்
யானையைமதமேற்றி யாண்டியைக்கொல்லுமென்றேன்
யானைதடைகட்டினான் குரும்பாவியானவனும்
வெறியனைப்போலாக வேள்விவளர்த்தினனே
மறையவனைப்போலேவந்து மங்கியைத்திருட்டிவிட்டான்
நேயமாயக்குட்டிக்கயவன் வகையறியமாட்டானோ
பல்லபாளவித்தைகளு மந்திரமுங்கற்பாளி
எந்தவிராசாவோ எனக்கறியச்சொல்லுமென்றாள்
தருமபுரமாளும் தருமர்தம்பி விஜயனென்றார்
நெய்யைக்குடித்தவனும் அதிகரில்லாவீமனென்றார்
அவ்வார்த்தைதான்கேட்டு அல்லியெனுமாது
எட்டிப்பழம்போலே இருகண்ணுஞ்சிவந்து
உருகியசெம்பான் உற்பபோலக்கண்சிவந்து
தருமபுரமுள்ளதெல்லாம் தவிடுபொடியாக்கி
தங்கமதில்கோபுரத்தை தரையோடேசாய்த்திடுவேன்
அமனைக்குபருத்தியுமாய் மடக்கலும்விரைத்திடுவேன்
ஆண்பிறைபெண்பிறை யடக்கலுங்காண்பிடிப்பேன்
பாணைப்பயணமென்று பயணபேரிபோடுமென்றாள்
வெட்டியானைதானழைத்து விருதுமுரசுரைத்திடுமென்றாள்
ஆயிரம்பரண்டியாகள் மடக்கலும்பயணமென்றாள்
இன்றுவெளிகூடாரமிப்பொழுதேபோடுமென்றாள்

சண்டாவைநாட்டுமென்றான் தருமரையடியுமென்றான்
அப்போது சாமபுவனும் யானையேறிமாலைசூட்டி
அடித்தான்பரயோசை அம்மதுரைதானதிர
மதுரைபடைகளெல்லாம் வாருங்களென்றுசொல்லி
ஆயுதங்கட்டியல்லோ அனைவோரும்வாருமென்று
அல்லியரசாணிபஞ்சபாண்டவாபேரில் சண்டைக்குவருகிறது
மதுரைப்படைகளும் மகாசனங்களுள்ளவரும்
எண்ணுக ஆயுதத்தை எடுத்தரையிற்கட்டிக்கொண்டார்
அமரதருஞ்சமரதரும் அஸ்திரராஜவரும்
கலிங்கர்தெலுங்கர்களும் கன்னிடயரானவரும்
ஈழத்துவங்கணரும் ஒளநாட்டுச்சோனகரும
ஆரியருமாரியரும் அரோமலைத்துநாவர்களும்
உடையவருஞ்சூக்கரு மொட்டியரும்பார்ப்பாரும்
சிட்டிமன்னர்தேசமன்னர் உரைமன்னர்போர்மன்னர்
குறவர்மறவர்களும் குச்சிலியருள்ளவரும்
வன்னியர்துலுக்கர்களும் மராட்டியருள்ளவரும்
வேடரும்வில்லியரும் வேணசனமுள்ளவரும்
ஆயுதங்கள்கட்டியல்லோ அனேகஜனம்வந்தார்கள்
பட்டயஞ்சூரிகளும் பாரியமுதல்சமுதாடும
நிமைபில்சுடுகருண்டிகளும் நேரிசமாம்பெரியகத்தி
கூலிசமும்சூலிசமும் குண்டுதுப்பாக்கிகளும்
மண்வெட்டுகோடாலி வல்லயமிருப்புலக்கை
வாளுகளும்வேலுகளும் வளைதடிசக்கரமுங
கண்டகோடாலிகளும் கவண்டுகல்லுண்டுவில்லுஞ்
சிங்காணிபூச்சிவில்லும் சேனவிதஆயுதமும்
இரம்பமும்பாசங்களும் நாலெட்டுஆயுதமும்
எண்ணுக ஆயுதத்தை எடுத்தரையிற்கட்டினார்கள்
சட்டைதம்ன்லச்சிரகபாய் தரித்தார்களெல்லவரும்
சண்டைக்குமுஸ்தீபாய்த் சமர்த்தரெல்லாம்வருகிறார்
வநதுநிரைந்தார்கள் வளம்பெருஞ்சேனையெல்லாம்
யானைகளோ ஆறுலட்சம் அசுவங்களோமூலட்சம்
ஒட்டகமோபத்துலட்சம் ஒன்றாகக்கூட்டினார்கள்
கார்மேகம்போலாகக் கருகதானைகூட்டவரும்
செவ்வானம்போலகச் செவந்தபுரவிகளும்
வந்துநிறைந்தார்கள் வாழ்லரசியல்லியண்டை
பொன்னின்மலைநாடாளும் பேரெடுத்த அன்னமவை
அன்னமவைத்தானழைத்து ஆளுமென்றார்பொன்மதுரை
வென்றுகெலித்துநான் விருதுகட்டிவருமளவும்
செயித்துவருமளவுந் தென்மதுரையாளுமென்றா
முத்துபடிந்துறையும் முனைவீரர்பட்டுறையும்
யானைபடிந்துறையு மடங்கலும்பதனமென்றா
பவளம்படிந்துறையும் பட்டணமும்பந்திரங்கள்

கப்பற்படித்துறையுங் கடந்தோகும்பத்திரங்காண்
செயித்துவருமவளும் சீர்மதுரையாளுமென்றார்
பயணம்பயணமென்று பயணபேரிடியுமென்றான்
அம்பெடுத்துவில்லெடுத்து அம்புறாத்தூணிமுதுகணிந்து
எல்லோரும்பயணமென்று ஏறினார்தேர்மேலே
வானத்துமேகம்போல மணிரதங்கள்வருகிறது
ஆறாயிரந்தேரும் அணியணியாய்வருகிறது
சொக்கலிங்கர்துணையென்று தேரைநடத்தினாளே
அச்சுமிடுமிடென்ன யானைநெருக்கேராசைய
வளைநடிக்கிறுக்கியிட மதயானைகோஷ்டமிட
குதிரையனுமாணிக்கக் கோடிமன்னர்சத்தமிட
வெய்யலுக்கெடுத்தார் வெள்ளைநல்லகூடாரம்
காலலுக்கெடுத்தார் கருப்புநல்லகூடாரம்
கருப்புநிஜான்வெப்புநிஜான் கலந்துபறக்குதுபார்
அல்லிக்கொடிவிருது அசைகிறதுதேர்மேலே
பஞ்சவர்கொடிபறக்க மகரதோரணமசைய
வருகிறதேழுலட்சம் மணவிடங்கொள்ளாமல்
ஆற்றுமணல்போலே அனேககோடிசேனைவரும்
செம்புரண்டாற்போல் சேனைசனங்கள்வரும்
காட்டுக்கிளைப்போலுங் காளான்முளைத்தாப்போல்
சந்திரகுடைபிடித்தார் சூரியன்தோற்றாமல்
பக்கக்குடைபிடித்தார் பகலவனைக்காணாமல்
செந்துசெருப்புமைத்தே சூரியனைக்கட்டிதமே
அடிமக்கித்தபேரிகைகள் சக்கரத்தாணதிர
யானைமேல்மேல்பேரிகைகள் குதிரையின்மேல்டக்காவும்
ஒட்டகையின்மேல்நகபத்தாரா ஓசைபெருகியிறதே
மெல்லாப்பேரியது விருதுமுழக்கிறதே
பாஞ்சசன்னியம்சேவநத்தம் பலவிருதும்தான்முழக்க
சசரிகைவீணைகளும் தாளமுரசதைய
துத்தாரிசங்கமது ஊதுகிறர்கைதிர
மதுராபுரியைவிட்டு வன்காட்டுப்போகவுந்தான்
காடுசெடிதாண்டிக் கரியமலைதான்தாண்டி
ஆறுமலைதாண்டி அதிகவனந்தான்தாண்டி
பொன்னைகடந்தவனம் வேங்கைப்பூத்தவனம்
அண்டப்படியாத இருண்டவனந்தாண்டி
மதுராபுரிப்பட்டணத்தை தானடைந்தாளல்லியம்மாள்
பட்டணத்தைச்சுற்றிக்கொண்டு பாளையமிறங்கினாளே
பதினாயிரம்கூடாரம் பலநிறையும்போட்டார்கள்
இலட்சமேபோட்டாளே இராசாத்தியல்லியம்மாள்
கூடாரங்கட்டார்கள் குழுமடித்தார்பாளையத்திலே

அடிபடுதேறாயபேரி அடிவானத்திடிபோல
கோடைகாலத்திடிபோலே குமுறுதேராயபேரி
செவ்வானத்திடிபோல சேரமுழங்கிறதே
சத்தத்தொனியதுதான் தருமரவாகேட்டுவிட்டார்
ஊரிலுள்ளசெனங்களெல்லாம் ஓடிவந்துபுலம்புகிறார்
சந்தனவடிவழகர் தருமலிங்கமகாராசர்
வெற்றிமதயானை வீமனைத்தானழைத்தார்
ஆணலழகுமன்னனருச்சுனனைத்தானழைத்தார்
நகுலசகாதேவ ராசாக்களைத்தானழைத்தார்
மாயன்பெருமாளை மனதிலேதானினைத்தார்
அடியளந்தமாயவரே ஆதிமூலம்வாருமென்றார்
வாருமென்றபோதே வந்தாரேயெம்பெருமாள்
சந்தனவடிவழகர் தருமருக்குசரணஞ்செய்தார்
கூடச்சரணஞ்செய்தார் கோபாலர்மாயவரும்
என்னையழைத்ததுதா னேதுகருமமென்றார்
பட்டணத்தைசுற்றியல்லோ பாளையங்கள்வந்ததுகாண்
கோட்டையைச்சுற்றியவர் முத்திரைபோட்டார்கள்
சண்டைபண்ணவாருமென்று தமுருமடித்தார்கள்
சண்டைநிசானட்டார்கள் கண்டுவநதிரங்கினதே
எங்கலூராசாவோ ஏதுமறியேனே
ஆளோட விட்டுநீங்க ளறிந்துவரச்சொல்லுமென்றார்
அர்க்காரொருவனைத்தா னனுப்பினார்மந்திரியை
வந்தவராரென்று வார்த்தையறியுமென்றார்
ஒற்றரொருவனவன் ஓடினான்மந்திரியும்
பாண்டியர்களெதிரில்வந்து பாங்குடனேதெண்டனிட்டு
எந்தலூராசனையா எதற்காகவந்தீர்கள்
சண்டை பண்ணவந்ததொரு வயணமென்னராசர்களே
சொல்லுங்களையாவென்று தெண்டனிட்டார்வந்தவர்கள்
மந்திரியுங்கேட்கையிலே மகாராசரேதுசொல்வார்
மதுராபுரியாளும் வாழ்வரசியல்லியற்கு
காணாமல்மங்கிலியம் கட்டினாரவள்கழுத்தில்
பொய்சத்தியம்பண்ணியல்லோ புகழ்வீமன்வந்துவிட்டான்
ஆகையினாற்சண்டைசெய்ய அனேகதளங்கூட்டிவந்தோம்
சண்டைபண்ணிசெலிக்கச்சொல்லும் சாமார்த்தியராசர்களை
வந்தாலேயாச்சுது வாராமலிருந்தாக்கால்
நாளை-கோட்டையிடித்திடுவோம் கொத்தளங்கள்பேர்த்திடுவோம்
தங்கமதில்கோபுரத்தைத் தரையோடேசாய்த்திடுவோம்
ஆமணக்கம்பநத்திகளை மடரவிரைத்திடுவோம்
ஆண்சிறையும்பெண்சிறையு மடங்கலும்பிடித்திடுவோம்
கடுகவாச்சொல்லும் கட்டழகராசர்களை
அவ்வார்த்தைதான்கேட்டு அழகானதூதுவர்கள்

சந்தனவடிவழகர் தருமரண்டைவந்துவிட்டார்
வணங்கிநமஸ்கரித்து மந்திரியுமேதுசொல்வார்
மதுராபுரியாளும் வாழ்மரசிகன்னியற்கு
காணுமல்மங்கிலியம் கட்டினாராமவள்கழுத்தில்
பொய்யசத்தியம்பண்ணியல்லோ வந்தாரம்புண்ணியரும்
ஆகையினாலேதா னல்லிதளங்கூட்டிவந்தாள்
சண்டைக்குவந்தாலே அல்லதுராசாவே
கோட்டையிடிப்பேனென்றாள் கொம்பையறிப்பேனென்றாள்
சண்டைக்குவரச்சொன்னாள் தருமசிங்கராசாவே
என்றுசரணமிட்டா னியலானதூதனும்
தக்கப்புகழுடைய தருமரதுகேட்டு
மாயன்பெருமாளின் மதிமுகத்தைதான்பார்த்து
தையலிளங்கொடிக்கு சத்தியஞ்செய்யவென்று
தென்மதுரைபோகீர்களோ செய்தியெனைசொல்லுமென்றார்
அங்கேநடக்கதொரு அதிசயத்தைச்சொல்லுமென்றார்
அருண்மைந்தர் திருமருகரிராமரேதுசொல்வார்
மண்டலத்துராசாக்கள் வந்துசத்தியம்பண்ணுறார்கள்
வெற்றிமதயானை வீமனவனேதுசெய்தான்
கொதிக்கின்றநெய்தனிலே கொப்பரையேகைதுவைத்து
சத்தியங்கள்செய்யாமல் தாமந்தவாழ்மார்பன்
கொதிக்கின்றநெய்தனைக் கொப்பரையோடெடுத்து
நெய்யைக்குடித்துவிட்டு கொப்பரையையுருட்டிவிட்டான்
மதப்பட்டவீமன்செய்த வண்மையினாலேப்பொழுது
சண்டைக்குவந்தாளே சாயார்த்தியபுள்ளாகன்னி
சண்டைபண்ணவந்தவளைச் சற்றும்விடலாகாது
சண்டைகளைச்செய்யவேணும் சமர்த்தறியவேணுமென்றார்
வந்தசண்டைவிடலாமா ளையபெரியதருமரேசொல்
பிணலுக்கிடைந்தாலே விதிவாளோபெண்ணரசி
வென்றுசெயிக்கவேணும் வீரபட்டஞ்சூட்டவேண்டும்
அவ்வார்த்தைதான்கேட்டு டருண்மைந்தரேதுசொல்வார்
ஆரையனுப்புவோம் யமராதுசெயவென்றால்
எவரையனுப்புவோ மெய்ப்பெருமாள்சொல்லுமென்றார்
நகுலசகாதேவ ராசாக்கள்தங்களையும்
வெற்றிமதயானை பீமனையனுப்புமென்றார்
மூவருமாக வெகுசனங்கூட்டுமென்றார்
நானுங்கூடப்போறேன் ராசாவேயஞ்சாதே
வென்றுசெயித்துநான் வெளிப்பட்டுவருவேனென்றார்
மனதுக்கிசைந்தபடி மாயவரேசெய்யுமென்றார்

பஞ்சபாண்டவர் அல்லியோடு

தருமரதுசேனைகளைச் சகத்சனம்வாருமென்றார்
இன்றுவெளிகூடாரமியலுடனேபோடுமென்றார்

சண்டைமூராகுதுமென்றார் சண்டைக்கொடிநாட்டுமென்றார்
பாளையங்களுள்ளதெல்லாம் பயணங்கள்சொன்னார்கள்
ஆராடாதேர்ப்பாகா அலங்கரியுந்தேரையென்றார்
தேர்ப்பாகனோடிவந்து தேரையலங்கரித்தான்
ஆறுவண்டிநூறுசட்டம் மழகானகுத்துக்கால்
குத்துக்கால்சொடபணிட்டு கொடுங்கைத்திரைவளைத்து
கும்பகலசமது கொடுங்கையலங்கரித்து
தேரையலங்கரித்துத் தேர்ப்பாகன்கொண்டுவந்தான்
அழகானசிலையினா லலங்காரம்பண்ணானே
நாலுபக்கஞ்சாலர்களும் நவரத்னதோரணமும்
கண்ணாடிசல்லிகட்டி கவரிவான்குச்சுவிட்டு
ஐந்துகொத்தாராச்சி யழகுமணிகட்டினானே
நவகண்டவீரமணி நான்குபக்கங்கட்டினானே
வாழைமரங்கட்டியே மகமேரலங்கரித்து
நான்குபுரவிகளை நன்றாய்க்குளிப்பாட்டி
பாராசாரிபுரவியொன்றும் பஞ்சகல்யாணியொன்றும்
தேசியென்னும்புரவியொன்றும் சீவரத்னப்புரவியொன்றும்
நாலுகால்வண்டயமாம் நகைசமூகதிற்கொலுசுகளும்
மூன்றுமேல்கட்டிகளும் பின்னுமேலகுச்சிகளும்
மாணிக்கக்கடிவாளம் வாயிற்கொடுத்தானே
நான்குகுதிரைகளை நன்றாயலங்கரித்து
தேரின்மேலேறினானே சீக்கிரமாய்ப்புரவிகளை
சாய்ந்திருந்துசண்டைசெய்ய சார்மணைபோட்டானே
குந்தியேசண்டைசெய்ய குறிஞ்சிப்பூமேடையிட்டான்
ஒளிந்திருந்துசண்டைசெய்ய ஒருதுதலையணைகளிட்டார்
சந்தனபெட்டியிட்டு சாம்பிராணிதூபமிட்டான்
தேரையலங்கரித்து தேர்ப்பாகனோடிவந்து
அலங்கரித்தேனென்றுசொல்லி யடிவணங்கிதெண்டனிட்டான்
வெற்றிமதயானை வீமனவனெழுந்து
நகுலசகாதேவ ராசரவரெழுந்து
ஆயர்பெருமானு மரிராமாதாவெழுந்து
மகுடமணிந்தார்கள் வாகுவலயமிட்டார்
வாள்களுங்கத்திகளும் வலதுகையில்தானெடுத்து
அம்புவில்லுந்தானெடுத்து அம்பறாத்தூணி முதுகணிந்தார்
சட்டைதமான்வச்சிரப்பாம் தாமணிந்தாராசரெல்லாம்
உண்டுவில்லுஞ்சுண்டுவில்லுஞ் சிங்காணிபூச்சிவில்லும்
வச்சிரத்தையணிந்தான மதவீமராசனவன்
தசாயுதமணிந்தார் மந்திரவாளணிந்தார்
சல்லடைக்குழல்ந்திதாய்ச் சமர்த்தர்வெளியானார்
அருச்சுனரதுமறிந்து ஆயரண்டைஓடிவந்தார்
அல்லியவளோடே அமருக்குப்போரோ

அவள்மேலே அம்புபட்டால் என்னுவியுருகிவிடும்
சிவனாதிக்கிக்கேன் செலவழிந்துபோவேனென்றான்
காண்டிமெடுக்கிறேன் மாதருக்குப்பாணப்பட்டால்
எந்தவிதமானாலு மிட்டுவரவேண்டுமையா
பொற்கொடிமாதரை நீர் பிடித்துவந்துசேருமையா
நல்லதருச்சுனரே நமக்குதெரியவரும்
எந்தவிதமானாலு மிட்டுவந்துசேர்க்கிறேன்போ
உன்மனதுக்கிசைந்தபடி மன்னவனேசெய்வேன்போ
என்றுமேசொன்னாரே எம்பெருமாள்மாயவரும்
அப்போதருச்சுனரு மானபூகர்தாமெழுந்து
வெற்றியதயானை வீமனண்டையோடிவந்து
மதகரிவீமனுக்கு வணங்கிநமஸ்கரித்து
அண்ணாதவீமா அடியேனொருவார்த்தை
அல்லியவள்மேலே அமருக்குப்போறீரே
அவள்மேலேபாணமதை விடவேண்டாமண்ணாவே
வில்வித்தைசெய்யவேண்டாம் விசைபாணம்போடவேண்டாம்
தந்திரமாய்க்கொண்டுவாருந் தாமதமாகாமற்பா
என்றுதொழுதானே யெழில்விசையனருச்சுனனும்
அவ்வார்த்தைதான்கேட்டு வாணாகமீதுசொல்வான்
நல்லதுதம்பியரே நமக்குதெரியவரும்
என்றுசொல்லிமதவீம னேறினான்தேர்மேலே
ஏறினார்தேர்மேலே யெடுத்தார்கொடிக்குடையை
முத்துக்குடைகளுமே முழுவயிரநற்குடையும்
பட்டுக்குடைகளுமே பலதிசையுந்தாவெடுத்தார்
கிருஷ்ணருதேர்மேலே கருடக்கொடிபறக்க
வீமனுதேர்மேலே சிங்கக்கொடிபறக்க
நகுலருதேர்மேலே நாமக்கொடிபறக்க
சகாதேவர்தேர்மேலே சாஸ்திரக்கொடிபறக்க
அர்ச்சுனருக்கிறைச்சல் யானைநெருக்கிச்சேனையும்
வண்டிக்கிருச்சிமா மதயானைகோஷ்டமும்
குதிரையதுமானிக்கக் கோடிமன்னர்சதுர்பட
பானைசேனைபரிவார மடங்கலும்வருகின்ற
சேனையெழும்புவதுஞ் சூரியனைக்கப்புவதும்
சந்திரனெழும்புவதுங் கதிரோனைக்கப்புவதும்
சேனையெழும்புவதும் மண்டலத்தைக்கப்புவதும்
அடிபட்டேராயபேரி அங்ககரந்தாளதிர
வெண்சங்கபேரிகது விருதுபுறம்வர
சண்டைசண்டையென்றுசொல்லி சண்டைபேரியடிபட
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிக்கொடிபடர்ந்தே
ரணங்கள்ரணங்களென்று கணபேரியடிபட்டுக
கோடைகாலத்திடிபோல குமுறுதேராயபேரி

அடிவானத்திடிபோல அடிபடுதேராயபேரி
அண்டங்கிடுகிடென்ன அடிபடுதேராயபேரி
அல்லியென்றுபேர்சொன்னால் கலலும்தெய்வங்கூத்தாடும்
மண்தூளுஞ்செந்தூளும் மண்டலத்தைகப்பியதே
வருகிறசெனங்களென்றால் மட்டுமிதங்களில்லை
பட்டணத்தைத்தாண்டிப் பாளையம்வருகிறதே
யூகம்பிரித்தார்களுயித்தியஞ்செய்யவென்று
வந்துமுனைகொடுத்தார் வளம்பெரியசேனையெல்லாம்
இருவராளுபாளயங்க ளெட்டிநெருங்கிறதல்லோ
உத்திபிரிந்தார்க ளுயித்தியம்பண்ணுகிறார்
வில்வளைத்துநாரிபூட்டி வேணபாணந்தொடுத்தார்
சரமேற்சரம்பொழிந்தார் சாமார்த்தியமுள்ளவர்கள்
அமரதருஞ்சமரதருஞ் சமரதரும்அமரதரும்
கலிங்கர்தெலுங்கர்களும் தெலுங்கர்கலிங்கர்களும்
கன்னடியர்கஸ்தியர் கஸ்தியாகன்னடியர்
சத்திரியர்முத்திரியர் முத்திரியர்சத்திரியர்
யானைபோயியானைதாக்க அஸ்வத்தோடஸ்வந்தாக்க
ஒட்டகமுமொட்டகமும் ஒக்கப்போர்செய்யுதங்கே
ஓருவர்கொருவரல்லோ யுயித்தங்கள்பண்ணுகிறார்
எட்டிற்றேநல்லசண்டை எழும்பிற்றேறாயபேரி
மூளுதேநல்லசண்டை முழங்கிற்றேறாயபேரி
வந்துமுனைகொடுத்தாள வாழ்வாசியல்லியம்மாள்

பீமசேனன் யுத்தம்

வெற்றிமதயானை வீமனவன்பார்த்து
வந்துவளைத்தானே வல்லிடிபோல்தேர்திருப்பி
தேரைத்திருப்பியவன் செங்கையிலேவில்லெடுத்தான்
வில்வளைத்துநாரிபூட்டி வில்லைக்குணத்தொனித்து
அம்புதொடுத்தானே அல்லியவள்மேலாக
வாரிபொழிந்தானே வளம்பெரிய அஸ்திரத்தை
வாயுவாஸ்திரங்களோடு வருணாஸ்திரங்களுந்தான்
இமையாஸ்திரங்களோடு இந்திராஸ்திரங்களும்
சூரியஅஸ்திரமாஞ் சுப்பிரமணியஅஸ்திரமாம
மூடுபனிபோலாக மூடிகவிவிட்டான்பாணமது
அம்புவருமவேகமானு லார்க்கமுடியோகாது
பாணம்வருவேகமானல் பார்க்கமுடியோகாது
சரவருஷமபோலாகச சாமேர்ச ம்பொழிந்தார்
கண்டாளேயல்லியம்மாள் கண்கள்செவந்தாளே
சீறிவெரிபறந்து சிங்கத்தைப்போர்க்கதம்பி
கழுத்திலேமங்கிலியங் கட்டினவனாடா
திருட்டுப்பயலேவுன் சிவன்பறித்திடுவேன்
சண்டிபயலேயுன் சாமார்த்தியம்காணழிப்பேன்

என்சமர்த்துஞ்சேவகமு மிப்போதெரியுதுபார்
அல்லியென்றுபேர்சொன்னால் அழுதபிள்ளைவாய்மூடும்
அல்லியென்றுபேர்சொன்ன லண்டரண்டக்கிடுகிடென்னும்
அரைநாழிகைகொள்ளையிலே பளகாபுரஞ்சேர்ந்திடுவேன்
தேரைத்திருப்பினாளே செங்கையிலேவில்லெடுத்தாள
பம்பரம்போலாகப் பாரரதந்திருப்பி
சக்கரத்திகிரிபோலே சமர்த்துடனேதேர்திருப்பி
வில்வளைத்துநாரிபூட்டி விட்டாள்சரபாணம்
கொட்டாளேவில்லதனைத் தொடுத்தாள்சரபாணம்
ஆகாயமுள்ளதெல்லா மம்பாமேபந்தலிட்டாள்
அம்புவரும்விதங்க ளார்க்குமுடிகூடாது
பாணம்வரும்விதங்கள் பார்க்கமுடிகூடாது
கார்த்திகைமாதத்திலே கனத்தமழைவந்ததுபோல்
ஐப்பசிமாதத்திலே யடர்ந்தமழைபெய்ததுபோல்
சேனைமழைபோலே சொரிகின்றாள்பாணங்களை
அக்கினியாஸ்திரங்கள் அனந்தம்பொழிகிறாளே
நெல்லிப்பழம்போலே நெருக்கித்தெறிக்கப்பளங்கள்
அருநெல்லிப்பழம்போலே யஸ்தமெல்லாங்கொப்பளிக்க
நானூநாள்மட்டாக நல்லசண்டைபண்ணுகிறான்
தன்மேல்வரும்பாணமெல்லாஞ் சங்கரிப்பான்வீமனவன்
ஒருவர்விட்டபாணம் ஒருவர்விலக்கிக்கொள்வார்
இருவர்சமானமாக இனியசண்டைபண்ணுகிறார்
வீமன்விடுபாணத்தினால் வெகுசனங்கள்மாளுகுது
யானையின்மேலிருந்தவரை யறுந்துவிழுகுறார்கள்
குதிரையின்மேலிருந்தவரை கொக்கரிததுக்கீழ்விழுந்தார்
ஒட்டகத்தின்மேலிருந்தோ ரோலமிட்டுவிழுவார்கள்
அம்மாடியென்றுசொல்லி யலரிவிழுவார்கள்
தென்னங்காய்போலாகச் சேனைகளையுருளவிட்டாள்
பனங்காய்கள்போலாகப் பறித்தரிவான்வேணதலை
அறுந்ததலைகளெல்லா மம்மானாடுதங்கே
பெட்டியுடபேழைபோலே பெலிகொடுத்ததலைகள்போலே
சட்டிகள்பானைபோலே தலைகளுருளவிட்டாள்
அம்மாடியென்றுசொல்லி யனேகந்தலையுருளும்
காலறுந்துபோயவிடுதே கைகளற்றுபோய்விடுதே
ஈரல்குடல்சரிந்து இருநிலத்தில்வீழ்வாரும்
பலிக்குடல்கள்தான்சரிந்து மண்ணில்விழுவாரும்
விலப்பூச்சிபோலாக நிலத்தில்நசுங்கலுற்றார்
சாகிறவுண்ணிபோலே தரையில்நசுங்கலுற்றார்
மாண்டசெனங்களென்றால் மட்டுமிதங்சளில்லை
செத்தசெனங்களென்றால் சொல்லமுடிபோகாது
அல்லியம்மாள்பாளையங்க ளலைந்தலைந்தோடுகுது

சண்டைபண்ணமாட்டாமல் சலாம்பண்ணியோடலுற்ருர்
ஆயுதத்தைத் தூரவைத்து அருகில்சலாம்பண்ணுவாரும்
பண்டாரமென்பாரும் பரதேசியென்பாரும
நாமத்தைகாட்டுவாரும் ன்தாதனென்பாரும்
பிச்சையிரந்துண்ணப் புறப்பட்டோமென்பாரும்
ஆயுதத்தை தூரவைத்து அருகில்சலாம்பண்ணுவாரும்
ஐயையே தெய்வமென்று அலைகிறதேபாளயங்கள்
க்தல லாமதீனென்பார் வன்றமிழர் தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொலிபுலம்புகிருர்
ரீர்தண்ணீரென்று தவிக்குறதேபாளையங்கள்
பளவுரத்தாறு வழியவிட்டான்வீமனவன்
பிடாரியம்மன்கோவிலுக்கு பலிகொடுத்தபாவனைபோல்
அம்மைபார்கோவிலுக்கு ஆடுவெட்டும்பாவனைபோல்
துள்ளுகிறதலைகளெல்லாம் செருக்களங்கள்கொள்ளவில்லை
ரத்தாராயோடுநதே யுத்தக்களங்களெல்லாம்
இவ்விதமாக இனியபோர்செய்குவதே
தேவாதிதேவரெல்லாம் சொல்லுவாரொருவார்த்தை
இராமரதசண்டையென்பார் இராவணன்சண்டையென்பார்
சூரபத்திரர்சண்டையென்பார்சுப்பிரமண்ணியர்சண்டையென்பார்
வீரபத்திராசண்டையென்பார் வேள்விதககன்சண்டையென்பார்
வீமன்போல்சண்டைசெய்வார் ஆருமில்லைவையகத்தில்
வெற்றிமதயானை வீமனவன்பின்னிடையான்
நான்குநாள்மட்டுமல்லோ நலசண்டைபண்ணுகிருன்
அல்லிபெருமாளு மாக்கறித்துப்பறக்கடித்து
ஆலவாய்ச்சொக்கரென்னு மாண்டவரைததானினைந்து
திவ்யாஸ்திரத்தை தூபமிட்டுத்தானெடுத்தாள்
மந்திரதூபமிட்டு வாங்கிவிட்டாள்வீமன்மேலே
மார்புரளவாங்கியல்லோ தோள்புரளவாங்கிவிட்டாள்
மேலிட்டுவருகுறதே வீமனதுதேர்மேலே
வாயில்நெருப்பெரிய வாதுவிழுக்கதுவே
சேருமுடைக்கதுவே செம்பரவிசெத்ததுவே
போட்டதோர்வச்சிறகபாய் பொடிபொடியாயாச்சுதங்கே
சட்டைதமான்வச்சிறகபாய் தவிடுபொடியாச்சுதுகாண்
சரீரங்களுல்லெதல்லாம் சல்லடைக்கண்ணாச்சுது
மானக்குலைந்தானே மதகரியான்வீமசேனன்
விழுந்துபொழுந்தவனும் வெட்கங்கெட்டோடிவிட்டான்

ஸ்ரீகிருஷ்ணபகவான்யுத்தம்.

மாயன்பெருமாளு மலைராயர்கண்டுவிட்டார்
வகைமோசம்வந்ததென்று மாயவருந்தேர்திருப்பி
வந்துமேசண்டைசெய்தார் மயிலேனையான்தன்னுடனே

பம்பரம்போல்தேர்திருப்பி பாணந்தொடுத்துவிட்டார்
அல்லிபெருமாளு மாக்கரித்துபற்கடித்து
சொக்கரைத்தானினைத்துத் தொட்டாளேபாணமதை
இருவர்ரதங்களு மிருநிலத்தில்தான்சுழல
பம்பரம்போலாகப் பாரரதந்திருப்பி
விட்டாள்சரபாணம் மேகவர்ணர்தேர்மேலே
வச்சிரபாணமதை வாரிச்சரம்பொழிந்தாள்
ஒன்றல்லஇரண்டல்ல வொருகோடிபாணம்விட்டாள்
சூரியனைத்தான் மறைத்தாள் தொடுத்தநல்லபாணமதால்
ஆகாயமுள்ளதெல்லாம் அம்பாலேபந்தலிட்டாள்
பெருமாளுமல்லியரும் பிரியாதசண்டைபண்ணுகிறார்
மாளுஞ்சேனைகளென்றால் மட்டுமிதங்களில்லை
செத்தசனங்களென்றால் சொல்லிமுடியாது
ஐயோதெய்வமேயென் றலறுதுதேபாளையங்கள்
யானைமேலுள்ளவர்க ளபயமிட்டுமண்ணைக்கவ்வ
குதிரைமேலுள்ளவர்கள் கொக்கரித்துமண்ணைக்கவ்வ
ஒட்டகமேலுள்ளவர்கள் ஓலமிட்டுமண்ணைக்கவ்வ
இந்தவிதமாக இனியசண்டைபண்ணுகிறார்
அலைகடல்சத்தம்போலே அபயமிட்டுவெகுசனங்கள்
கூக்குரலாகிறதே கோஷ்டமிட்டுப்பாளையங்கள்
அபயம்அபயமென்று அலைகிறதேவெகுசனங்கள்
வடுகரெல்லாம்நீளென்பார் வன்றமிழர்தண்ணீரென்பார்
துலுக்கரெல்லாம்பாணியென்று சொல்லுகிறார்பாளையத்தில்
தண்ணீர்தண்ணீரென் றுசொல்லித் தவிக்கிறதேபாளையங்கள்
அப்போதுஅல்லியம்மா அதிகமானகோபமுடன்
வச்சிரபாணந்தன்னை மந்திராபமிட்டு
மாயராதுதேர்மேலே வரிந்துஇழுத்துவிட்டாள்
உக்கிராஸ்திரங்களாது திவ்வியாஸ்திரங்களாது
இராமசந்திரஅஸ்திரமாம் நாராயணஅஸ்திரமாம்
அக்கினியஸ்திரமாம் மனைத்தும்பொழிகிறளே
ஒன்றல்லவிரண்டல்ல ஒருகோடிபாணம்விட்டாள்
வாரிப்பொழிந்தாளே வளம்பெரியஅஸ்திரத்தை
எடுத்துப்பொழிந்தாளே ஏழுலட்சம்பாணங்களை
விழித்தகண்சிமிட்டாமல் பொழிந்தாளேபாணங்களை
பாதாளமேருகப் பாணந்தொடுத்தாளே
ஆயன்சரீரமெல்லா மங்கம்பிளக்கடித்தாள்
சல்லடைக்கண்போலே சரீரமெல்லாந்தான்றுளைத்து
மயிருக்கொருபாணம் மாதுதொடுத்துவிட்டாள்

வில்பிடித்தகைகளெல்லா மெத்தசிவப்பேறிற்று
கைகளெல்லாஞ்சோர்ந்துவிடக் கன்னியரும்பாணம்விட்டாள்
ஆகாயதேவரெல்லாம் அல்லியரைக்கொண்டாடினார்
இந்தப்படியாக இனியசண்டைசெய்கையிலே
இவனேவெகுபார மென்றொருபாணமதை
மார்புரளவாங்கியல்லோ தோள்புரளத்தொடுத்துவிட்டாள்
வாயில்நெருப்பெரிய வந்துவிழுந்தது
தேருமொடிந்துபோச்சு செம்புரவிதானும்போச்சு
சட்டைதான்வச்சிரப்பாய் தவிடுபொடியாக
செங்கையில்வில்லெடுத்து சோடுசட்டைதானணிந்து
பாதாதியாயோடுகிறார் பாரளந்தவெம்பெருமாள்
வகைமோசம்வந்ததென்று கரியமாலோடுகிறார்

சகாதேவன்யுத்தம்

கண்டான்சகாதேவன் கரியமாலோடுவதை
தேரைத்திருப்பினானே செங்கையிலவில்லெடுத்தான்
வந்துவளைத்துகொண்டான் வல்லிடிப்போல்சகாதேவன்
பேரிகையறைவித்துப் போரெதிர்த்தானல்லியண்டை
சண்டபேரிகையடித்துச் சமர்த்துடனேவந்தெதிர்த்தான்
கண்டாளேயல்லியம்மாள் கண்கள்ரெண்டுந்தான்சிவக்க
ஒருபாணம்விட்டாளே யுலகமெல்லாந்தானதிர
பேரிகையைக்கிழித்தாளே பெரியமடமாதான்கிழித்தாள்
வச்சிரபாணம்விட்டு மார்பைசுக்கலாய்கிழித்தாள்
விழுந்தெழுந்திருந்தான் வெட்கங்கொண்டோடிவிட்டான்

சகாதேவன்அல்லியைப்புலிக்கூண்டினுட்பிடித்துவருகிறது.

எந்தவிதத்தினாலே யிவளைசெயித்திடலாம்
அடங்காதசீலிதனை யடைக்கும்வழியெப்படிகாண்
என்றுதானினைந்து இளையசகாதேவன்
உள்ளங்கைசாத்திரத்தை யுத்தியுடன்பார்த்து
பாதாளஅஞ்சனத்தைப் பார்த்துசகாதேவன்
பத்துசுற்றுப்புலிக்கூண்டை பாங்குடனேகொண்டுவந்தான்
சூதுபண்ணியல்லியரை போனிலடைக்கவேண்டும்
இல்லாமற்போனாக்காலிவளைக் கெலிக்கமுடியாது
இவள்கையாள்மாளுவ தெல்லவரும்நிச்சயந்தான்
சாஸ்திரத்தைத்தான்பார்த்து தாக்குள்ளசகாதேவன்
செருக்களத்தைவிட்டவனுஞ் சீக்கிரமாய்போகலுற்றான்
மாளிகையிற்போய்சேர்ந்த மன்னன்சகாதேவன்
விசுவபிர்மதச்சர்களை விரைந்தோடியழையுமென்றான்
அப்போதுகாவலர்க ளழைத்தோடிவந்தார்கள்
ஆயிரந்தச்சர்களை யழைத்துவந்துவிட்டார்கள்
வந்துபணிந்தார்கள்மன்னன்சகாதேவனைத்தான்

எங்களையழைத்தபணி யாதொன்றுகேட்டார்கள்
நிமிஷமொருநாழிகையில் நிருமியுக்கூண்டையென்றான்
ஒருபக்கம்பார்த்தாலே உச்சித்தேர்போலே
ஒருபக்கம்பார்த்தாலே யுச்சிதக்கூண்டுபோலே
மறுபக்கம்பார்த்தாலே மச்சுவீடுபோலாக
பத்துச்சுற்றுக்கோட்டையதாய்ப் பக்கங்கதவடைத்து
வாசலுக்குவாசலது வச்சிரத்தாள்போட்டும்
சாவியுஞ்சங்கிலியும் தாப்பாளும்வையுமென்றான்
ஆயிரந்தச்சர்களும் மக்கணமேசொப்பனிட்டு
நிமிஷமொருநாழிகையில் நிர்மித்தார்விஸ்வகர்மர்
சோடித்தோமென்றுசொல்லித் தெண்டனிட்டுப்போனார்கள்
அப்போசகாதேவன் அங்கணவேதானெழுந்து
தேரைத்திருப்புகிற சூதனைத்தானழைத்து
குதிரையலங்கரித்துக் கூண்டிலேகட்டுமென்றார்
சாத்திரக்கொடிவிருதைச் சமர்த்துடனேகட்டுமென்றாள்
பாராசாரிப்புரவிகளை பாங்காயலங்கரித்து
கூண்டுக்கழகாகக் குதிரைகளைகட்டுமென்றான்
சாத்திரக்கொடிவிருதைச் சமர்த்துடனேகட்டுமென்றான்
அங்கேசகாதேவனும்புல்லுங்கைபிடித்து
ஏறினான்கூண்டுதனி லெடுத்தடித்தார்பேரிகையை
திறவுகோல்கைபிடித்துச் சூதாகவேறினனே
கூண்டைத்திருப்பியல்லோ கொண்டுவந்தான்பாளயத்தில்
செயங்கொண்டோமென்றுசொல்லி செங்கையில்வில்லெடுத்தான்
சண்டைசண்டையென்றுசொல்லிக் சண்டைபேரியடிபடுது
வெற்றிவெற்றியென்றுசொல்லி வெற்றிநகரடிபடுது
ரணங்கள்ரணங்களென்று ரணபேரியடிபடுது
கண்டாளேயல்லியம்மாள் காற்றைப்போல்தேர்திருப்பி
வந்துவளைத்தாளே வல்லிடிபோல்வளைந்தாள்
எட்டுதேகல்லசண்டை எழும்புதேராயபேரி
மூணுதேகல்லசண்டை முழுங்கிற்றேராயபேரி
விட்டாள்சரபாணம் மேனியெல்லாந்தான்மறைக்க
ஒருவர்விட்டபாணம் ஒருவர்விலக்கிக்கொள்வார்
இருவர்சமானமாக விருதுசண்டைபண்ணுகிறார்
அர்த்தசந்திரபாணங்களி லல்லியொருபாணம்விட்டாள்
சகாதேவன்வில்முறியச் சமர்த்துடனேபாணம்விட்டாள்
வேதாளமாகவந்து வில்லைமுறித்ததுவே
வில்லுமுறியவேதான் வேந்தன்சகாதேவன்
வாள்கேடகந்தானெடுத்து மண்ணிற்குதித்தானே
முன்கந்துபின்கந்து மூப்பத்திரண்டுகந்து
தந்திரசாலவித்தையிலெழும்புவான்சகாதேவன்

அப்போதுவல்லியரு மாரணைக்குதான்பார்த்து
காணங்கள்போடுகிறாள் கைலாகுபண்ணுகிறாள்
கருடப்பாய்ச்சல்தானெடுத்துக் கொப்பெனவேபாயுகிறாள்
புலியும்புலியுமாது போலெதிர்த்தடாவலைபோல்
யானையும்யானையுமாய் அதிர்க்கவெதிர்ந்ததுபோல்
சிங்கமும்சிங்கமுமாய் சீறியெதிர்த்ததுபோல்
கொக்கரித்துவாளிவிட்டுக்கொற்றவனும்பாயுகிறான்
துள்ளுமான்குட்டியைப்போல் துள்ளுகிறாள்அல்லியம்மாள்
ஓடியொளிப்பவன்போ லுபாயமாய்ச்சகாதேவன்
கூண்டிற்புகுந்தானே கொப்பெனவேசகாதேவன்
ஓடிப்போறானென்று உலகாளுந்ராசகன்னி
கூடக்குதித்தாளே கூண்டுதனிற்பாய்ந்தாளே
முன்வாசற்புகுந்தவனும் பின்வாசலோடலுற்றான்
அவ்வாசற்புகுந்தாளே அல்லிமலர்நாயகியாள்
எங்கேபோனான்களனென்று இளங்கொடியாள்தேடுகிறாள்
ஐந்தாங்கட்டுவாசலிலே அல்லியம்மாள்தான்புகுந்து
அவ்வாசல்கதவடைத்து அருந்தாப்பாள்பூட்டினானே
சன்னற்கதவடைத்துத் தாப்பாளும்போட்டானே
ஐந்துவாசற்கதவடைத் தாணழகன்வெளியானான்
அகப்பட்டாளல்லியென்று அடியுமென்றான்பேரிகையை
செயங்கள்செயங்களென்று செயபேரிபோடுமென்றான்
அகப்பட்டாளல்லியென்று அடிபடுதேபேரிகைகள்
சிக்கினாளல்லியென்று சின்னங்களூதுகிறான்
அத்தண்டபேர்களுமே அனைவோருங்கேட்டுவிட்டார்
சந்தோஷப்பட்டார் தருமருடசேனையெல்லாம்
தப்பினசேனையெல்லாந் தென்மதுரைசேர்ந்துவிட்டார்
அப்போசகாதேவ னானந்தமாய்வாறானே
கூண்டைதிருப்பியே கொண்டுவந்தான்பட்டணத்தில்
அருச்சுனன்றன்னருகே யடிபணிந்துதெண்டனிட்டான்
தெண்டனிட்டசகாதேவன் சொல்லுவானொருவார்த்தை
அல்லியுடன்சண்டைபண்ணவமருக்குபோனபோது
அகங்காரப்பெண்புலிதா னகப்பட்டதென்கையிலே
வேங்கைபுலியதனை விடுகூண்டிலடைத்துவந்தேன்
மதுராபுரியாண்ட வாழ்வரசிலல்லியரை
தேரேறிச்சண்டைசெய்யுந் துரைமகளைக்கொண்டுவந்தேன்
அவ்வார்த்தைதான்கேட் டருச்சுனன்மனமகிழ்ந்து
சந்தோஷப்பட்டானே தர்மரந்தவாழ்மார்பன்
அன்னநடைதிரௌபதையாள் ஆரணங்கைதானழைத்து
நாகமடந்தையரை நறுநுதலைத்தானழைத்து
சோரவளநங்கை சுபத்திரையைத்தானழைத்து
நானசெய்தகாரியத்தை நாயகமேநீர்கேளீர்

மாயவரும்யானுமாக வன்னாசம்போனபோது
தீர்த்தயாத்திரைபோகையிலே செய்தபிழைநீர்கேளும்
ஆதிசிவனைநான் அடிவணங்கவேணுமென்று
மதுராபுரியிலே மாணிக்கச்சொக்கலிங்கம்
பிட்டுக்குமண்சுமந்த பித்தனைக்காணவென்று
மதுரைக்குப்போகின்ற வழியிலேயங்கொருவன்
அழுதகண்ணுஞ்சிந்தையுமா யங்கொருவன்புலம்பிநின்றான்
மதுராபுரியாளும் வாழ்வரசியல்லியாக்கு
அன்றுடமுத்தெடுத்து அளப்பாளுமாரிகைக்கு
படிமுத்துக்குறைந்ததென்று பதறிவிழுந்தான்காண்
அல்லியரசாணி யாசுவிலேயாகிறது
அவன்பிறந்தவண்மைகளும் ஆவலெல்லாம்சொல்லுமென்றேன்
ஆறாயிரம்பாண்டியர்க ளறியாதவஞ்செய்ததுவும்
அகிலாண்டம்சொக்கலிங்கம் அங்கயற்கண்ணிகிருபையினால்
அல்லியிலேமேலே அவள்பிறந்தவண்மைகளும்
ஏழுபிராயத்திலே எதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டித்தலைதுணித்து வீரபட்டங்கட்டினது
கொள்ளவருமாப்பிள்ளைக்குக் குறடாகொடுப்பேனென்று
சேரவருமாப்பிள்ளைக்குச் சேருடந்துசெய்வேனென்றும்
ஆளவரும்சம்பந்தியை யடிப்பேனென்றாள்சேருபந்தால்
மூச்சுகொட்டாதெருவிற்கட்டி மொய்குழளாண்டிருந்தாள்
இவ்வார்த்தைநான்கேட் டென்மனதுதாளாமல்
சூட்டினவிறுதறுத்துக் கலியாணஞ்செய்யவென்று
என்றுமனதிலெண்ணி எட்டுநாள்காத்திருந்தேன்
பத்தினியானவள் பாரிவேட்டைபோனபோதும்
பெண்வேஷம்போட்டுமல்லோ பின்தொடர்ந்துபோனேன்
கரும்புவில்மேலேறி மான்வேட்டையாடையிலே
ஆனந்தமாரியர்க்கம்பு பொருக்கித்தந்தேன்
வேட்டைகளாடியே யெத்தகளைத்தவளும்
ஆலமரத்தடியிலே யங்கேபடுத்தாளே
காலைப்பிடித்தேனே கதையொன்றுசொன்னேனே
அடையாளம்காட்டவென்று மோதிரங்கழற்றிக்கொண்டேன்
அன்றுபோய்மற்றானாள் மற்றொருவேஷங்கொண்டேன்
பித்தம்பிடித்தவன்போல் பெரும்பயித்தியங்கொண்டவனாய்
அல்லியரசுபட்டணத்தில் அழுதிருக்கையிலே
வண்ணமருந்தெடுத்து வளம்பாடியானுரைத்தேன்
அனேகதாதிமாரைவிட்டு யாற்றிலென்னைப்பூட்டுமென்றாள்
அதினாலுஞ்சாகாமல் அவர்கிளைவாயிருந்தேன்
தூக்குமரந்தனிலே போடுமென்றாளென்னையவள்
செங்கழுநீர்தாதியை யுபாயமாய்க்கொன்றுவிட்டேன்
காளியம்மன்கோவிலிலே காவுபோடச்சொன்னாளே

பூதக்கிடங்கிலே போட்டடைக்கச்சொன்னுளே
பூதம்பணிமாறப் பிழைத்திருந்தேனவ்விடத்தில்
மாயனொருபெண்ணுகி வரவழைத்துக்கொண்டுவந்தார்
ஆண்டியைப்போலேவடிவெடுத்து அல்லிதன்வாசலிலே
வண்ணமடலெடுத்து மாதுபிச்சைவாங்கிவந்தேன்
மாயன்பிடாரனுனர் வண்ணவிதப்பாம்பானேன்
பாம்புருவாய்போயிருந்து படுக்கையில்நான்கலந்து
பொற்கொடிமாதினுக்குப் புத்திரனுண்டாக்கிவைத்தேன்
மற்றொருவேஷமது மறுநாள்வடிவெடுத்து
பெருமாளந்தமாயவனுர் பிராமணப்பெண்ணுனர்
மெத்தக்கிழவனைப்போல் வேதியனுய்வடிவெடுத்து
அத்வானமானகாட்டில் தண்ணீர்பந்தல்வைத்திருந்தோம்
அதுவேஷந்தன்னுடனே அரண்மனையிற்போயிருந்தோம்
தேவேந்திரனைநோக்கிச் செய்தேன்பெருந்தபசு
யானைத்தலைபோலே யழகானமங்கிலியம்
தும்பிக்கைபோலாகத் திருமங்கிலியச்சரடும்
கொடுத்தனுப்பவேண்டுமென்று கொப்பெனவேதபசுசெய்தேன்
தேவேந்திரபகவான் சித்தமிரங்கியென்மேல்
மாயத்திருநீரும் மங்கிலியந்தரித்துவிட்டேன்
மாலைப்பசுங்கிளிக்கு மங்கிலியந்தரித்துவிட்டேன்
ஆருமறியாம லங்கொருவர்காணுமல்
கட்டினவிருதழுத்துக் கடுகியேவந்துவிட்டோம்
நான்குமாதம்கெர்ப்பமது நடக்குதுகாண்மாதினுக்கு
இன்னவனென்றுசொல்லி யென்னையறியமாட்டாள்
கழுத்திலேமங்கிலியங் கட்டினவனையறியாள்
தரையிலுள்ளராசாக்களை வாவென்றழைத்தவளும்
நெய்களைக்காச்சியல்லோ கைதனைத்துவையுமென்ருள்
மண்டலத்துராஜரெல்லாம் வந்துசத்தியஞ்செயதார்கள்
வெற்றிமதயானை வீமன்குடித்துவிட்டான்
ஆகையினுலேயவள் அமருக்குயிங்குவந்தாள்
தர்மமுடியானும் சகாதேவன்பிடித்துவநதான்
புலிக்கூண்டிலேயடைத்துப் பொற்கொடியைக்கொண்டுவநதாள்
இந்தவயணமெல்லா மேந்திழைக்குநீயுரைத்து
நம்பிக்கைவாங்கியே நாயகியைவெளியிடுங்கள்
கோபங்களாற்றுங்கள் கொம்பனையாள்நாயகிக்கு
மனந்தேறச்சொல்லுங்கள் மாலையிடப்பாருங்கள்
சத்யத்தைசெய்தபின்பு தையலைவிட்டுவிடு
ஆயுதத்தைவாங்கியதன் அப்புறத்தில்விட்டுவிடும்
என்றதுசொல்லியே யெழில்விசையனனுப்பிவைத்தான்

திரௌபதைமுதலானவர்கள்வந்து அல்லியம்மாளை
மனந்திருப்பிமாலையிடச்செய்தது.

அப்படியேயாகுமென்று அன்னநடைமாதர்களும்
திரௌபதைநாககன்னி சுபத்திரைவருகிறாள்
மந்தாரக்குந்தியம்மாள் மற்றுமுள்ளோர்வருகிறார்கள்
வாசலுக்குவாசலது படியேழுந்தான்கடந்து
புலிக்கூண்டுத்தன்னருகே போய்சேர்ந்தார்மாதரெல்லாம்
தோராவடிவழகி துரௌபதையாளேதுசொல்வாள்
ஆரடியம்மாளே யழகான கூண்டிலேதான்
இப்பெரியகூண்டிலேதா னிருக்கிறவள்யார்காணும்
வாயைத்திறந்துநீ வந்தவகைசொல்லுமென்றாள்
மதுரைத்துரச்சியவள் வாய்திறந்தேதுசொல்வாள்
என்னசொல்வேனக்கையே என்தலைவிதிப்பயனை
ஆருக்கடங்காம லரசுநிலைசெய்திருந்தேன்
பெண்ஜன்மமெடுத்ததுநான் போதுமம்மாவெந்தனுக்கு
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
ஓடுகிறதண்ணீரி லுள்ளமணற்சேறுமுண்டு
அடிக்கின்றகாத்துதனி லலைகாற்றுருப்புமுண்டு
ஆலாலகண்டருக்குக் கண்டங்கருப்புமுண்டு
குண்டுமணிக்காணுங் கொஞ்சங்கறுப்புமுண்டு
மயிரேகறுப்பொழிய மற்றகருப்புமில்லை
புருவங்கறுப்பொழிய பின்னைக்கறுப்புமில்லை
ஆறுயிரம்பாண்டியர்க ளரியதவஞ்செய்தார்கள்
மாளுகிறோமென்றுசொல்லி மலைமேற்றவமிருந்தார்
மாளாதேயென்றுநான் மலரிலவதரித்தேன்
அல்லியிலைமேலே யாரணங்குபெண்பிறந்தேன்
ஏழுபிராயத்திலே யெதிர்த்துவந்தநீன்முகனை
வெட்டித்தலையிளந்து வீரபட்டங்கட்டிக்கொண்டேன்
நீன்முகனைக்கொன்றுநான் நீலிபட்டங்கட்டிக்கொண்டேன்
எல்லையரசாண்டு இருந்தேனம்மாவிக்காலம்
கொள்ளவருமாப்பிள்ளைக்குக் கொடாதொடுப்பேனென்றேன்
சேரவருமாப்பிள்ளைக்குச் சேருபந்துதருவேனென்றேன்
ஆளவருஞ்சம்பத்தியை யடிப்பேனென்றேன்சேருபந்தல்
பொய்மைவிருதுகட்டிப் பூமிபாறமாண்டேனம்மா
எவனோதிருட்டுப்பயல் என்கழுத்தில்மங்கிலியம்
தாலியைக்கட்டித்தானே தனிவிருதையறுத்துவிட்டான்
அறிந்துபிடிக்கவென்று அனைவரையும்நானழைத்தேன்
[illegible]
[illegible]

சண்டைக்குவந்திடத்தில் சமர்த்துகளைகாட்டாமல்
எதிரேயிருந்தல்லவோ என்சமர்த்தைப்பார்க்கவேணும்
என்னைமோசஞ்செய்தல்லவோ இக்கூண்டிலடைத்தானே
சரியாகநிற்கவேணுமென்று சமர்த்துகளைக்காட்டவேண்டும்
வெளியேவிடச்சொல்லும் வீரியத்தைக்காட்டுகிறேன்
அவ்வார்த்தைதான்கேட்டு ஏதுசொல்வாள் துரௌபதையும்
கழுத்திலேமங்கிலியம் கட்டினவன்மையெல்லாம்
அந்தவதிசயத்தை ஆரணங்கேசொல்லுகிறேன்
காட்டில்வேட்டையாடநீ கடுகவரும்போது
பெண்வேஷம்போட்டுமல்லோ பின்னேதொடர்கிலையோ
அம்புபொறுக்கிலையோ வாரணங்கேயுந்தனுக்கு
காலும்பிடிக்கலையோ கதையொன்றுஞ்சொல்லலையோ
பித்தம்பிடித்தவர்போல் பெருமருந்துதானெடுத்து
வண்ணமருந்தெடுத்து தண்ணீரிலுரைக்கலையோ
அல்லிப்பெருமாளேநீ யதிககோபங்கொண்டல்லவோ
ஆற்றிலேபோட்டுநீ யவரைப்புரட்டலையோ
தூக்கிலேபோடுமென்றாய் துய்யபசுங்கிளியே
காளியம்மன்கோவிலிலே காவுகொடுக்கச்சொன்னாய்
பூதக்கிடங்கிலே போட்டையுமென்றுசொன்னாய்
மற்றாள்தெய்வகன்னி மணவாளனென்றழுது
தன்புருஷனென்றுசொல்லித் தானழைத்துப்போகலையோ
ஆண்டியரைப்போலேவந்து அல்லியேயுன்வாசலிலே
மடலூர்ந்துவந்தனது வாசலிலிருக்கும்போது
பாம்புகளைவிட்டுநீ பண்டாரத்தைக்கொல்லுமென்றாய்
பாம்புப்பிடாரனைப்போற் பத்தினிவருகையிலே
பாம்பாகவேஷங்கொண்டு படுக்கிலையோவுன்னிடத்தில்
உன்னிடத்தில்போகஞ்செய்து உனக்குமைந்தனுக்கிவைத்து
பார்ப்பானைப்போலவந்து பனிமாலைசூட்டலையோ
தாலிதரித்தவர்தான் தருமர்தம்பியருச்சுனர்தான்
உன்னைதாலிகட்டிவந்ததுதான் சமர்த்தென்றும்பாராதே
அல்லியிலைமேலே அதிசயமாய்ப்பெண்ணானது
மெத்தப்பெரிதென்று பாராதேயல்லியரே
நான்-அக்கினியில்பெண்பிறந்த வதிசயத்தைநீர்கேளும்
வயிற்றிற்பிறந்ததில்லை வன்கொடுமைசெய்ததில்லை
குடலிற்பிறந்ததில்லை குலக்கொடுமைசெய்ததில்லை
சந்திரற்குமச்சமுண்டு சூரியனுக்குங்கறுப்புமுண்டு
குண்டுமணிக்கானாலும் கொஞ்சங்கறுப்புமுண்டு
எனக்குமயிரேகறுப்பொழிய மற்றங்கறுப்புமில்லை
புருவங்கறுப்பொழிய பின்னேகறுப்புமில்லை
மாசிலாப்பெண்பிறந்தேன் வளருகிறேனக்கினியால்

நெருப்பில்பிறந்தேனே நீலப்பசுங்கிளியே
பாஞ்சாலனெங்கியத்தில் பிறந்தபதிவிரதை
மந்திரகிரிமேடைதன்னில் பச்சைமயில்பெண்பிறந்தேன்
அருச்சுனன்மாலையிட அக்கினியில்பெண்பிறந்தேன்
அரகதுளசிமணிகையிலே வரிசக்காரரென்று
செய்திகேட்டிருந்து துயரமிட்டானென்தகப்பன்
ஐவரிருந்தாரென்று ஆயாசப்பட்டார்கள்
நாம்பிறவளர்ந்தேனே மெல்லிருதுவானேனே
போதவளர்ந்தேனே பிள்ளைபெருநாளானேன்
கொள்ளவேவந்தவர்கள் கோடானகோடியுண்டு
மாலையிடவந்தவர்கள் மட்டுமிதங்களில்லை
அப்போதருச்சுனரு மன்னுமொருபாரப்பானாய்
குஷ்டரோகிபோலாக கொற்றவரும்வடிவெடுத்தார்
பாஞ்சாலன்பந்தலிலே பார்ப்பான்போலிருந்தார்
அப்போதென்தகப்பன் ஆலோசனையேதுசொல்வார்
வில்லைவளைத்தவர்க்கு மெல்லியரைக்கொடுப்பேனென்று
அவ்வார்த்தைதான்கேட்டரசமுடிராசாக்கள்
மண்டலத்துராசாக்கள் வந்துவில்வளைத்ததில்லை
இக்கரைசையாண்டதொரு துரைகளெல்லாம்வந்தார்கள்
வானவர்கோனிந்திரரும் வந்துவில்வளைத்தார்கள்
விண்ணுலகுராசர்களும வில்லைவளைத்ததில்லை
தேசத்துராசாக்கள் வில்லைவளைத்ததில்லை
அரசமுடிராசாக்கள் அவ்வில்லைவளைத்ததில்லை
இக்கரசராசாக்கள் இலைவளைக்கமாட்டாமல்
வெட்கங்கள்கெட்டாரே வேந்தரந்தராசாக்கள்
ஆராலுமுடியாது அவ்வில்லைவளைப்பதற்கு
வந்தவந்தராசாக்கள் மானங்குலைந்தார்கள்
அப்போதுன்புருஷனர்ச்சுனனடியாணமுகன்
பார்ப்பானைப்போலிருந்து பார்த்திபன்தானெழுந்து
தேவாதிதேவர்மெத்த துரைகளெல்லாரும்பார்த்திருக்க
விஷ்ணுவும்பிரம்மாவும் வியர்த்துநடுங்கிடவே
விண்ணிரண்டுத்தாணிர அவ்வில்லைத்தாரே
நீர்பார்த்தநாமீனெய்தார் நித்திலங்குமுடியார்
என்னைமாலையிட்டாரே யெழிலவிசையனருச்சுனரும்
எனக்கொருகுறைவுமுண்டோ வென்னுடையதங்கையரே
இவ்வார்த்தைதான்கேட்டேது சொல்வாள்மாதக்கன்னி
அல்லிபரேயப்பியரே அதிசயங்கள்கேளும்
நான்இந்தவுலகமல்ல இன்றட்டுமறுபிறவில்
நாகலோகம்பெண்பிறந்து நாககன்னிநானல்லவோ

ஊருமொருமாணிக்கம் பேருமொருமாணிக்கம்
மாணிக்கந்தனைத் தேடியடைக்கும்பொற்பாவை
என்னைவந்துமாலையிட்ட ரியலானவுன்புருஷன்
எனக்கென்னகுறையாக விருக்கிறேனடியப்பியரே
இவ்வார்த்தைதான்கேட்டெழுந்தாள்சுபத்திரையும்
பூமிற்பிறந்தவளே பொற்கொடியேநீர்கேளும்
மகுடத்தரைச்சியரே வார்த்தையொன்றுநீர்கேளும்
ஆயர்துதங்கையர்காண் அர்மான்மகளல்லவோ
என்னைசிறையெடுக்க இயலானவுன்புருஷன்
சந்நியாசிவேஷங்கொண்டு தார்விசையர்வந்திருந்தார்
மாயப்பொடிமருந்தை மாக்கத்தைதூவிவிட்டார்
என்னைசிறையெடுத்து இட்டுவந்தாருன்புருஷன்
நானென்னகுறையாக விருக்கிறேன்சாணாச்சியரே
அருச்சுனரைப்பார்த்தாலே ஆசைதெளியாது
மீசைமுறுக்கழகர் விழிவிற்கருப்பழகர்
நாவிலேவட்சத்திரம் நயனவிழிபார்வைகளும்
தோளிலதுளசிமாலை தொப்புளிலமிர்தகலசம்
பல்லிலபரசவீணை பாதத்திலசெந்தாமரை
முதுகிலேமட்சரேகை முழங்காலில்முத்துமாணிக்கம
ஸ்திரீலீலைமன்மதனடி சிறுபெண்கட்குகந்தவனடி
அருச்சுனரைப்பார்த்தாலே ஆசைதெளிந்திடுமே
அவ்வார்த்தைதான்கேட் டல்லியருமேதுசொல்வாள்
அழகுவேண்டுமென்றுசொல்லி ஆரடிகாத்திருந்தார்
மாப்பிள்ளைவேண்டுமென்று மயங்கினவராரடிதான்
கணவனார்வேண்டுமென்று காத்திருந்தாராரடிதான்
வேண்டுமென்றிருந்தாலல்லவோ விசயனைவேண்டுவது
இராசாக்கள்தன்னைப்போலே யானும்பகுடஞ்சூட்டி
மாணிக்கக்கிரீடமது மகுடஞ்சிரசிலிட்டு
கத்திகட்டிச்சீமைதனை கன்னியரேயாளலையோ
எதிர்த்தவரைச்சங்கரித்து எல்லையரசாளலையோ
மண்ணாண்டராசாத்தி மனைபாட்டியாயிருந்தால்
பூமியாண்டராசாத்தி பெண்சாதியாயிருந்தால்
கண்டார்நகையாரோ கலியுகத்தாரேசாரோ
பார்த்தார்நகையாரோ பாருலகமேசாரோ
இவ்வார்த்தைதான்கேட் டேதுசொல்வாள்திரௌபதையும்
மகுடதரைச்சியரே வார்த்தையொன்றுநீர்கேளும்
தலைபிலெழுதியதைத் தள்ளிவைப்பாராருமில்லை
எட்டிலெழுதினதை யெடுத்தெறிவாராருமில்லை
அன்றெழுதுமாதிசிவ னெழுத்தெழுதப்போரதில்லை
கடலைத்தொலைக்கலாம் காவேரிநீந்திடலாம்
விதியைத்தொலைப்பதற்கு வேறுவிதமறியோம்

கழுத்திலே தாலியது கட்டியிருக்கையிலே
வயிற்றிலே பிள்ளையது வந்திருக்கையிலே
ஆயாசப்படுவதுதான அன்னியருக்கேச்சாகும்
தாணியுள்ளோர்கேட்டாலே சற்றேநகைப்பார்கள்
மாலைதரித்துநீ மணமுகூர்த்தம்செய்யவேணும்
எப்போதும்போலேயுங்க ளிராச்சியமாளவேண்டும்
மதுராபுரிப்பட்டணத்தில் மண்டலத்திலாருமில்லை
எப்போதும்போலேநீ யெல்லியரசாணுமம்மா
அவ்வார்த்தைதான்கேட் டல்லியம்மாளேதுசொல்வாள்
நல்லது ஆச்சியரே நம்மைவெளியேவிடும்
உங்கள்மனதின்படியாக விவகாரம்பேசுவதேன்
கூண்டில்அடைத்துஎன்னை விவகாரம்பேசுவதேன், வீதியிலேயிருக்கவே
ணும் விவகாரம்பேசவேணும், வெளியேவிடுங்களென்றாள் மெல்லியலாங்
கொடியாள், அவ்வார்த்தைதான்கேட் டன்னநடைதிரௌபதையாள்,
தோகைமயிலாளும் திரௌபதையுமேதுசொல்வாள்
கையிலிருக்கும்வாளை கன்னியரேவிட்டுவிடு
சந்திராயுதத்தைநீ சன்னலிலேவீசிவிடும்
என்வார்த்தைதள்ளிநீ யாதொன்றும்பேசவேண்டாம்
என்றும்நம்பிக்கைதந்தாலே நான்விடுவேன்வெளியிலேதான்
சத்தியத்தைதந்தாலே தையலரேவிடுவேனம்மா
அப்படியேயாகுதென்று ஆரணங்குமேதுசொல்வாள்
சொக்கர்திருவாணை ஸ்ரீராமர்தன்னாணை
ஆதிசிவனதன்னாணை ஆறுபிரவராணை, அங்கயற்கண்ணம்மையவர்மே
லுந்தன்னாணை, பரமசிவன்தன்னாணை பார்வதியார்தன்னாணை
சந்திரசூரியருஞ் சமஸ்தானதேவதைமேல்
நல்வரும்ஐஸ்வரியு மிருஷியர்மேலாணையென்றாள்
இந்திரனும்பிரம்மாவு மெல்லார்மேலாணையென்றாள்
சத்தியந்தவறுவேனென் றென்றுநீதையலீரே
காலம்பிரண்டாலும் கலியுகம்பொய்த்தாலும்
சந்திரர்கள்சூரியர்கள் தெற்குவடக்கானாலும்
சத்தியந்தவறுவேனென் றென்றுநேதையலீரே
கதவைத்திறந்தல்லோ கடுகவிடுங்களென்றாள்
அப்போதுதிரௌபதையாள் ஆரணங்குமேதுசொல்வாள்
சகாதேவராசனை சடுதியில்வரவழைத்து
கதவைத்திறந்துநீர் கன்னியைவிடுகவென்றாள்
அப்போதுசகாதேவன் அன்புடனேதானெழுந்து
தந்திரவுபாயத்தில் சாத்துங்கதவுகளை
எட்டித்திறந்தானே யியலானபொற்கதவை
மந்திரமாகவேதான் திறந்துவிட்டான்பொற்கதவை
மின்னொளிபோலே வெளிப்பட்டாளல்லியம்மாள்
சந்திரனைப்போலே திரும்புகிறாள்நாககன்னியாள்

குன்றுமேற்சந்திரன் குதித்தெழுந்தபாவனைபோல்
பட்டத்துரைச்சியவள் வந்தாள்வெளியாக
மூடிச்சிவிகைவைத்தார் முன்னாலேயல்லியற்கு
ஏறினாள்சிவிகைதன்னி லெடுத்தார்கள்தாதியர்கள்
அந்தப்புரத்திலே வாரணங்கைகொண்டுசென்றார்
பந்தாங்கட்டரண்மனையிற் பத்தினியைக்கொண்டுசென்றார்
சிவிகைதனைவிட்டிறங்கிச் சென்றாளே மாளிகையில்
கெண்டிகையிற்றீர்த்தமது கொண்டுவந்துமுன்புவைத்தார்
கைகாலுஞ்சுத்திபண்ணிக் கனிவாயைக்கொப்பளித்து
அமுதுண்ணுமண்டபத்தி லாரணங்குபோய்சேர்ந்தாள்
பந்திப்பாய்மேலாசைப் பாங்குடனே வந்தமர்ந்தாள்
வாழையிலைபோட்டு வரிசையுடன்னீர்தெளித்து
மல்லிகைமொக்குபோல் மாற்றுவெள்ளிநிறம்போல
போசனமும்பாலித்தும் பொற்கறியும்வைத்தார்கள்
பத்துவகைக்கறியும் பதினெட்டுபச்சடியும்
சர்க்கரைபாற்போசனமும் முப்பழமும்போசனமும்
உண்டுபுசித்தார்க ளுரிமையுடனெல்லவரும்
கைகாலலம்பினார்கள் கனிவாயும்சுத்திபண்ணினார்கள்
மற்றுமொருமண்டபத்தில் வந்தமர்ந்தாரெல்லவரும்
சந்தனமும்புஷ்பமுந் தாம்பூலந்தான்கொடுத்தார்
வாங்கித்தரித்தார்கள் மண்டபத்தில்கொலுவில்வந்தார்
அன்னநடைதிரௌபதையாள் அருச்சுனரைத்தானழைத்து
கல்யாணமுகூர்த்தமது கடுகவுள்வையுமென்றாள்
ஓலையெழுதியே யூருக்கனுப்புமென்றாள்
ஆறாயிரம்பாண்டியர்க ளனைவோர்க்குஓலையது
எழுதியனுப்புமென்றா ளின்பதிரௌபதையாள்

கல்யாணவோலையெழுதி இராசருக்கனுப்புதல்.

அவ்வார்த்தைதனைக்கேட் டருச்சுனருமனமகிழ்ந்து
அண்ணன்தருமராயருக் கறிக்கையிட்டானருச்சுனரும்
மாயன்பெருமாளு மற்றுமுள்ளோர்யோசனையாய்
சாஸ்திரிபிராமணரைச் சடுதியிலேதானழைத்து
ஊர்க்கணக்கப்பிள்ளைகளை யுத்தமரையவரழைத்து
சிர[illegible]சர்களைச் சிறப்புடனேதானழைத்து
திங்கட்கிழமையிலே வெகுநல்லமுகூர்த்தம்வைத்து
அல்லியர்க்கு மருச்சுனர்க்கு மழகுமுகூர்த்தம்வைத்து
ஆறாயிரம்பாண்டியர்க ளனைவோரும்வாருமென்று
எழுதுமென்றோலையது இன்பமுடன்தருமனிக்கும்
அப்போ கணக்கப்பிள்ளை அன்புடனேயோலைகொண்டு
குருப்பனையோலை இருபக்கங்காம்பரிந்து
தாளிப்பனையோலை தலைபக்கம்காம்பரிந்து

வாரியவோலையிலே மஞ்சளைமேற்பூசி
ஆயிரம்பாண்டியர்களையன்மார்தங்களுக்கு
வக்கணையாகவேதான் வைத்தெழுதினார்கள்
எழுதியவோலைதன்னைச் சுருள்மடித்துதந்தார்கள்
செந்திருக்கந்தான்போட்டுத் திருவடிக்கீழ்வைத்தார்கள்
சாஷ்டாங்கதெண்டனிட்டு நடந்தாரேகணக்கப்பிள்ளை
ஓலைதனையெடுத்து உத்தமனார்தருமலிங்கம்
சாற்றிலதிகமான கடுந்தூதரையழைத்து
பலையுடனேதலைகொடுக்கும் மன்னவரைதானழைத்து
ஓலைகொண்டுபோமென்றார் உத்தமனார்தருமலிங்கம்
இந்திரபுரந்தாண்டி இயலானகாடுவிட்டு
காடுசெடிதாண்டிக் கரியமலைதானதாண்டி
ஆறுசுனைதாண்டி யதிகவனந்தான்தாண்டி
குன்றுமலைதாண்டிக கொப்பனவேதூதாட்கள்
மதுராபுரிபட்டணத்தில் வந்துவிட்டார் தூதாட்கள்
பாண்டியராசர்முன்னே பாங்குடனேஓலைவைத்தார்
ஆறாயிரம்பாண்டியர்கள் ஐயன்மார்முன்புவைத்தார்
சாஷ்டாங்கமாகவே சரணமிட்டார் தூதாட்கள்
ஓலைதனைப்படித்து உத்தமர்கள்தான்மகிழ்ந்து
சந்தோஷப்பட்டார்கள் தர்மமுடிராசாக்கள்
நாமும்வருவோமென்றார் ராசாக்கள்பந்தலுக்கு
ஆறாயிரவர்களுமையன்மார்பயணமானார்
பொன்னின்மலைநாடாளும் பேரெழுதியவர் கூ-
மற்றுமுள்ளராசாக்கள் மன்னர்பயணமானார்
யானைபரிவாரமடங்கலும்பயணமானார்
சூரியோதனராசனுக்குச் சுருளோலைவந்ததுகாண்
துருபத்தேசனுக்குச் சுருளோலைவந்ததுகாண்
மத்ராதேசனுக்கு வந்துதேவோலைகளது
மண்டலத்துராசருக்கு வந்துதேவோலைகள்தான்
கல்யாணவோலைதன்னைக் கண்டந்தராசாக்கள்
சகலமானபேருஞ் சந்தோஷமாய்வருகிறார்கள்
திக்கரசையாண்டதொரு துரைகளெல்லாம்வாரார்கள்
மண்டலத்தையாண்டவர்கள் வருகிறார்துரைகளெல்லாம்
மேளம்முழக்கிற்று மும்மண்டலந்தானதிர
செந்தாளெழும்புவது சூரியனைக்கப்பிறங்கே
கந்தாளெழும்புவது கதிரோனைகப்பிறங்கே
முத்தரப்பிளந்தார்கள் மூன்றுகால்நட்டார்கள்
பவளம்பிளந்தார்கள் பந்தக்கால்நாட்டினார்கள்
வெள்ளிபாலகால்நிறுத்தி வெற்றிலையால்பந்தலிட்டு
முத்திரம்பிளந்தார்கள் முத்துக்குடையாபந்தலிட்டார்
கரும்பாலேகால்நிறுத்தி அருப்பாலேபந்தலிட்டார்

பச்சோலைபந்தலது பாங்காயலங்கரித்து
வன்னிமாங்கமுகுமரம் வாசலெல்லாம்நாட்டினார்கள்
சோலைபலாமரமுந் தெருவெல்லாம்நாட்டினார்கள்
வாழைமரங்களது வாசலெல்லாம்நாட்டினார்கள்
மாவிலைதோரணமு மகுடதோரணங்கட்டினார்கள்
எங்கெங்குஞ்சோலைகளு மெத்திசைதோரணமும்
கண்ணாடிசல்லிகட்டிக் கவரிமான்குச்சுவிட்டு
பஞ்சவர்ணகிளிகளைப் பந்தலிலே தூக்கிகட்டி
அன்னமுமயிலினமு மழகுபெறக்கட்டினார்கள்
சன்னலிலேபன்னீருஞ் சாடினாரெத்திசையும்
நிலைகோலமிட்டார்கள் நிலமெல்லாம்பூத்தெளித்தார்
அத்தர்புனுகுகளை யள்ளித்தெளித்தார்கள்
பட்டுரத்னபாய்போட்டார் பந்தலுக்குள்ளாக
சாரந்தலைக்கணையுஞ் சகலாத்துதிண்டுவைத்தார்
அந்தசமயத்தில் அனந்தங்கோடிராசாக்கள்
வருகிறதுரைகளென்றால் மட்டுமிதங்களில்லை
வாகனங்கள்விட்டிறங்கி வந்தார்துரைகளெல்லாம்
சந்தனவடிவழகா தருமருக்கேதெண்டனிட்டார்
பந்தலில்வந்தமர்ந்தார் பாங்குள்ளராசாக்கள்
அந்தண்டபெண்களு மனைவோருஞ்சிவிகைவிட்டு
அந்தப்புறத்திலே யனைவோரும்போய்சேர்ந்தார்
சாத்திரப்பிராமணர்கள் சகலரும்வந்தமர்ந்தார்
செந்நெல்லைநகிழ்பரப்பிச் சேஷமணைபோட்டு
மணவறையைப்போட்டார்கள் மாப்பிள்ளையைகூட்டிவந்தார்

அல்லியரசாணியை யருச்சுனன் மாலையிடுதல்.

மாப்பிள்ளைபெண்ணுமாக வந்தமர்ந்தார்பந்தலிலே
சேஷமணைமேலே சீருடனேவந்தமர்ந்தார்
செந்நெல்லரிசிகொண்டு தெற்குநோக்கிபொங்கலிட்டார்
நாவிதன்வந்துநின்றான் நல்லமணப்பந்தலிலே
பாலால்முகந்துடைத்தார் பத்துவிரல்நகம்வாங்கி
பணிசெய்வோன்சங்கூத பாத்திரர்குடைகவிய
சங்கீதமேளங்கள் சபையில்முழங்கிநிற்க, வெற்றிசங்கூதவே விருதுமேள
மடிபடவே, சிகைகழித்தார்கள் சீருமிருவருக்கும்
முன்னூறுப்பிராமணப்பெண் மூன்றுநலங்குசெய்தார்
ஐந்நூறுபிராமணப்பெண் ணைந்துநலங்குசெய்தார்
எழுநூறுபிராமணப்பெண் ணேழுநலங்குசெய்தார்
மந்திரசாலையிலேமந்திரசீராட்டிவைத்தார், ஸ்நானங்களாட்டினார் தம்ம
ரூபாரும், நீர்சுட்டியுலத்தினார் சிலங்கிள்ளிகாப்புமிட்டார்
கழுத்துநல்கனத்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகிலைக்களைந்து நாகத்துவிர்பட்டுடுத்தி
மாப்பிள்ளையும்பெண்ணையும் மண்டபத்திற்கூட்டிவைத்தார்

முத்துவடங்களாம் பொற்கனமாலைகளாம்
வட்டச்சரப்பளியாம் மார்நிறைக்கப் பூவடமாம்
ஐந்துவிரலுக்கு மழுத்தியமோதிரமாம்
பத்துவிரலுக்குப் பதித்தகணையாழிகளாம்
பாடகம்தண்டைகளாம் பருஞ்சிலம்புகாலாழி
காலாழிகல்லணையாம் பிலாழிபிலணையாம்
அஷ்டாபரணமெல்லாம் அலங்காரம்பண்ணினார்கள்
சோடிதநேர்மென்றுசொல்லி செண்டடிட்டார்கள்
அருச்சுனரையல்லியரை யழைத்தார்கள்பந்தலிலே
மணவரையின்மேலாக வந்தாரிருவருமாய்
அரசாணிநாட்டினார் எம்பிகுழிவைத்தார்
சாலுங்கரகமுஞ் சட்டமுடன்வைத்தார்கள்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
குத்துவிளக்குகளும் குடவிளக்குமுன்புவைத்தார்
பார்த்திபனருச்சுனர் முன்பாலியெதிராக
ஓமப்புகையிலே யுடனிருந்துவேதஞ்சொல்ல
ஆயிரம்பிராமணரங்கிருந்துவேதஞ்சொல்ல
காப்பரிசிதான்வழங்கிக் கங்கணந்தரித்தார்கள்
ஆறாயிரம்பாண்டியர்சளையமார்தாமெழுந்து
மாவுங்கழுநாலு மஞ்சளுடனவ்விதையும்
தாலியுங்கூறையுந் தந்தாரேபாண்டியர்கள்
காலுக்குமிஞ்சியிட்டார் கைக்குக்கணையாழியிட்டார்
சாலுங்கழுவியே கன்னியைத்தானமிட்டார்
தந்தேனுனக்கிந்தேன் தாரைநீபிடியென்றார்
மாவுங்கழுநாலு மஞ்சளுடனரிசி
அந்தணப்பிராமர்களஸ்தமிட்டார்மங்கிலியம்
மண்டலத்துராசாக்கள் மன்னர்களஸ்தமிட்டார்
ஆறாயிரம்பாண்டியர்சளையன்மாரஸ்தமிட்டார்
மாயனாபெருமாளு மலைசாமரஸ்தமிட்டார்
ஆரகராவென்றுசொல்லி யழுத்துகிறான்மங்கிலியம்
கௌரிவாவென்றுசொல்லித் தோவிசையனசட்டலுற்றான்
மாதுகலைகுனிய மன்னன்தரிக்கலுற்றான்
பிரமமுடி மூன்றுமுடி போட்டானேபுண்ணியனும்
தேவதுந்துமிமுழங்கத் தேவர்பூமாரிபெய்தார்
சங்கீதமேளமது சபையில்முழங்கிவர
அடிபடுதேபேரிகைதான் அங்ககரந்தானதிர
முப்பத்துமுக்கோடி முனிவர்கள்தேவரெல்லாம்
ஆகாயவீதியிலே யருச்சுனரைவாழ்த்தினார்கள்
முப்புரத்தைக்காவெரித்த முக்கண்ணனார்வாழ்த்தி[illegible]
அருச்சுனர்க்குமல்லியர்க்கு மட்சத்தையெறிந்துவி[illegible]ர்

அலங்காரம்பண்ணுற்று ரழகாயிருவரையும்
எழில்விசையராசாவை எப்படியலங்கரிப்பார்
கோதிமுடித்தார்கள் இறுக்கொண்டைபோட்டார்கள்
உடகொண்டைபோட்டார்களருமாலைகட்டினார்கள்
வண்டிநதலைப்பாகை மன்னனுக்குத்தானதரித்தார்
முத்துக்கிக்கனது முகமழகாய்ச்சக்கிலிட்டு
முத்துக்கலிக்கத்துறாய் முன்னெற்றியிலேசொருகி
லலாடச்சிங்கத்துராவும் நடுத்தலையிலேசொருகி
ஓட்டுக்கடுக்கனது உலகம்விலைபெறுமே
பச்சக்கல்முருகுதகளைப் பதித்தார்களருச்சுனற்கு
வச்சிரக்கடுக்கனுடன் மாணிக்கக்கடுக்கனிட்டார்
கண்டசரங்களுடன் கனவித்தாப்பந்தனமும்
மோகனமாலையுடன் முத்துச்சரப்பளியும்
ஐந்தாம்பிறைபோலே அடுக்கடுக்காய்ப்பதக்கம்
சிக்குமுதக்கடுக்கு சீரானபாசிபந்து
அரைநாண்கயிறுகளு மைந்து விரல்மோதிரமும்
நீட்டினவக்குங்கால்களுக்கு நெரிஞ்சிப்பூசல்லடமாம்
மண்டியிடுங்கால்களுக்கு மாதளம்பூச்சல்லடமாம்
சந்திரகாந்திகட்டிகட்டித் தாமரைப்பூச்சுங்குவிட்டு
பூவிழைத்த அங்கிதன்னை பூட்டியலங்கரித்து
பொன்னிழைத்ததுப்பட்டாவைப் போட்டார்கள்வல்லவாட்டு
சிவசிவாவென்றுசொல்லித் திருநீற்றுக்காப்பணிந்தார்
சந்தனப்பொட்டுமிட்டார் தருமர்தம்பியருச்சுனர்க்கு
மல்லிகைமாலைதன்னை மார்பிலணிந்தார்கள்
அருச்சுனரைசோடித்தா ரழகுபெறத்தோழரெல்லாம்
ஆறாயிரம்பெண்களனைவோருஞ்சோடித்தார்கள்
சம்பங்கியெண்ணெயகொண்டு தடவிமயிராற்றி
சீவிமயிராற்றிச் சிமிழ்போலேகொண்டையிட்டு
ஒவ்வொருமயிருக் கொவ்வொருபொன்னிதழாம்
பூவிதழும்பொன்னிதழும் பூட்டியலங்கரித்தார்
கட்டிமுடித்தகொண்டை காதின்கீழ்சோதிமின்ன
சுற்றிமுடித்தகொண்டை சூரியனைதோற்றடிக்கும்
ஆண்மயிலைப்பெண்மயிலை யண்டையிலேசேர்த்தார்கள்
சந்திரனைச்சூரியனை சரியாய்பிறையணிந்து
பக்கத்திற்சேர்த்தார்கள் பல்லியாழ்வார்பிறையும்
பல்லிக்கிமெல்லிமி பக்கமயிர்கொலுசும்
அருகுகொப்புசொருகுவாளி அன்னகொப்புமணிந்தார்கள்
பச்சைக்கல்முருகுகளும் பதித்தார்களல்லியற்கு
ஏழுக்குதரியட்டிகைமேற் காதிற்பாலிலையும்
நாகரீகக்காரையரு நடுக்கழுத்திற்பூஷணமாம்
ஒட்டைச்சரடுகளாம் ஒருபுறாம்பொற்சரிகை

வாழ்த்தியேபோனார்கள் வானவர்களனைவருந்தான்
அரசாணிகட்டினார்க ளம்மிமிதித்தார்கள்
அப்போதருச்சுனரு மல்லிப்பெருமாளும்
அருந்ததிபூசைபண்ணி யக்கினிப்பொரியிறைத்தார்
கலியாணமாற்றினார் கட்டழகரிருவருமாய்
மாலைதனைமாற்றி வந்தமர்ந்தாரிருவருமாய்
அதுகண்டபேர்களு மள்ளியேசேசையிட்டார்
வந்திருந்தராசாக்கள் வந்தவர்கள்மொய்யுமிட்டார்
ஆறாயிரவரு மையன்மார்சேசையிட்டார்
சேசைதரித்தபின்பு சீருடனேமொய்யுமிட்டார்
மகுடமுடி ராசாக்கள் வந்தவர்கள்மொய்யுமிட்டார்
காப்பரிசிதான்வழங்கிக் கங்கணமவிழ்த்தார்கள்
அனைவரையுந்தண்டனிட்டு பண்ணியரண்மனையிற் புகுந்தார்
பாலிகைப்பாயமேலே பாங்குடனேபோய்ச்சேர்ந்தார்
பாலும்பழங்களுண்டு பசியாறிவீற்றிருந்தார்
அந்தமணப்பந்தலிலே யழகானதருமலிகையும்
மொய்பாக்குவெற்றிலையு முடிமன்னராசருக்கு
சந்தனப்புஷ்பமுந் தாம்பூலம்வழங்கினரே
ஆயிரம்பிராமணருக்கு மதிபரதேசிகட்கு
பலதானங்கொடுத்தார்கள் பிராமணருள்ளவர்க்கும்
தானதர்மமுள்ளதெல்லாந் தருமம்வழங்கினார்
பலதானம் வழங்கியே போய்விட்டார்பிராமணர்கள்
மன்னத்துராசாக்கள் வந்திருந்ததுரைகளெல்லாம்
போசனச்சாலையிலே போய்புகுந்தாரெல்லவரும்
பந்திப்பாய்போட்டார்கள் பாங்குடனேவந்தமர்ந்தார்
வாழையிலைபோட்டு வரிசையுடன்நீர்தெளித்தார்
முப்பழமுஞ்சர்க்கரையுந் தேனுமன்னாகள்வைத்தார்கள்
புத்துருக்குநெய்வார்த்துப் போசனமுண்ணலுற்றார்
அத்தளிகையுண்டபின்பு மறுதளிகைமுன்வைத்தார்
மல்லிகைமொக்கைப்போலே மாற்றுவெள்ளிநிறம்போலே
போசனக்கன்பாலித்துப் பொரிக்கறியும்வைத்தார்கள்
பத்துவிதக்கறியும் பதினெட்டுப்பச்சடியும்
எட்டுவிதக்கறியு மியலானபோசனமும்
பொன்போலப்பருப்பும்வைத்துப புத்துருக்குநெய்சொரிந்தார்
அந்தளிகையுண்டபின்பு மறுதளிகைவைத்தார்கள்
இனிப்போசனதயிருமிட்டா ரெலுமிச்சங்காயுமிட்டார்
போஜனங்களுண்டபின்பு பொடியிட்டுக்கைதிருப்பி
கைகழுவித்தண்ணீர் கனிவாயுங்கொப்பளித்து
சித்திரப்பந்தலிலே வந்தார் துரைகளெல்லாம்

சம்பங்கிதாமரைப்பூவுந் தட்டோடேவழங்கினார்கள்
உறவின்முறைத்தாம்பூல முற்றவர்கள்வழங்கினார்கள்
யானையலங்கரித்து அருச்சுனர்க்குகொண்டுவந்தார்
அத்தனங்களைச்சோடித்து அல்லியர்க்குகொண்டுவந்தார்
யானைமேலருச்சுனரு மத்தளத்திலல்லியரும்
ஏறினார்பிருவருமாய் எடுத்தார்வெண்குடைகள்
சண்டாபறக்கவிட்டார் தனிபேரிகையடித்தார்
யானைமேல்பேரிகையும் குதிரைமேல்டங்காவும்
ஒட்டகம்மேல்நகபத்தும் ஓசைமுழங்கவேதான்
சங்கீதமேளமது சபையில்முழங்கவேதான்
எக்காளெசின்ன மெழில்பெறவேயூதிவர
பாஞ்சசன்னியம்தேவதத்தம் பலவாத்தியம்முழங்க
சாமரங்குளிர்வைய யெக்காளையூதிவர
பகல்வர்த்திமத்தாப்பு பட்டம்பகல்போல்பிடித்தார்
புருசுவெடிபாணம் போதமுழங்கிற்றே
நக்ஷத்திரபாணமது நன்றாயமுழங்கிற்றே
ஆட்டக்கூத்துகளும் அவரும்பவனிநாடகமும்
கேளிக்கைதன்னுடனே கீர்த்திமன்னனருச்சுனரும்
நான்குதெருக்கோலம் நன்றாய்வருகிறார்கள்
தண்ணீர்தெளிப்பார்கள் சாம்பிராணிபோடுவார்கள்
வாழைக்கமுகும் வாசலெல்லாங்கட்டுவார்கள்
நிலைக்கோலமிடுவார்கள் நிலமெல்லாம்பூத்தெளிப்பார்
ஊர்கோலமாகியே யுத்தமர்கள்வந்தார்கள்
ஆலஞ்சுற்றினார்களருச்சுனர்க்குமல்லியர்க்கும்
திருஷ்டிகள்சுத்தியே தெருவிலேகொட்டுவார்கள்
யானைக்கள்விட்டிறங்கி மண்டபத்திற்போய்புகுந்தார்
பாலும்பழங்கள்தின்று பசியாறியிருந்தார்
இந்தநாள்சென்றபின்பு அந்தண்டராஜாக்களும
அவரவர்மாளிகைக்கு அனைவோரும்போகவென்று
தருமர்செலவினால் தானடந்தார்மாளிகைக்கு

பாண்டியரும் அல்லியரும் விடைபெற்று மதுரைக்கு வந்தது

ஆறாயிரவர் ஐயன்மார்தாங்கள்முதல்
முடிசிவிகையிலே மெல்லியரைவைத்துக்கொண்டு
காலாளுஞ்சேனைகளுங் கடுகிப்பயணமானார்
தருமர்செலவினால் சந்தோஷமாயெழுந்து
யானைகளுஞ்சேனைகளு மாயவர்களுமாக
மேளமுழங்கிவர முடிமன்னர்போகிறார்கள்
மதுராபுரிபட்டணத்தில் வந்தார்களெல்லாரும்
நான்குதெருக்கோலமாய்வந்து நாயகிபோய்ச்சேர்ந்தார்கள்

மண்டபத்துக்குள்ளாக வந்தமர்ந்தாரெல்லாரும்
அபயோதல்லியருமரசுக்குரித்தானாள்

அல்லியரசாணி-பாலனைப்பெற்றது

ஓராந்தான்மாதமது ஒருதிங்கட்கிழமையிலே
இரண்டாந்தான்மாதமது இரண்டுதிங்கள் ஆச்சு
மூன்றாந்தான்மாதமது முதலுகொக்கைமுகங்கருத்து
நாலாந்தான்மாதத்திலே நல்மசக்கையானாளே
ஐந்தாந்தான்மாதத்திலே அடிவயறுகனத்திடுமாம்
ஆறாந்தான்மாதத்திலே யங்கமெல்லாங்கங்கிறம்
ஏழாந்தான்மாதத்திலே இசைக்கஸ்ரீமந்தஞ்செய்தார்
எட்டாந்தான்மாதத்திலே இளைப்புமதவிப்பாள்
ஒன்பதாந்தான்மாதத்திலே உடம்பெங்குநோகுதென்றாள்
பத்தாமாதத்திலே பாலகனைப்பெற்றெடுத்தாள்
பபுபரவாகனென்று பாண்டியர்கள்பெயருமிட்டார்
மாணிக்கத்தொட்டியிலே வளருகிறானிந்திரனும்
இந்தக்கதைதன்னை யின்பமாய்ப்பாவைகளும்
விந்தையாயிக்கதையை விரும்பியபூவைகளும்
அன்புமிகக்கொண் டல்லிக்கதைபடிக்க
இன்பமிகத்தீர்ந்து துரிதமுடன்படிக்க
கோதையர்தான்வாங்கி கொள்ளமனங்களிக்க
பேதைமார்தானேங்கிப் பெருங்களிப்பிலதான்குளிக்க
சொக்கநாயகர்படிக்கச் சுத்தமாயிக்கதையை
அக்கரையாகவே யனைவோரும்படிப்பதற்கு
இக்கதையையாவர்களு மிசைந்துமேகேட்டவர்கள்
சொர்க்கபதிபதனைச் சேர்வார்கள்வையகத்தில்
அருமையாய்க்கேட்டவர்களனைவோருந்தான்வாழி
பெருமையாய்க்கேட்டவர்கள் பெரியோர்கள்தான்வாழி
பாருலகிலல்லிகதை படிப்பவர்கள்தான்வாழி
சிறுவருமெல்லிகதை சிந்திப்போர்தான்வாழி
ஆவலாய்க்கேட்பவர்க ளன்புடன்தான்வாழி
மேலவரும்மூவரும் யாவருந்தான்வாழி
ஆதிசிவனருளால் அனைவோருந்தான்வாழி
நீதிமிகச்செலுத்தும் நெறிமன்னர்தான்வாழி
மாயனருளாலே மண்டலங்கள்தான்வாழி
காப்பங்களுள்ளளவும் களிப்புடன்தான்வாழி

சொக்கர் அருளாலே சுகமாகத்தான்வாழி
இக்கட்டுவாராமல் இருந்துமிகவாழி
அங்கயற்கண்ணம்மை யருளாலேதான்வாழி
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரோடி
பால்போல்மிகப்பொங்கிப் பாருலகம்தான்வாழி
மூங்கில்போல்சுற்றம் முசியாமல்தான்வாழி
திங்கள்மும்மாரிகள் செழித்துமிகவாழி
வாழி பூழிசோறு முலகங்கள்தான்வாழி
வாழி வாழியென்று வரமளித்தாரீஸ்வரனார்

வாழி விருத்தம்.

மாதவத்தோர்கள்வாழ்க மற்றுள்ளதேவர்வாழ்க
வேதரும்வாழ்கவீர சைவத்தோர்தாமும்வாழ்க
ஆதுலர்முனிவர்வாழ்க அருந்தவரிஷிகள்வாழ்க
பூதலம்வாழ்கப்பூமி புவியுள்ளோர்வாழ்கத்தானே.

அல்லியரசாணிமாலை-முற்றுப்பெற்றது.

மங்களம்-ஜெயமங்களம்-நித்தியசுபமங்களம்

பூமிபரிபாலனுக்கும்	புகழ்வடிவேலனுக்கும்
சேமமிகுசீலனுக்கும்	செய்யவனுகூலனுக்கு(ஜெ)
வில்லழகர்பாண்டவற்கும்	விண்ணவர்களாண்டவற்கும்
கொல்லழலினைமீண்டவற்கும்	குய்யமுகத்தாண்டவற்கு(ஜெ)
கற்புநிலைவிழியாட்கும்	கனியனையமொழியாட்கும்
பொற்புறுசுழியாட்கும்	பொருகயலிற்விழியாட்கும(ஜெ)
மன்னராபுரம்நேசனுக்கும்	வளங்கொண்மகாராஜனுக்கும
பன்னரியநேசனுக்கும்	பகதிவிசுவாசனுக்கும்(ஜெ)
பாருலகில்வல்லியற்கும்	வன்னமொழிமெல்லியற்கும
சீரிலகும்வல்லியற்கும்	செருக்களவில்லியர்க்கும்(ஜெ)
பாண்டியர்கள்யாவருக்கும்	பரிமளசீலனுக்கும்
ஆண்டி[illegible]னுக்கும்தேவருக்கும	அவரடியார்[illegible]லருக்கும்(ஜெ)

மங்களம்-முற்றிற்று.

—()—

1936 **DECEMBER** 1936

Sun	Mon	Tue	Wed	Thu	Fri	Sat
		1	2	3	4	5
6	7	8	9	10	11	12
13	14	15	16	17	18	19
20	21	22	23	24	25	26
27	28	29	30	31		